Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

ரா
ம்
கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C) ராம்கோ சீமெந்து
(C/1049)

முரசு – 02 திருவள்ளுவர் ஆண்டு 2042 கார்த்திகை 07 புதன்கிழமை (23.11.2011) பக்கங்கள் 16 ஓசை – 53


மற்றொரு சந்தர்ப்பத்திற்கு
06


பிரயோசனம் இல்லை
12


தகுதிக்கேற்ப வேண்டும் ஆசை
10


கண்களால் பிரச்சினை
13

# சர்வதேச விசாரணை அவசியமற்றது ஆணைக்குழு அறிக்கையில் பரிந்துரை

(கொழும்பு)

இறுதிக்கட்ட போரின்போது மேற்கொள ளப்பட்டதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர பில் சர்வதேச விசாரணை மேற்கொள்ளப் படவேண்டிய அவசியமில்லையென நல் லிணக்க ஆணைக்குழு தனது அறிக்கை யில் தெரிவித்துள்ளது.

ஆணைக்குழுவின் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பொதுமக்களை மனிதக் கேடயமாக தீவிரவாதிகள் பயன்படுத்திக் கொண்டிருந்த தருணத்தில் படை நகர்வுகளை நிறுத்துமாறு எந்தவொரு நாடும் கோரிக்கை விடுக்கக்கூடாது இவ்வாறு தீவிரவாதிகளுக்கு எதிரான போரை இடையில் நிறுத்துவதன் மூலம் அவர்கள் மேலும் வலுவடையக கூடிய ஆபத்து காணப்பட்டது.

பொதுமக்களை இலக்குவைத்து வேண்டும் என்றே மேற்கொள்ளப்படுகின்ற தாக்குதல்களை சர்வதேச மனிதாபிமான சட்டங்கள் ஏற்றுக் கொள்ளாதபோதிலும், பணயக் கைதிகளாக வைக்கப்பட்டிருந்த பொதுமக்களை மீட்கின்ற போர் நடவடிக்கையின்போது அதனை கடைபிடிக்க முடியாது.

தீவிரவாதிகளுக்கு எதிரான படை நடவடிக்கைகளை நிறுத்துவது அல்லது தற்காலிகமாக இடைநிறுத்துவது என்பது பிரச்சினைகளை (15 ஆம் பக்கம் பார்க்க)

## சம்பள அதிகரிப்பல்ல மேலதிகப்படியே

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் நேற்று முன்தினம் வரவுசெலவுத் திட்ட அறிக்கையில் அறிவிக்கப்பட்ட அரச பணியாளர்களுக்கான 10 வீத சம்பள அதிகரிப்பு, வெறும் மேலதிகப்படியே என்றும் அது சம்பள உயர்வு அல்ல என்றும் சிரேஷ்ட அமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துநெத்தி எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளித்த போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

வரவுசெலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்ட 10 வீத சம்பள அதிகரிப்பு, அடிப்படைச் சம்பளத்துடன் சேர்க்கப்படாது. அது சம்பளத்துடன் மேலதிகப் படியாகவே வழங்கப்படும் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

## குழப்பங்களை விளைவிக்காத கூட்டமைப்பிற்கு ஜனாதிபதி நன்றி



அடுத்த ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தை நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் சமர்ப்பித்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகளை எவ்விதமான குழப்பங்களையும் விளைவிக்காது கேட்டுக்கொண்டிருந்தமைக்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு நன்றி தெரிவித்தார். வரவு செலவுத்திட்டத்தை ஜனாதிபதி சமர்ப்பித்ததன் பின்னர் எம்.பி.க்களுக்கான உணவகத்தில் நிதியமைச்சினால் வழங்கப்பட்ட தேநீர் விருந்துபசாரத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் பங்குபற்றினர்.

அப்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எம்.பி.யுமான இரா.சம்பந்தன் ஜனாதிபதியுடன் கலந்துரையாடியதுடன் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ மற்றும் அமைச்சர்களான திஸ்ஸ விதாரண, ரவூப ஹக்கீம் ஆகியோருடன் கலந்து (15 ஆம் பக்கம் பார்க்க)

## மாணவரின் விழிப்புணர்வுப் பேரணியை மாவீரர் ஊர்வலமாக கருதிய இராணுவம்

(கனகராயன்குளம்)

உலக கை கழுவுதல் தினத்தை முன்னிட்டு நேற்றுக்காலை கனகராயன்குளப் பகுதியில் இடம்பெற்ற விழிப்புணர்வு ஊர்வலத்தை, மாவீரர் நாள் ஊர்வலமென இராணுவம் கருதியதால் அப்பகுதியில் சிறிது நேரம் பரபரப்பான நிலை உருவானது. இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

வவுனியா வடக்குக் கல்வி வலயத்தின் ஏற்பாட்டில் "யுனிசெப்" நிறுவனத்தின் நிதி அனுசரணையுடன் கனகராயன்குள மகாவித்தியாலய மாணவர்கள் உலக கை கழுவுதல் (15 ஆம் பக்கம் பார்க்க)

## நிரந்தர முகாம், இராணுவக் குடியிருப்புக்களை வட, கிழக்கில் அமைக்க நிதி ஒதுக்கீடு

### பாதுகாப்புச் செயலர் திருப்தி

(கொழும்பு)

கடந்த 30 வருட யுத்தத்திற்கு பின்னர் வடக்கு, கிழக்கில் படையினரை நிரந்தரமாக நிலைநிறுத்து வதற்காக நிரந்தர முகாம், மற றும் இராணுவக் குடியிருப்புக்களை அமைப்பதற்கு முன்மொழியப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளமையானது வரவேற்கப்படவேண்டிய ஒரு விடயம் என பாதுகாப்புச் செயலர் கோத்தாபய ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.

2012 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்டம் நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் குறித்த வரவு செலவுத்திட்டம் குறித்து ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

2012 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்டம் குறித்து பாதுகாப்புச் (15 ஆம் பக்கம் பார்க்க)

## மீள்குடியேறிய மக்களுக்கான மின்சாரம் ஒரு வருடம் இலவசமாக வழங்கப்படும்

மீள்குடியேறிய மக்களுக்கான மின் விநியோகம் அறிவிக்கப்பட்டபடி ஒரு வருடத்திற்கு இலவசமாக வழங்கப்படுமென மின்சக்தி அமைச்சர் சம்பிக்கரணவக்க உறுதியளித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற நிபுணத்துவ ஆலோசனைக் குழுக்கூட்டத்தில் வன்னிப பகுதி மின் விநியோகத்தில் ஏற்பட்டுவரும் காலதாமதம் குறித்து நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதி தலைவருமான மு. சந்திரகுமார் சுட்டிக் காட்டிய போதே அமைச்சர் குறித்த விடையத்தில் நடவடிக்கைகளை மேற்கொள்வதாக உறுதியளித்தார்.

இதன் போது வன்னிப்பகுதியில் மீள்குடியேறிய மக்கள் மீணடும் தம்மை நிலைப்படுத்திக் கொள்ள மின்சாரம் மிக அவசியம என குறிப்பிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார், வடக்கின் வசந்தம், திட்டத்தின் மூலம் அமுல்படுத்தப்பட்டுவரும் மின் விநியோக திட்டத்தின் மூலம் வன்னியில் பல பகுதிகளுக்கு மின் விநியோகம் நடைபெற்று வருகின்றபோதும இன்னமும் பல பகுதிகளுக்கு (15 ஆம் பக்கம் பார்க்க)

## வளலாய், இடைக்காடு பகுதியில் எதிர்வரும் 29 இல் மீள்குடியமர்வு

கோப்பாய் பிரதேச செயலகத்திற்குட்பட்ட வளலாய், இடைக்காடு பகுதிகளில எதிர்வரும் 29 ஆம் திகதி காலை 10.30 மணியளவில மக்கள் மீள்குடியமர்த்தப்படவுள்ளனர். 127 குடும்பங்கள் வளலாய் கிராம சேவையாளர் பிரிவிலும், 262 குடும்பங்கள் இடைக்குறிச்சி கிராம சேவையாளர் பிரிவிலும் மீள் குடியமர்த்தப்படவுள்ளனர்.

மீள்குடியமர்த்தப்படவுள்ள குடும்பங்களுக்கான அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்குமாறு அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களிடம் அரச அதிபர் இமெல்டா சுகுமார் கேட்டுக்கொண்டுள்ளார். மீள்குடியமர்த்தப்படவுள்ள இரண்டு கிராம சேவையாளர் பிரிவிலும் 389 குடும்பங்களைச் சேர்ந்த (15 ஆம் பக்கம் பார்க்க)

## முல்லையில் மீள்குடியேறுவதற்கு பதிவினை மேற்கொள்ள அறிவுறுத்து

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று மற்றும் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்திற்குட்பட்ட மக்கள் மீள்குடியேறுவதற்காக தம்மை பதிவு செய்துகொள்ளுமாறு அந்த மாவட்டத்தின் அரசாங்க அதிபர் என்.வேதநாயகம் தெரிவித்துள்ளார். இடம்பெயர்ந்த நிலையில் நண்பர்கள் மற்றும் உறவினர்கள் வீடுகளில் வசித்துவரும் மக்கள் மீள்குடியேறுவதற்கான பதிவை மேற்கொள்ளவேண்டும். கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்துக்கு (15 ஆம் பக்கம் பார்க்க)

## முழுமையான விசாரணை

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் ஏற்பட்ட அமைதியின்மை தொடர்பில் முழுமையான விசாரணை இடம்பெறும் என சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் ஏற்பட்ட நிலைமை தொடர்பில் வெளியிட்ட கருத்திற்குப் பதிலளிக்கும் போதே சபாநாயகர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு சபையினுள் பாதுகாப்பு உள்ளதா என எதிர்கட்சித் தலைவர் கேள்வி எழுப்பியுள்ளார். ஐக்கிய தேசியக் கட்சியின் மேலும் சில உறுப்பினர்களும் நேற்று முன்தினம் ஏற்பட்ட அமைதியின்மை தொடர்பில் (15 ஆம் பக்கம் பார்க்க)

# யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை

## வழங்குநர்களையும் ஒப்பந்தக்காரர்களையும் பதிவு செய்தல் - 2012

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு கீழ்க் குறிப்பிடப்பட்டிருக்கும் பொருட்கள், சேவைகளை வழங்குவதற்கு விருப்பமுடைய வழங்குநர்கள் / ஒப்பந்தக்காரர்கள், அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள் என்பனவற்றிடமிருந்து 2012 ஆம் ஆண்டிற்கு பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இதற்கான விண்ணப்பப் படிவங்களை கீழ்வரும் மாதிரி விண்ணப்பப் படிவத்தைத் தயாரித்து ஒவ்வொரு இலக்கத்துக்குமான வழங்கல்கள் / சேவைகள் ஒவ்வொன்றிற்கும் தனித்தனியாக ரூபா 100/- ஐ எமது அலுவலகத்தில் செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப் படிவத்துடன் இணைத்து தபாலுறையில் இட்டு அதன் இடதுபக்க மேல் மூலையில் “வழங்கல்கள் / சேவைகள் பதிவுசெய்தல் - 2012” எனக் குறிப்பிட்டு பணிப்பாளர், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு 15.12.2011 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபால் மூலம் அல்லது நேரடியாக அலுவலகத்தில் கையளிக்கலாம்.

தொகுதிகள் :

தொகுதி “A” - பொருட்கள் வழங்குதல் (பொது)
தொகுதி “B” - பொருட்கள் வழங்குதல் (மருத்துவம்)
தொகுதி “C” - சேவைகள்
தொகுதி “D” - வாகனத்திருத்தமும், சேவிஸ் செய்தலும்

| தொகுதி இல | பொருட்கள் விபரம் (பொது) |
|---|---|
| A - 01 | காகிதாதிகள், எழுது பொருட்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய பொருட்கள் |
| A - 02 | தளபாடங்களும், அலுவலக உபகரணங்களும் (மரம்/உருக்கு) |
| A - 03 | கணினிகள், கணினியுடன் தொடர்புடைய ஏனைய உபகரணங்கள், றோனியோ இயந்திரம், தொலைநகல் இயந்திரம் இவற்றுடன் தொடர்புடைய ரோனர்கள், றிபன்கள் மற்றும் ஏனைய அலுவலக மின் உபகரணங்கள் |
| A - 04 | யன்னல் திரைச்சீலைகள், சீருடைகள் மற்றும் துணி வகைகள் |
| A - 05 | குளியலறைப் பொருத்திகள், மாபிள்க் கல் வகைள், நீர்க்குழாய்ப் பைப்புகள், பைப் இணைப்புக்கள் மற்றும் அதனோடிணைந்த பொருட்கள் |
| A - 06 | சகலவிதமான அலுமினிய வீட்டுப் பாவனைப் பொருட்கள் |
| A - 07 | தும்பு மெத்தை, இறப்பர் மெத்தை, மெக்கின்ரோஸ், எலாஸ்டிக், நைலோன் நூல் |
| A - 08 | கட்டட, இரும்புப் பொருட்கள், பெயின்ற், வாணிஸ் மற்றும் சகல ஹாட்வெயர் பொருட்கள், மணல், கல், தீராந்தி, சலாகை உட்பட |
| A - 09 | மின்சாரப் பொருட்கள், அதன் உதிரிப்பாகங்கள், மின் மோட்டர்கள், மின்சார பல்புக்கள், மின் விசிறிகள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய பொருட்களும் |
| A - 10 | புற்பாய், தும்புத்தடி, விளக்குமாறு, கால் துடைப்பம், மொப்பர் மற்றும் ஏனையவை |
| A - 11 | ஊத்தைச் சோடா, அழுக்கு நீக்கும் பவுடர்கள், விம், ஹார்பிக், சேவிங் பிளேட் மற்றும் ஏனையவை |
| A - 12 | மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள் டயர், டியூப் மற்றும் பற்றறிகள் |
| A - 13 | தோல் உற்பத்திப் பொருட்கள் - சப்பாத்துக்கள், சிலிப்பர்கள் |
| A - 14 | குளிர்சாதனப் பெட்டிகள், காற்றுக் குளிராக்கிகள் மற்றும் அதன் உதிரிப்பாகங்களும் |
| A - 15 | சகல வகையான ரெக்சீன் துணிகள், பொலித்தீன் |
| A - 16 | இறப்பர் முத்திரை வகைள் |
| A - 17 | பால்மா வகைகள் மற்றும் ஊட்டச்சத்து பானங்கள் |

| தொகுதி இல | பொருட்கள் விபரம் (மருத்துவம்) |
|---|---|
| B - 01 | Surgical Instruments |
| B - 02 | Labratory consumables. |
| B - 03 | Laboratory equipment |
| B - 04 | Surgical / medical / equipments. |

| தொகுதி இல | சேவைகள் விபரம் |
|---|---|
| C - 01 | உருக்கு, மரத்தளபாடங்கள் திருத்தம் செய்தல் |
| C - 02 | மின் உபகரணங்கள் திருத்தம் செய்தல் (காற்றுக் குளிராக்கி, குளிர்சாதனப் பெட்டி, ரோனியோ இயந்திரம், கணினியும் அதனோடிணைந்த உபகரணங்களும், ஏனையவையும்) |
| C - 03 | மின் மோட்டர்கள், நீர் இறைக்கும் இயந்திரங்கள், மின் விசிறிகள், ஜெனரேட்டர்கள் திருத்துதலும் மீள முறுக்குதலும் (Rewinding) |
| C - 04 | பதிப்பக வேலை (printing)- சகலவித படிவங்கள், ஏனையவை |
| C - 05 | வைத்தியசாலை அலுவலர்களுக்கு பிளாஸ்டிக் அடையாள அட்டை வழங்குதல் |
| C - 06 | கட்டடத் திருத்த வேலை |

| தொகுதி இல | சேவைகள் விபரம் (வாகனத்திருத்தமும் சேவிஸ் செய்தலும்) |
|---|---|
| D - 01 | சகலவிதமான வாகனத் திருத்தம், மின்சார வேலை, வாகன உட்பக்கம், சீற் என்பனவற்றுக்கு குசன் வேலை |
| D - 02 | சகலவிதமான வாகனமும் சுத்திகரிப்பு (Service). |

நிபந்தனைகள் :

01. வழங்கல்கள் / சேவைகள் 2012 ஆண்டிற்கு மட்டும் செல்லுபடியானதாகும்.
02. திருப்திகரமற்ற வழங்கல்கள் / சேவைகளை நிராகரிக்கும் உரிமை பணிபபாளருக்கு உண்டு.
03. பணிடப்பாளர் வெளி மூலங்களிலிருந்தும் கேள்வி கோரும் உரிமையைக் கொண்டுள்ளார்.
04. பதிவுக்காகப் பெறப்பட்ட விண்ணப்பங்களை எதுவித காரணங்களும் தெரிவிக்காமல் நிராகரிக்கும் உரிமை பணிப்பாளருக்கு உண்டு.
05. மேலதிக விபரங்கள் பெற விரும்பின் பணிப்பாளர், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம் தொலைபேசி இலக்கம் 021 222 2261 உடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

வைத்திய கலாநிதி. திருமதி.ப.பசுபதிராஜா,
பணிப்பாளர்,
போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

மாதிரி விண்ணப்பப்படிவம்

| | |
|---|---|
| Cash Recipt No. | |
| Date | |
| Amount | |

**வழங்குநர்களையும் ஒப்பந்தக்காரர்களையும் பதிவு செய்தல் - 2012**
**போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்**

1. நிறுவனத்தின் பெயர் :..............................
2. நிறுவனத்தின் முகவரி :..............................
3. தொலைபேசி இலக்கம் :..............................
4. தொலைநகல் இலக்கம் :..............................
5. வியாபாரப் பதிவு இலக்கம் :..............................
6. வியாபாரத்தின் தன்மை :..............................

| தொகுதி இலக்கம் | வழங்கல் / சேவை விபரம் |
|---|---|
| | |

1. வற் பதிவு இலக்கம் :..............................
2. மின்னஞ்சல் முகவரி :..............................

என்னால் / எங்களால் தெரிவிக்கப்பட்ட விபரங்கள் சரியானது எனவும் யாழ்ப்பாணம போதனா வைத்தியசாலைப் பணிப்பாளரினால் குறிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக பொருட்கள் / சேவைகள் வழங்குவதற்கு உறுதியளிக்கின்றேன் / உறுதியளிக்கின்றோம். ரூபா 100/-க்குரிய பற்றுச்சீட்டு இத்துடன் இணைத்துள்ளேன் / இணைத்துள்ளோம்.

..............................
விண்ணப்பதாரியின் ஒப்பம்.

விண்ணப்பதாரியின் பெயர் :..............................
திகதி :..............................

(C/1094)

# யாழ். மாநகரசபை

## கந்தப்பசேகரம் வீதி அகலிப்பு

06.11.2011 ஆம் திகதி கந்தப்பசேகரம் வீதி அகலிப்பு சம்பந்தமாக நடைபெற்ற கலந்துரையாடலின் போது பின்வரும் தீர்மானம் எடுக்கப்பட்டது.

கந்தப்பசேகரம் வீதியின் வடக்குப் பக்கமாக வீதியின் மத்தியிலிருந்து 20 அடிக்கு அகலிப்பதெனவும் வீதியின் மத்தியிலிருந்து 20 அடிக்கு அப்பால் மதிலையும் புதிய கால் வாயையும் அமைப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

இத்தீர்மானம் பற்றி ஆட்சேபனை ஏதும் இருப்பின் அதனை இவ் விளம்பரம் பிரசுரமான பதினைந்து நாட்களுக்குள் யாழ்ப்பாணம் மாநகரசபைக்கு எழுத்து மூலம் அறியத்தரவும்.

திருமதி. யோ.பற்குணராசா,
முதல்வர்,
மாநகரசபை,
யாழ்ப்பாணம்.
22.11.2011.

(C/1095)

## சிறு விளம்பரம்

### கணினி திருத்தம்

உங்கள் கணினிகள் பழுதடைந்து விட்டனவா? உடனடியாக உங்களது வீடுகளுக்கே வந்து உரிய முறையில் திருத்தித் தருகிறோம். அழையுங்கள் :
0771329513 Computer Repair (R/103)

## வாழ்க வளமுடன்

### தினமுரசின் பிறந்த நாள் வாழ்த்துக்கள்

ஆறாவது அகவையில்

பெயர்: கதாகரன் அகாஸ்,
முகவரி: சங்குவேலி,
மானிப்பாய்.






பல்லாண்டு காலம்
வாழ்கவென வாழ்த்துகின்றோம்

## இன்று கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபையால் நடாத்தப்படும் ஜே/106 கிராம சேவையாளர் பிரிவின் மக்கள் பங்கேற்புடனான கிராம அபிவிருத்தி திட்டமிடல் கூட்டம் இன்று பிற்பகல் 3.00 மணிக்கு நல்லூர் தமிழ் பெண்கள் பாடசாலையில் (மங்கையற்கரசி பாடசாலை) நடைபெறவுள்ளது. எனவே இக்கூட்டத்தில் பங்குபற்றி கிராம அபிவிருத்திக்கான ஆலோசனைகளை வழங்குமாறு அப்பிரிவு மக்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருக்கிறது.

## கூட்டம் ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபையின் பதினோராவது மாதாந்தப் பொதுக்கூட்டம் நாளை 24 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு நடைபெறுமென ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும், முதல்வர் சபை அலுவல் காரணமாகக் கொழும்பு செல்வதால் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மலர்கொண்டு மாலை தொடுத்தலிலே கைத்திறன் முழுவதும் காட்டி காகிதப்பூமாலை தொடுத்தால் பயன்என்ன? மாலைக்குழுதற்பொருள் மணமுள்ளமலர், அது போல பேச்சிற்கு முதற்பொருள் சுவையும், பயனுமுள்ள நல்லகருத்துக்கள். - அறிஞர் அண்ணா-

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com
thinamurasupaper@hotmail.com

## சக்தி இல்லையேல் எதுவுமில்லை!

வரவு செலவுத் திட்டம் பற்றி ஒன்றுக்கொன்று முரணான பல்வேறு கருத்துக்கள் வந்தவண்ணமிருக்கின்றன. உடன்பிரதிபலிப்புக்கள் அனைத்தும் அவரவர் அரசியல் சார்ந்தும் கட்சி சார்ந்தும் சொல்லப்படுபவையாக இருக்கின்றன. பாராளுமன்றத்தின் எதிர்க்கட்சி அங்கு நடந்த மோதலின் முடிவில் வெளிநடப்புச் செய்திருக்கிறது. பட்ஜட் குறித்த பொருளாதார வல்லுனர்களின் அலசல்களை நாம் போகப் போக அறியலாம்.

சம்பள அதிகரிப்பு, ஓய்வூதிய அதிகரிப்பு, பொலிஸாருக்கும் மூன்றாவது பிரசவத்திற்கான கொடுப்பனவு, ஊடகவியலாளர்களுக்கு கடன், சமுர்த்திக் கொடுப்பனவு உயர்வு, பாதுகாப்புக்கு 230 பில்லியன் என பல்வேறு செலவுத்தானங்களோடு மின்சாரத்திற்கும் 34,187 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. அடுத்த வருடத்தில் மேலும் எட்டு இலட்சம் குடும்பங்களுக்கு மின்சாரம் வழங்கப்படும் எனச் சொல்லப்பட்டிருக்கிறது.

மனிதர்கள் நம் வாழ்க்கைக்கு அத்தியாவசியமான சக்தி இன்று மின்சாரத்தில்தான் பெருமளவு தங்கியுள்ளது. அந்த சக்தி இல்லையேல் நாம் முள்ளந்தண்டு உருவி விடப்பட்டவர்கள் போல் சோர்ந்துவிடுவோம் என்பதில் சந்தேகமில்லை. மனிதகுலம் எதிர்நோக்கும் பிரச்சினைகளிலேயே மிக முக்கியமானது மின் சக்தியில் தன்னிறைவு பெறுவது எப்படி என்பதுதான்.

உற்பத்தி பெருகாமல் அனைவரின் தேவைகளும் நிறைவு பெறாது. பொது உடைமையும் மலராது. உற்பத்தி பெருக மின்சக்தி அவசியம். இதை வலியுறுத்துவதற்காக ரஷயப் புரட்சியாளர் லெனின கம்யூனிஸம் என்பதற்கான விளக்கத்தை மிக எளிமையாக இப்படிச் சொன்னார். "சோவியத் ஆட்சி அதிகாரம் மின்மயமாக்கல் கம்யூனிஸம்."

மின்சாரம் இன்றி எந்த நாடும் முன்னேற முடியாது. மக்களின் வாழ்க்கைத்தரம் உயராது. சமூகத்தின் இரத்த ஓட்டம் அதுதான். இருப்பினும், இலங்கை உட்பட ஏராளமான உலக நாடுகள் மின் பற்றாக்குறையால் சிரமப்படுகின்றன.

ஒவ்வொரு மனிதனுக்கும் குறைந்தபட்ச வாழ்க்கைத் தரத்தைப் பேணிட ஆண்டுக்கு 500 கிலோ வாட் மின்சாரம் தேவை எனக் கணிப பிடப்பட்டிருக்கிறது. எனவேதான், ஒவ்வொரு நாடும் தங்களது நாட்டின் இயற்கைச் சூழல், மின்சாரம் தயாரிக்கத் தேவையான ஆற்றல், வளம், பூகோள நிலைமை, மக்கள்தொகை, மின்தேவை போன்றவற்றைக் கணக்கில்கொண்டு பல முறைகளில் மின் உற்பத்தி செய்து வருகின்றன.

நிலக்கரி, எண்ணெய், இயற்கை எரிவாயு, பயோமாஸ் போன்றவற்றைப் பயன்படுத்தி அனல்மின் நிலையங்களை உருவாக்கியுள்ளன. இதைத்தவிர நீர், காற்று, சூரிய ஆற்றல், கடல் அலை ஆற்றல் போன்ற புதுப்பிக்கத்தக்க ஆற்றல்களைப் பயன்படுத்தியும் மின் உற்பத்தி செய்யப்படுகிறது.

நமது நாட்டில் நீர்வீழ்ச்சி மூலமே இதுகாலவரை மின்சாரம் பெறப்பட்டு வந்தது. அதிகரித்த தேவைக்கேற்ப அனல்மின் நிலையங்களும் தற்போது அமைக்கப்பட்டு வருகின்றன. பெருமளவு மின்சாரத் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு பல நாடுகள் அணு உலைகளைப் பயன்படுத்தி வருகின்றன.

சமீபத்தில் ஜப்பானில் புகுஷிமா அணு உலைகளில் ஏற்பட்ட விபத்துக்குப் பிறகு உலகம் முழுவதும் அணு மின் நிலையங்களின் பாதுகாப்புப் பற்றிய அச்சத்தை மக்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ளது. அனல்மின் நிலையங்களும் கூட சுற்றுச் சூழலுக்குக் கேடானவையே.

நீர்வீழ்ச்சி போதாவிடின், காற்றாலை, கடல் அலை போன்றவையும் மின் உற்பத்திக்குக் கைகொடுக்கும் என்றாலும் இவையும் போதாது. இந்நிலையில் நமக்கு நம்பிக்கை தருவது சூரிய ஆற்றல் தான். ஆனால், அதைப் பயன்படுத்தி தொடர்ச்சியான, தரமான மின்சாரம் பெறுவதில் இப்போதைக்குச் சிக்கல்கள் உள்ளன.

அளப்பரிய சூரிய ஆற்றல் நம் போன்ற நாடுகளுக்குக் கிடைத்த இயற்கையின் கொடையாகும். சராசரியாக ஆண்டுக்கு 300 நாட்கள் சூரிய ஒளி நமக்குக் கிடைக்கிறது. சூரிய ஆற்றல் மூலமான மின் உற்பத்தி சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு ஏற்படுத்தாத தூய்மையான ஆற்றலாகும். பசுமைக் குடில் வாயுக்களையும் வெளியேற்றுவதில்லை.

தீங்கற்ற சூரிய சக்தி, காற்றாலை, கடல் அலை ஆற்றல் உள்ளிட்ட புதுப்பிக்கத்தக்க ஆற்றல் வாயில்கள் மூலமான மின் உற்பத்திக்கே நாம் பெரிதும் முனையவேண்டும். தொலைநோக்குப் பார்வையோடு ஆபத்தான மின் உற்பத்தி மூலங்களைத் தவிர்க்க வேண்டும்.

– ஆசிரியர் –

# ஆணைக்குழு அறிக்கையை பகிரங்கப்படுத்த பிரித்தானிய அரசாங்கம் கோருகிறது

(கொழும்பு)

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை பகிரங்கப்படுத்துமாறு இலங்கை அரசிடம் பிரித்தானிய அரசாங்கம் கேட்டுக் கொண்டுள்ளது.

இதுதொடர்பாக பிரித்தானிய வெளிவிவகார மற்றும் கொமன்வெல்த் விவகார பணியக அமைச்சர், அலிஸ்ரெயர் பேர்ட் நேற்று முனதினம் லண்டனில் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

மோதல்களிலிருந்து இலங்கை மீள்வதற்கு இந்த அறிக்கை ஒரு முக்கியமான மைல் கல்லாக அமையும் என்று பலரும் நம்புகின்றனர். தேசிய நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறும் கடப்பாட்டை நிரூபிப்பதற்கான இந்த வாய்ப்பை இலங்கை அரசாங்கம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அறிக்கையை விரைவாக பகிரங்கப்படுத்துவது இந்த உறுதிப்பாட்டின் முக்கியமான அம்சமாகும். இந்த அறிக்கையின் அடிப்படையில் இலங்கை அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்று எதிர்பார்ப்பதாகவும், பிரித்தானிய அமைச்சர் அலிஸ்ரெயர் பேர்ட் மேலும் கூறியுள்ளார். இதே வேளை கொழும்புப் பத்திரிகைகளில் அறிக்கையில் உள்ள சில விடயங்கள் வெளிவந்துள்ளன.

# வரட்டு கௌரவ அரசியலை கூட்டமைப்பு கைவிட வேண்டும்

(கொழும்பு)

கடந்த காலங்களிலே சாத்தியமற்ற விடயங்களைப்பற்றி பேசிப்பேசி வந்த தமிழ் தேசிய கூட்டமைப்பினர் தற்போதுதான் அதாவது 13 ஆம் சுற்று பேச்சின் போதுதான் மாகாணசபை முறைமை, அதிகாரங்கள் பற்றி பேசுகின்றார்களாம். இதை அப்போதே ஏற்றுக்கொண்டு செயற்பட்டிருந்தால் எவ்வளவு முன்னேற்றம் கண்டிருக்கலாம். ஆனால் இவை எல்லாவற்றிக்கும் முக்கியமான காரணம் தமிழ் தேசிய கூட்டமைப்பினரின் வரட்டு கௌரவத்துடன் கூடிய வங்குரோத்துடனான அரசியல் நிலையே ஆகும்.

இந்தப் பாணியை இவர்கள் என்று கைவிடுகின்றார்களோ? அன்றுதான் எமது சமூகம் வளர்ச்சி பெறும் என கிழக்கு மாகாண முதலமைச்சரும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கடசியின் தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு இந்துக்கல்லூரியின் 2010 ஆம் ஆண்டுக்கான வருடாந்த பரிசளிப்பு விழாவில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



மேலும் அங்கு உரையாற்றுகையில், பேச்சு வார்த்தை என்று சொல்லிக் கொண்டு வெளிநாடுகளுக்கு செல்கின்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் வெளிநாட்டு பயணத்தில் தான் எமது மாகாண தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களை புறக்கணிக்கின்றார்கள் என்று பார்த்தால் எமது நாட்டிலே இடம் பெறுகின்ற அரசுடனான பேச்சிலும் கூட இவர்களை புறக்கணிப்பது எந்த வகையில் நியாயமான செயல். அண்மையில் இடம்பெற்ற 13 ஆம் சுற்றுப்பேச்சிலே கிழக்கு மாகாணத்தை சேர்ந்த எந்தவொரு நாடாளுமன்ற உறுப்பினர்களும் இடம்பெறவில்லை. இவ்வாறான செயல் அதாவது கிழக்கு மாகாணத்தை வட மாகாணத்தவர்கள் புறக்கணிக்கின்ற செயல் காலங்காலமாகவே இடம்பெற்று வருகின்றது. இதனை ஏன் கிழக்கு மாகாணத்தை சேர்ந்த தமிழ்த் தேசியக் கூட்டமைபு எம்.பிக்கள் புரிந்துகொள்ளவில்லை எனத் தெரிவித்தார்.

# நகரம் மற்றும் நாடு திட்டமிடல் சட்டமூலத்திற்கு எதிராக வழக்கு

(கொழும்பு)

நகரம் மற்றும் நாடு திட்டமிடல் (திருத்தம்) எனும் சட்டமூலம் மர்காண சபைகளுக்கான அதிகாரத்தின் கீழ் வரும் விடயங்கள் தொடர்பில் சட்டமியற்றுவதாக உள்ளது என உயர் நீதிமன்றதில் தொடுக்கப்பட்டுள்ள வழக்கொன்றில் மனுதாரரால் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தச் சட்டமூலம் அரசியலமைப்புக்கு அமைவாக உள்ளதா என தீர்மானிக்கும்படி உயர்நீதிமன்றத்தை கோரும் இம்மனுவில் மனுதாரரான மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் பாக்கியசோதி சரவணமுத்து சட்டமா அதிபரை பிரதிவாதியாக குறிப்பிட்டுள்ளார்.

இந்த வழக்கு விசாரணை உயர்நீதிமன்றத்தின் முன்னிலையில் நேற்றுமுன்தினம் விசாரணைக்கு வந்தது. மனுதாரர் சார்பில் நிரான் ஆன்க்டெல் மற்றும் ஜெருஷா குரொசெட் தம்பையா ஆகியோருடன் எம்.ஏ.சுமந்திரன் ஆஜரானார்.

நவம்பர் 24 ஆம் திகதிக்கு முன் இரண்டு தரப்பினரும் தமது ஆட்சேபனைகளை தாக்கல் செய்ய வேண்டுமென நீதிமன்றம் பணித்தது. "உட்கட்டுமானம், வேறு தேவைகள் தொடர்பில் அமைச்சர் தேவையென கருதுமிடத்து நிலத்தை பாதுகாக்கப்பட்ட பகுதி, பேணப்படும் பகுதி, தொல்பொருள் -வரலாற்று பகுதி புனிதப் பிரதேசம் என பிரகடனப்படுத்த அமைச்சருக்கு அதிகாரம் வழங்குவதாக உள்ள இந்த சட்டமூலம் அரசியலமைப்பில் பட்டியல் 01 (மாகாண சபைக்குரிய பட்டியல்) இல் குறிப்பிடப்பட்டுள்ள 18 ஆவது விடயத்தில் அமைச்சர் தலையிட அதிகாரம் வழங்குவதாக உள்ளது.

இச்சட்டமூலம் எந்தவொரு மாகாண சபையின் பரிசீலனைக்கும் அனுப்பப்படவில்லை. எனவே இதைச் சட்டமாக்க முடியாது என மனுதாரர் கூறியுள்ளார். எனவே இது அரசியலமைப்புக்கு முரணான சட்டமூலம் என அறிவிக்கும்படி மனுதாரர் உயர் நீதிமன்றத்தை தனது மனுமூலம் கோரியுள்ளார்.

# கஞ்சா கடத்தியவர் கட்டுநாயக்காவில் கைது

(கொழும்பு)

இந்தியாவிலிருந்து இலங்கைக்கு கேரள கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருட்களை கடத்திவந்த இலங்கை பிரஜை ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளளார். விமான நிலைய அதிகாரிகளுக்குக் கிடைத்த தகவலையடுத்து நேற்று முன்தினமிரவு 10.50 மணியளவில் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்த விமானத்தின் பயணிகளை சோதனை செய்தபோது குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட நபரின் பயணப் பொதியை சோதனை செய்தபோது அதிலிருந்து கேரள கஞ்சா ஒரு கிலோ கிராம், புகையிலைத் தூள், ஹான்ஸ் 4 கிலோ 200 கிராம் என்பவை கைப்பற்றப்பட்டுள்ளன.

# குடும்பஸ்தர் படுகாயம்

(கொழும்பு)

காரும் துவிச்சக்கரவண்டியும் மோதிக் கொண்டதில் துவிச்சக்கரவண்டியில் சென்ற குடும்பஸ்தர் படுகாயமடைந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் மாலை 4.00 மணியளவில் முத்திரைச் சந்தியில் இடம் பெற்றது.

நல்லூர் கச்சேரி வீதியைச் சேர்ந்த எம்.பாஸ்கரன் (வயது -41) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

கழுத்து மற்றும் காலில் படுகாயமடைந்த அவர் உடனடியாக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

இச்சம்பவம் தொடர்பில் கார் சாரதி கைது செய்யப்பட்ட நிலையில் காரும் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது.

(எப்.எஸ்)

# வடமராட்சிப் பிரதேச அபிவிருத்தித் திட்டம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நிதி ஒதுக்கீடு

(வடமராட்சி)

இவ்வாண்டு பன்முகப்படுத்தப்பட்ட வரவு, செலவுத் திட்டத்தின் கீழ் வடமராட்சி தெற்கு, மேற்கு கரவெட்டி பிரதேச செயலக அபிவிருத்தித் திட்டங்களுக்கென யாழ். மாவட்டத்தின் எட்டு நாடாளுமன்ற உறுப்பினர்களால் 30 அபிவிருத்தித் திட்டங்களுக்கு 21 இலட்சத்து 28 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதன்படி ஈ.பி.டி.பி. கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் களான பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா 4 திட்டத்திற்கு ஒரு இலட்சத்து 75 ஆயிரம் ரூபாவும் மு. சந்திரகுமார் இரண்டு திட்டத்திற்கு இரண்டு இலட்சத்து 91 ஆயிரம் ரூபாவும், சில்வேஸ்திரி அலென்ரின் ஐந்து திட்டத்திற்கு மூன்று இலட்சம் ரூபாவும் ஒதுக்கீடு செய்துள்ளனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் களான ஈ. சரவணபவன் இரண்டு திட்டத்திற்கு ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவும், மாவை சேனாதிராசா எட்டு திட்டத்திற்கு நான்கு இலட்சத்து 75 ஆயிரம் ரூபாவும், சிவஞானம் ஸ்ரீதரன் இரண்டு திட்டத்திற்கு ஒரு இலட்சத்து 52 ஆயிரம் ரூபாவும், அப்பாத்துரை விநாயகமூர்த்தி ஐந்து திட்டத்திற்கு நான்கு இலட்சத்து 75 ஆயிரம் ரூபாவும், சுரேஸ் பிரேமச்சந்திரன் இரண்டு திட்டத்திற்கு ஒரு இலட்சத்து 10 ஆயிரம் ரூபாவும் ஒதுக்கீடு செய்துள்ளனர்.

இந்நிதி இப்பிரதேசத்தின் கல்விக்காகவும், அபிவிருத்தித திட்டங்களுக்காகவும் பயன்படுத்தப்படவுள்ளதாக கரவெட்டி பிரதேச செயலர் எஸ். சத்தியசீலன் அறிவித்துள்ளார்.(116)



தேசிய மரநடுகை செயற்திட்டத்தின் கீழ் கரவெட்டிப் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற மரநடுகை நிகழ்வில் பிரதேச செயலர் எஸ். சத்தியசீலன் மரம் நாட்டுவதைக் காணலாம். (116)

## சிறப்பாக நடைபெற்ற மாணவர் கௌரவிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி புனித பெண்கள் திரேசா கல்லூரியின் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு நேற்று முன்தினம் காலை 10.30 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

பாடசாலை முதல்வர் திருமதி ஜெயந்தி தனபாலசிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் விருந்தினர்கள் பாடசாலை மாணவர்களால் மாலை அணிவித்து வரவேற்கப் பட்டனர்.

தொடர்ந்து அதிபரின் உரை இடம்பெற்றது.

இதில் 70 புள்ளிகளுக்கு மேற்பட்ட மாணவர்களும் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களும் கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில் கிளிநொச்சி வலய சேவைக் கால ஆசிரிய ஆலோசகர் கே. கணேசன் மற்றும் தங்கேஸ்வரி, சிவசோதி ஆகியோர் கலந்து கொண்டு மாணவர்களைக் கௌரவித்தனர். (உ-கே)

## செஞ்சிலுவைச் சங்கத்தினால் மண்டைதீவில் மருத்துவ சேவை

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவுக் கிராமத்திற்கு கிழமைக்கு ஒரு தரம் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் நடமாடும் மருத்துவ சேவை வழங்கப்பட்டு வருவதாக இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ். கிளை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கிழமையில் வரும் வெள்ளிக் கிழமை தோறும் இந்நடமாடும் மருத்துவ சேவை குறித்த பகுதி மக்களுக்கு வழங்கப்பட்டு வருவதாகவும் அவ் அதிகாரி குறிப்பிட்டார்.

மண்டைதீவுக் கிராமத்திற்கான கிராமிய வைத்தியசாலை கடந்த யுத்த கால சூழ்நிலைகள் காரணமாக அழிவடைந்துள்ளது. இவ் வைத்தியசாலை எதிர்வரும் ஆண்டில் புனரமைப்புச் செய்யப்படவுள்ளதாகவும் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஏற்கனவே தெரிவித்திருக்கின்றார்.

அதுவரைக்கும் இக்கிராம மக்களுக்கு இத்தகைய நடமாடும் வைத்தியசேவை மேற்கொள்ளப்படவுள்ளதாகவும், இந்நடமாடும் சேவைக்கான நிதியுதவி சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், இலங்கைச் செஞ்சிலுவை யாழ். கிளைகளினூடாக வழங்கப்படுவதாக அவர் தெரிவித்தார். (பா)

## மாணவன் சாதனை



(கிளிநொச்சி)

மன்னார் பெரிய குஞ்சுக்குளம் ஆர்.சி.ரி.எம்.எஸ். பாடசாலை மாணவன் செல்வன் மரியான் அனன் கிஷாந் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 159 புள்ளிகளைப் பெற்று மடு வலய மட்டத்தில் முதலிடத்தைப் பெற்றுள்ளான்.

இப்பாடசாலையில் இம்மாணவன் தான் முதன் முதலாக புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து பாடசாலைக்குப் பெருமை தேடித்தந்துள்ளதுடன் சாதனை படைத்துள்ளதாக பாடசாலை சமூகத்தினர் பாராட்டியுள்ளனர். (77)

## கவிதை நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

கவிஞர் பா. அகிலன் எழுதிய சமரகவி கவிதை நூல் வெளியீட்டு விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ். இந்து கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

யாழ். பல்கலைக்கழக நுண்கலைத்துறைத் தலைவர் கலாநிதி கிருஷ்ணவேணி நோபேட் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கவிஞரும், அரசியல் ஆய்வாளருமான ம. நிலாந்தன் கலந்து கொண்டு உரையாற்றினார்.

இதில் கவிஞர்கள், கல்வியாளர்கள், ஆர்வலர்கள் எனப் பலர கலந்து கொண்டனர்.

## அச்சுவேலி ப.நோ.கூ.ச. கிளையில் புதிய தபால் பெட்டி அமைப்பு

(அச்சுவேலி)

அச்சுவேலி தெற்கு, நாவற்காட்டுப்பகுதியில் பொதுமக்கள் நன்மை கருதி அவர்களின் வேண்டுகோளிற்கிணங்க புதிய தபால் பெட்டி ஒன்று பல நோக்கு கூட்டுறவுச் சங்கக் கிளையில் பொருத்தப்பட்டுள்ளது.

இதனால் இக்கிராமத்தைச் சேர்ந்த சுமார் 250 குடும்பங்கள் பயன்பெற்றுள்ளன. இதற்கு முன்னர் இப்பகுதியில் பொருத்தப்பட்டிருந்த தபால் பெட்டி சுமார் ஒன்றரை வருடங்களுக்கு முன்னர் சில விசமிகளால் இரவு வேளையில் உடைத் தெறியப் பட்டது. இந்த நிலையில் மீண்டும் ஓர் தபால் பெட்டியினை அப் பகுதியில் நிறுவி உதவுமாறு பல கோரிக்கைகள் விடப்பட்ட நிலையில் சுமார் ஒன்றரை வருடங்களின் பின் மீண்டும் ஓர் தபால் பெட்டி நிறுவப்பட்டிருப்பது தமக்கு பெரும் உபயோகமாக இருப்பதாக மக்கள் மகிழ்ச்சி தெரிவிக்கின்றனர். (03)

## உதவிப் பணக் கொடுப்பனவு மீளாய்வு

(வடமராட்சி)

பருத்தித்துறை பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட பருத்தித்துறை ஜே/401, பருத்தித் துறை தெற்கு ஜே/402 ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த பொதுசன மாதாந்த உதவிப் பணக்கொடுப்பனைப் பெறுக் கொள்ளும் பயனாளிகள் நாளை வியாழக்கிழமை, மறுதினம் வெள்ளிக்கிழமை ஆகிய தினங்களில் காலை 9 மணிக்கு தத்தமது குடும்பப் பங்கீட்டு அட்டை, நிவாரண முத்திரைகள் ஆகியவற்றுடன் பிரதேச செயலக சமூக சேவைப் பகுதிக்கு சமூகந் தருமாறு சமூக சேவைக் கிளையினரால் அறிவிக்கப்பட்டுள்ளது.


## புதிய மின்கம்பங்கள் பொருத்தும் செயற்பாடு

(அச்சுவேலி)

யாழ்ப்பாணம் - பருத்தித் துறை வீதி அகலிப்புப் பணிகள் தற்சமயம் கோப்பாய்ப் பிரதேச செயலகப் பகுதியில் இருந்து கல்வியங்காட்டுப் பகுதி வரை இடம்பெற்று வருகின்றது.

இதில் வீதி அகலிப்புப் பணிகளை இலகுபடுத்துவதற்கு ஏற்ற வகையில் இலங்கை மின்சார சபையினரால் மின்கம்பங்கள் பின் நகர்த்தும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றது.

இவ்வாறு மின்கம்பங்கள் பிடுங்கி நாட்டப்படும் வேளைகளில் சேதமடைந்த மின்கம்பங்களுக்குப் பதிலாக புதிய மின் கம் பங்கள் நாட்டப்படுவதுடன் மின்மார்க்கங்களிலுள்ள குறைபாடுகளும் திருத்தியமைக் கப்பட்டு வருகின்றது. (03)



ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பிறந்த தினத்தை முன்னிட்டு கிளிநொச்சியில் உள்ள ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற நிகழ்வில் வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ. சந்திரசிறி வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழும் யுவதி ஒருவருக்கு துவிச்சக்கரவண்டி வழங்குவதையும், அருகில் நாடாளுமன்ற உறுப்பினர் மு. சந்திரகுமார் நிற்பதையும் காணலாம். (77)

## பிரதேச செயலருக்கான தங்குமிட விடுதி

(வேலணை)

வேலணைப் பிரதேச செயலர் தங்கிச் செல்வதற்கென புதிய விடுதி ஒன்றினை கட்டுவதற்காக பொது நிர்வாக உள்நாட்டு அமைச்சானது 85 இலட்சம் ரூபாவினை ஒதுக்கியுள்ளது.

இவ்வாறு ஒதுக்கப்பட்டுள்ள நிதியினைப் பயன்படுத்தி வெகு விரைவில் புதிய விடுதி ஒன்றினை அமைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. (05)

# மாற்றுவலுவுடையோர் தினத்தை முன்னிட்டு யாழ். ஜெய்ப்பூர் நிறுவனத்தின் செயற்பாடு

(யாழ்ப்பாணம்)

சர்வதேச மாற்றுவலுவுடையோர் தினம் எதிர் வரும் டிசம்பர் மாதம் 3ஆம் திகதி கொண்டாடப்படவுள்ள நிலையில் யாழ். ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனம் இத் தினத்தை முன்னிட்டு பல்வேறு செயற்பாடுகளை முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளதாக நிறுவனப் பதில் தலைவர் சி. குணரட்ணம் தெரிவித்துள்ளார்.

இதன்படி செயற்பாடுகள் குறித்து நிறுவத்தினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஜெய்ப்பூர் நிறுவனத்திடமிருந்து கல்வி வளர்ச்சிக்காக மாதாந்த நன்கொடையைப் பெற்று வரும் பயனாளிகளான பாடசாலை மாணவர்களுக்கிடையே மூன்று பிரிவுகளைக் கொண்ட கட்டுரைப் போட்டி ஒன்றினை எதிர் வரும் 26ஆம் திகதி சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு இல: 05 பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவன அலுவலக மண்டபத்தில் நடத்தப்படுவதுடன் இப்போட்டிக்கான விண்ணப்பங்கள் பாடசாலை அதிபரூடாக பயனாளிகளுக்கு ஏற்கனவே அனுப்பப்பட்டுள்ளன. ஒவ்வொரு பிரிவிலும் முதல் மூன்று இடங்களைப் பெறுவோருக்கு பெறுமதிமிக்க பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளது.

இந்நிறுவனத்தினால் 70 வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் பயனாளிகளுக்கு ஏற்கனவே வழங்கப்பட்ட செயற்கை உறுப்புக்களின் பாவனைத்திறன் பற்றிய மதிப்பீடு மேற்கொளளப்பட்டு அவ்வுறுப்புக்களை ஒழுங்காகவும், பாதுகாப்பாகவும் நீண்ட காலம் பயன்படுத்துவோரை தெரிவு செய்து பரிசு வழங்கி கௌரவிப்பதெனவும், இவர்களுக்கான பாவனைத்திறன் பற்றிய மதிப்பீடு இன்று புதன்கிழமை காலை 10.00 மணிக்கு ஜெய்ப்பூர் நிறுவனத்தில் இடம்பெறவுள்ளது.

மேலும் தற்போது நடாத்தப்பட்டு வரும் 6 மாத கால தையல் பயிற்சியில் பங்குபற்றி வரும் மாற்றுவலுவுள்ள பயனாளிகளுக்கிடையேயான தையல் போட்டியொன்றினை நடத்தி முதல் மூன்று இடங்களைப் பெறுவோருக்குப் பெறுமதிமிக்க பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

அத்துடன் நிறுவனத்தில் பணியாற்றி வரும் மூவர், மாவட்ட மட்டத்தில் இடம்பெற்ற வெவ்வேறு வகையான போட்டிகளில் பங்குபற்றி முதலாமிடத்தைப் பெற்று யாழ். ஜெய்பபூர் நிறுவனத்திற்கு பெயரையும், புகழையும் பெற்றுத் தந்துள்ளனர். அவர்களையும் பல்கலைக்கழக மாணவர்களாயுள்ள மாற்றுவலுவுள்ள நிறுவனப் பயனாளிகளையும் இறுதி நாள் நிகழ்வின் போது கௌரவிப்பதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கிளாலி மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வினை பெற்றுக்கொடுக்க ஏற்பாடு

## சந்திரகுமார் எம்.பி. தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

அண்மையில் மீள்குடியேற்றப்பட்ட கிளாலி மக்கள் எதிர்கொள்கின்ற அடிப்படைப் பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வினைப் பெற்றுத்தர நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை கிளாலி சென்மேரிஸ் தேவாலயத்தில் இடம்பெற்ற கிளாலி மக்களுடனான சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், தொடர்ச்சியான அபிவிருத்தித் திட்டங்களை இப்பிரதேசத்தில் மேற்கொண்டு ஏனைய பிரதேசங்கள் போன்று வளர்ச்சி அடைந்த பிரதேசமாக மாற்றவேண்டுமாயின் மக்கள் முழுமையாக மீள்குடியேறுவது அவசியமாகும். நாம் முதலில் அடிப்படைத்தேவைகளை விரைவாகப் பூர்த்தி செய்து தருகின்றோம். அதன் பின்னர் படிப்படியாக ஏனைய தேவைகளும் பூர்த்திசெய்யப்படும். அத்துடன் உடனடியாக அடுத்த வாரமே கட்டுமானப்பணிகள் ஆரம்பிக்கும் வகையில் ஐம்பது இலட்சம் ரூபா செலவில் பாடசாலைக் கடடம் ஒன்றினை அமைப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதோடு விரைவாக பல்வேறு திட்டங்களின் மூலம் பொதுநோக்கு மண்டபம், முன்பள்ளி, கடற்றொழிலாளர் ஓய்வு மண்டபம், மற்றும் கூட்டுறவு விற்பனை நிலையம் ஒன்றினையும் அமைத்துத் தருவதற்கும் ஆலயங்களைப் புனரமைப்பதற்கும் நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார்.

கிராம அலுவலர் பிரபாகரன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பளைப் பிரதேச செயலர் முகுந்தன் மற்றும் பளைப் பிரதேச சபையின் உறுப்பினர் அன்ரன் அன்பழகன், அருட்தந்தையர்கள், பாடசாலை அதிபர், ஈ.பி.டி.பி.யின் சாவகச்சேரி பிரதேச அமைப்பாளர் வலன்ரையன், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.




மெதடிஸ்த பெண்கள் உயர்தரப்பாடசாலையில் அண்மையில் நடைபெற்ற ஒளி விழாவில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட மெதடிஸ்த திருச்சபையின் போதகர் த.கிருஷ்ரிகுமார் மாணவி ஒருவருக்கு பரிசில் வழங்குவதைக் காணலாம். (116)

# நூற்கண்காட்சியும் நூலக விழாவும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நாவந்துறை றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தில் தேசிய வாசிப்பு மாத நிகழ்வாக நூற்கண்காட்சியும், நூலக விழாவும் இன்று புதன்கிழமை காலை 9.30 மணிக்கு அதிபர் எப்.எக்ஸ் அன்ரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு கல்விக்காருண்யன் ஈ.எஸ்.பி. நாகரட்ணம் பிரதம அதிதியாகவும் அதிபர் என்.விஜயசுந்தரம், திருமதி சவேரி இம்மானுவல், வர்த்தகர்களான எஸ்.விஜிதரன், க.கஜேந்திரன் வீ.மகாலிங்கம் க.ரதிகுமார் ஆகியோர் சிறப்பு விருநதினர்களாகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதில் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (105)

# அடிக்கல் நாட்டும் நிகழ்வு

(கரணவாய்)

கரணவாய் பிரதேசத்தில் அமைக்கப்படவுள்ள பால்பதனிடல் தொழிற்சாலையின் புதிய கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு எதிர்வரும் 29 ஆம் திகதி காலை 9 மணிக்கு நாவலர் மடத்திலுள்ள அலுவலகக் காணியில் இடம்பெறவுள்ளது.


இத்தொழிற்சாலை அமைக்கப்பட்ட பின்னர் மண்டான், சோளங்கன், கரணவாய்ப் பகுதியில் உள்ள பால் உற்பத்தியாளர்களின் தேவைகளை நிறைவேற்றக் கூடியதாக இருக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (18)

# ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு

(வடமராட்சி)

ஜி.ரி.இசற் இ.எஸ். சி. நிறுவனத்தின் அனுசரணையில் வடமராட்சி கல்வி வலயத்தினால் தெரிவு செய்யப்பட்ட 30 ஆசிரியர்களுக்கான பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பான செயலமர்வு நாளை வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு புலோலி மெ.மி.த.க. பாடசாலையில் நடைபெறவுள்ளது.

விஞ்ஞானம், மனைப்பொருளியல் சுகாதாரம், உடற்கல்வி, சமூகக் கல்வி போன்ற பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான இக் கருத்தரங்கு வடமராட்சியிலுள்ள வைத்திய கலாநிதிகளினால் நடத்தப்படவுள்ளது. எனவே தெரிவு செய்யப்பட்ட பாடசாலை ஆசிரியர்கள் தவறாது கலந்துகொள்ளுமாறு வடமராட்சி வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் சி. புஸ்பலிங்கம் அறிவித்துள்ளார். (உ-116)



## பரமர் சங்கமம்

சின்னப்பொடியனில் நான் சரியான சுட்டிதான்; ஏன் இப்ப எண்டாப் போல குறைவே கெட்டிதான்.

என்னையே நான் புளுகிறேண்டு சொல்லுவினம் நான் சொல்ற விசயத்தைக் கேட்டிட்டு நீங்களே தீர்மானியுங்கோவன்.

என்னண்டா காணாமப் போறேண்டுசொல்லுகினமெல்லே! அதுதான் துலைஞ்சு போறே; அது உந்த அனர்த்த காலங்களில அனர்த்தமாக நடந்தது தெரியுந்தான?

அதில அரச படையும் காணாமப் போகும். அவைக்கு எதிராகச் சண்டை புடிச்சவேயும் காணாமப் போவினம்: அது பறவாயில்லை.

இது ரெண்டிலும் இல்லாம சும்மா இருந்தவையும் காணாமப் போவினம் அதுதான் வேதனைக்கு உரியது. இப்பவும் காணாமல் போன புருசன் பிள்ளைகளைத் தேடி மனைவிமாரும், தாய்மாரும் கண்ணீரும் கம்பலையுமாத் திரியினம்தான!

அதைவிடப் புள்ளையளும் அப்பாவைக்கண்டு பிடிச்சுத் தாருங்கோ எண்டு குரல் எழுப்புவதை சில இடங்களில் கேக்கிறம்.

நடைபெற்ற சண்டையில காணாமப் போன பொடியளை ஆர் தேடப் போகினம்? பெற்றதுகள் தான் காலம் பூராவும் உருகிக் கொண்டிருக்குங்கள்.

படையினர் காணாமைப் போன செய்திகளையும் பாக்கிறம் அதுகளும் ஆரோ பெற்ற பிள்ளையள்தான. அதுகள் அரசால் பொறுப்பெடுக்கப்படாமல் விட்டு விடுவதற்கான கணக்குகள்தான்.

ஏனெண்டா பொறுப்பெடுத்தா, அத்தனைக்கும் நட்டஈடும்; காலமெல்லாம் கொடுப்பனவுகளும் வழங்கவெல்லே வேணும் அதனால அந்தத் தந்திரோபாயத்தை அரசாங்கங்கள் கைக்கொள்கின்றனவாக இருக்கலாம்.

அப்ப அவேன்ரை குடும்பங்களை சேர்ந்த தாய், தகப்பன் சகோதரங்கள், மனைவி, மக்களும், பாவங்கள் இல்லையா?

காணாமல் போன என்னைப் பற்றிச் சொல்ல வந்து எங்கேயோ வெல்லாம் போயிட்டன்.

எனக்கொரு எட்டு வயதிருக்கும் நல்லூர் திருவிழாவுக்கு எங்கட சின்னம்மாவோட நவாலியில இருந்து கள்ளியங்காட்டு உறவினர் வீடொன்றில் வந்து நின்று இரவு போயிருந்தன்.

நல்லூர் கோவில் பக்கத்தில போகேக்க இடங்களைப் பார்த்துக் கொண்டு போனதில சின்னம்மாவை விட்டு தவறிக்காணாமல் போயிட்டன்.

சுட்டிதான கோயிலுக்குப்போன வீதி அடையாளங்களை ஞாபகப்படுத்தி போனன். சரிப்பட்டுவரேல்ல. திரும்பிக் கோவில் பக்கம் போகேக்க வழியில பொலிஸ் காரரைக் கண்டன்.

உடன அவரிட்டை விசயத்தைச் சொன்னன். அவர் கூட்டிக் கொண்டு ஒலிபெருக்கிக் காரியாலயத்துக்கு வரேக்க என்னைத் தேடிக்கொண்டு வந்த சின்னம்மாவைக் கண்டிட்டன்.

அவவும் என்னைக் கண்டிட்டா. பொலிஸ்காரரிடம் விசயத்தைச் சொல்ல அவர் என்னைச் சின்னம்மாவிடம் கையளிச்சார்.

எப்படி என்ர கெட்டித்தனத்தை? இல்லாட்டில் இண்டைக்குக் காணாமல் போயிருக்கும் லட்சோப லட்சம் பேர்களில் இந்தப் பரமரும் அடங்கியிருப்பார் இல்லையே பின்னை...

# ஸ்ரீதரின் இன்றைய பலன்

(23.11.2011–புதன்கிழமை)

பஞ்சாங்கக் குறிப்புக்கள்
கர வருஷம்
கார்த்திகை 07 ஆம் நாள்.
இராகுகாலம் 12.11-1.41, சுபநேரம் 4.41 -6.11வரை
நட்சத்திரம்: சித்திரை காலை . 7.15 வரை
சுவாதி பி.இ.5.37 வரை
திதி: திரயோதசி பி.ப. 5.03 வரை
பிரதோஷ விரதம்

**இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது**

மேடம்:– பணக் கஷ்டம், இனசனம் உதவி, நண்பர் தொல்லை, நினைத்ததைச் சாதித்தல்.

ரிஷபம:–குடும்பத்தில் மகிழ்ச்சி, பணம் வரும் நண்பர் வருகை, வெளிநாட்டு நற்செய்தி, உடம்பு சுகம்.

மிதுனம் :–காசுக்கஷ்டம், குடும்பத்தில் குழப்பம், நண்பர் உதவி, அயல்வீடு தொல்லை, உடம்பு பலவீனம்.

கடகம்:– குடும்பத்தில் மகிழ்ச்சி, காசுவரும், தொழில் விருத்தி, நண்பர் உதவி, உடம்பு சுகம்.

சிம்மம்:– பணக் கஷ்டம், குடும்பத்தில் கவலை, அதிகாரப் போட்டி, காரியத்தடை, உடம்பு பலவீனம்.

கன்னி :– குடும்பத்தில் நிம்மதி பணம் வரும், கடன் வசூல் நண்பர் உதவி, காரியசித்தி.

துலாம் :–பணக்கஷ்டம், அயல் வீட்டுத்தொல்லை, தொழில் முடக்கம், சுற்றத்தார் ஆதரவு, உடம்பு சுகமின்மை.

விருச்சிகம்:–குடும்பத்தில் குதூகலம், பணம் வரும், தொழில் விருத்தி, அதிகாரப்போட்டி, வீண் சர்ச்சை.

தனுசு:– பணக் கஷ்டம், வீண் அலைச்சல், நண்பர் உதவி, உடம்பு பலவீனம்.

மகரம:– குடும்பத்தில் நிம்மதி, பணம் வரும் நினைத்ததைச் சாதித்தல், காரிய சித்தி.

கும்பம் :– பணக் கஷ்டம், தொழில் முடக்கம், காரியத்தடை, இனசன உதவி.

மீனம் :– குடும்பத்தில் நிம்மதி, பணம் வரும், காரிய சித்தி, தொழில் இலாபம், உடம்புசுகம்.

# வீதி சேதம் பயணிகள் சிரமம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரப் பகுதியில் அமைந்துள்ள மணிக்கூட்டுக் கோபுரத்துக்கு சுற்றுவட்டமாகப் போடப்பட்டுள்ள வீதிகள் மழையின் காரணமாக சேதமடைந்துள்ளது.

இவ்வாறு சேதமடைந்த வீதியால் பரவலாக போக்குவரத்து இடம்பெறுவதுடன் பிரதான பாதையாகவும் பாவிக்கப்படுகின்றது.

இவ்வீதிகளின் நிலைமையினால் போக்குவரத்தில் ஈடுபடும் வாகனங்கள், பாடசாலை மாணவர்கள் உள்ளிட்ட பலர் பாதிக்கப்படுகின்றனர்.

குறிப்பாக இரவு வேளையில் பயணம் செய்யும் போது விபத்துக்களும் இடம்பெறுகின்றன.

இந்த வீதியை உடனடியாகத் திருத்தி போக்குவரத்தினை சீராக மேற்கொள்ள ஆவன செய்யுமாறு பொதுமக்கள் கேட்டுக்கொள்கின்றனர். (எப்.எஸ்)

# திருமுறை முற்றோதல் நிகழ்வு

(வவுனியா)

வவுனியா சைவசமய பாதுகாப்புப் பேரவையின் ஏற்பாட்டில் 4 ஆவது வருடமாக இடம்பெற்று வரும் உலக அமைதி வேண்டிய 51 ஆவது பன்னிரு திருமுறை மற்றும் திருப்புகழ் முற்றோதல் சிவவேள்விப்பெருவிழா எதிர்வரும் 30 ஆம் திகதி புதன்கிழமை வவுனியா ஆறுமுக நாவலர் திருமுறை மண்டபத்தில் ஆரம்பமாகி இரவு பகலாக திருமுறை முற்றோதல் இடம்பெற்று மார்கழி மாதம் 10 ஆம் திகதி சனிக்கிழமை நிறைவுறவுள்ளது.

சைவக்குருக்கள் தர்புருஸ தேசிக சிவஸ்ரீ க.சிவராசக்குருக்கள் தலைமையில் இடம்பெறவுள்ள பிரார்த்தனைகளில் கலந்து கொள்ளவுள்ளவர்கள் எதிர்வரும் 29 ஆம் திகதிக்கு முன்னர் வவுனியா குருமண்காடு கோவில் வீதியில் அமைந்துள்ள சைவசமய பாதுகாப்புப் பேரவையுடன் தொடர்பு கொள்ள முடியும் என பேரவையினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (125)

# ஆசைப்படலாமா?

**நா**டு கடந்த அரசிற்கும் அதன் உறுப்பினர்களுக்கும் இருப்பது ஒரே ஒரு பிரச்சினைதான். அது என்ன என்றால் தமது தலைவர் திரு.ருத்திரகுமாரன் ஐயாவை பேசவைக்க வேண்டும். அவ்வளவுதான். அதாவது மாவீரர் தின உரையை அவர் நிகழ்த்த வேண்டும் என்பது நா.க. அரச உறுப்பினர்களின் ஆசை! கனவு! ஏன் ஒரு பேராசை எண்டும் வைச்சுக்கலாம். அதற்கு யார் இசைந்துகொடுப்பார்களோ அவர்கள் பக்கம் சாய்வதே இவர்கள் செய்த முதல்வேலை. அதன் அடிப்படையில் தலைமைச் செயலகத்தால் நடத்தப்படவிருந்த (எக்ஸ்.எல்) மாவீரர் தின நிகழ்வுகளில் ஐயா ருத்திரகுமாரன் அவர்கள் உரை நிகழ்த்தவிருந்தார். அந்த வீடியோவும் தயாராகி வருகிறது. உங்களுக்கு ஒன்று புரியவேண்டும் மாவீரர் தின அறிக்கை



வேறு, மாவீரர் தின உரை வேறு. மாவீரர்தின உரையை விடுதலைப் புலிகளின் தலை வர், தமிழ் மக்களின் தேசிய தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்கள் தான் நிகழ்த்துவது வழக்கம். அந்த உரைக்கு அல்லவா ஆசைப்படுகிறார் ருத்திரா அண்ணா.... இது நியாயமா? மக்கள் ஏற்றுக் கொள்வார்களா?

- *அதிர்வு இணையம்*

# உடல் நலம் மேம்பட சைக்கிள் சவாரி

**பெ**ட்ரோல் விலை உயர்ந்து விட்டது, டீசல் விலை உயர்ந்து விட்டது, எங்கள் வருமானத்தில் பெரும் பகுதி இதற்கே போய்விட்டால் நாங்கள் எப்படி வாழ்க்கை நடத்துவது? என்று அங்காலாய்க்கும் ஏழை, எளிய, நடுத்தர மக்கள் அதைத்தாண்டி, இதற்கு இருக்கும் மாற்று வழி பற்றி சிந்திப்பதேயில்லை. பெட்ரோல், டீசல் எல்லாம் நம் தேவைக்கு கிடைப்பதில்லை. வெளிநாடுகளில் இருந்துதான் இறக்குமதி செய்கிறோம். இதனால் அந்நிய செலாவணி அதிகமாகிறது. இதைத் தவிர்க்க இதன் பயன்பாட்டை பெருமளவில் குறைக்க வேண்டும்.

இன்று உலகில் எல்லா நாடுகளுக்கும் பொருளாதார ரீதியாக சவால் விடும் வகையில் வேகமாக வளர்ந்து கொண்டிருக்கும் சீனாவுக்கு சென்றவர்களுக்கு நன்றாகத் தெரியும், அங்கு பெட்ரோல் வாகனங்களுக்குப் பதிலாக எந்த வகையில் சைக்கிள்களைப் பயன்படுத்துகிறார்கள் என்று. எவ்வளவு உயர்ந்த பதவியில் இருப்பவர்களும் சைக்கிளில் செல்வதை மிக பெருமையாக கௌரவமாகவே கருதுகிறார்கள். வீதிகளிலும் சைக்கிள்கள் செல்வதற்கு தனியாக பாதை ஒதுக்கிக் கொடுத்து இருக்கிறார்கள். ரயில் நிலையங்கள் பஸ் நிலையங்கள், வணிக வளாகங்கள் மற்றும் ஒவ்வொரு அலுவலகங்கள் முன்பும் சைக்கிள்களை நிறுத்த அமைக்கப் பட்டுள்ள சைக்கிள் நிறுத்தங்களில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் சைக்கிள்களின் எண்ணிகையைப் பார்த்தால் ஆச்சரியத்தின் எல்லைக்கே போய் விடலாம்.




பெட்ரோல் பயன்பாட்டைக் குறைக்க சீனா இந்த நடவடிக்கையை 20 ஆண்டுகளுக்கு முன்பே தொடங்கிவிட்டது. இப்போதும் சீனாவில் நகர்ப்புற முக்கிய சாலைகளில் ஸ்கூட்டர், மோட்டார் சைக்கிள்கள் ஓட தடை இருக்கிறது. எல்லோரும் தங்கள் வீடுகளில் இருந்து மெட்ரோ ரயில் நிலையம் வரை சைக்கிள்களில் வந்து அங்கு இருந்து மெட்ரோ ரயில் பயணத்தையே மேற்கொள்கிறார்கள். மெட்ரோ ரயில் நிலையங்களின் வாசலில் ஏராளமான சைக்கிள்கள் நிற்பதைப் பார்க்கலாம். சீனாவில் நீரிழிவு நோயின் பாதிப்பு மிகவும் குறைவு. அதற்கு ஆண்களும், பெண்களும் செல்லும் சைக்கிள் பயணமும், ஒரு முக்கிய காரணமாகும்.

அதிக செலவு வைக்காத உடல் நலத்தை மேம்படுத்தும், விபத்துக்களைத் தவிர்க்கும், அந்நிய செலாவணியை பெருமளவில் குறைக்கும் சைக்கிள் சவாரியை ஊக்குவிக்கலாமே! எல்லாவற்றுக்கும் முன்னோடியாகத் திகழும் இளைஞர் சமுதாயம், இவ்வாறு சைக்கிள்களை பயன்படுத்துவதிலும் மற்றவர்களுக்கு முன் மாதிரியாக செயற்பட வேண்டும். நாட்டின் பொருளாதாரத்தை சீர்படுத்த பெட்ரோல், டீசல் பயன்பாடு குறைப்பும் நிச்சயமாக வகை செய்யும்.

புதிய புதிய வீதி நிர்மாணத்தில் கவனம் செலுத்திவரும் அரசு, சைக்கிள்களில் செல்வோரின் வசதிக்காகவும் தனி ஒழுங்குகளை வீதியமைப்பில் செய்து கொடுத்தால், அந்த ஊக்குவிப்பினால் சைக்கிள் பயணிகள் பெருகக் கூடும். பொருளாதார சிக்கனமும் உடல்நல மேம்பாடும் கிட்டும்.

# புலம் பெயர்தல்

**ஆ**பத்தில்லா வழியில் கொண்டு போக முடியாது இன்று. எல்லா வழிகளிலும் பொலிஸ் நின்றுகொண்டிருக்கிறது. உங்கள் பணத்துக்கு இன்று இந்த வழியில் கொண்டு வருவதை உங்கள் ஏஜெண்ட் ஒத்துக்கொண்டிருக்கிறான். என்னிடம் நீங்கள் விவாதம் செய்து பயன் இல்லை" என்று அந்த உக்ரைன் ஆட்களுக்குப் பொறுமையாக சமாதானம் சொன்னார் விளாடிமிர்.




அப்போது சற்று நேரமான பிறகு கூட இரண்டாவது விளக்கு தெரியாததை உன்னிப் பாகக் கவனித்த விளாடிமிர், உக்ரைன் ஆட்களைப் பேசாதவாறு கை அமர்த்தினார். யாரும் பேசவில்லை. நிமிடங்கள் கழிந்து கொண்டேயிருந்தன. இரண்டாவது செச்னிய இளைஞன் போய் சேர்ந்திருந்தால் இந்நேரம் விளக்கு இரண்டு என்று குறிப்பு காட்டியிருக்கும். எலலோரும் திடீரென்று மௌனமானார்கள். ஆசிய நாட்டு இளைஞர்கள் ஒருவரை ஒருவர் பார்த்தனர். காற்று ஊளையிடுவது நிற்கவிலலை. பனி இன்னும் இன்னும் ஓங்கி. ஓங்கி முகத்திலறைந்தது. எல்லோரும் விளக்கு வரும் திசையைப் பார்த்த வண்ணம் நின்றனர். அந்த விளககு, அந்த இளைஞன் போய் சேர்ந்தானா இல்லையா? என்கிற குறிமட்டுமில்லை ஒரு உயிரை உலகம் இழந்ததா இல்லையா என்கிற சங்கேதம். இன்னும் விளக்கு வரவில்லையே என்று எல்லோரும் கவலையோடு பார்க்கும்போது இரு விளக்குகள் தெரிந்தன. நின்று கொண்டிருந்த வர்கள் முகத்தில் கலகலப்பு தெரிந்தது. அப்பாடா என்று விளாடிமிர் நிம்மதி அடைந்தது அவர் முகத்தில் தெளிவாகத் தெரிந்தது. அவர்கள் நின்றிருந்த இடம் சூன்யம் கொள்ள ஆரம்பித்தது. விளா டிமிர் இப்போது அந்த உக்ரைன் ஆட்களைப் பார்க்க, அவர்கள் போக விரும்பாததைத் தெரிவித்தனர். விளாடிமிர் ஆசிய நாட்டு இளை ஞர்களான கும்மாங் குத்துவையும் மதன் என்ற குலசிங்கத்தையும் பார்த்தார். உடனே மதன் மற்றவனைவிட தான் பெரியவன் என்பதை உணர்ந்து புறப்பட்டான். கும்மாங்குத்துவை நோக்கிச் சிரித்துவிட்டு உற்சாகமாகப் புறப்பட்டான். சற்றுநேரத்தில் அந்த அடர்ந்த பனி வீசும் இருளில் அவன் உருவம் மறைந்தது.

ஊஊ என்று காற்று சப்தமெழுப்பியது. பனி முகத்தில் பேயறைந்தது போல வீசியது. காற்று வீசும் திசைக்கு எதிர்பக்கமாக எல்லோரும் முகத்தைத் திருப்பி காற்றின் நேர் தாக்குதலிலிருந்து தங்கள் முகங்களைப் பாதுகாத்தனர். தூரத்தில் கிளை இல்லாத மரங்கள் ஆடியபடி இருந்தன. லேசான ஒளியில் வேறு ஏதும் தெரியவில்லை. மீண்டும் மூன்று விளக்குகள் வந்ததும் கும்மாங்குத்துப் புறப்பட வேண்டும். அதாவது மதன் என்ற குலசிங்கமும் போய்ச் சேர்ந்துவிட்டான் என்ற அடையாளம் வந்ததும் கும்மாங்குத்து புறப்படுவான். உக்ரைனியர்கள் கடைசியாகத் தான் புறப்படுவார்கள். அவர்கள் முகங்களின் தோற்றம் அதைத்தான் காட்டியது.

கும்மாங்குத்துவுக்கு அப்போதுதான் இதுவரை தான் வாழ்வில் எப்போதும் அறிந்திராத ஓர் உணர்வு ஏற்பட்டது. அது முதலில் வயிற்றிலிருந்து பரவியது. அந்த உணர்வின் பெயர் என்ன என்று அவனுக்குத் தெரியவில்லை. காதில் இரைச்சல் அதிகரித்தது போல் இருந்தது.

மூன்றாவது தடவை மூன்று விளக்குகள் தெரியப்போகின்றன என்று எல்லோரும் எதிர்பார்த்துக் கடும்பனியையும் வீசும் காற்றையும் பொருட்படுத்தாது நின்றபோது எதிர்த்திசையிலிருந்து வந்த அடையாளம் மாறுபட்டிருந்தது. எல்லோரும் ஒருவரை ஒருவர் மாறிமாறிப் பார்த்தார்கள்.

நான்கு விளக்குகள் இரண்டு முறை எரிவதும் அணைவதுமாகத் தொடர்ந்தன. விளக்கு அடையாளம் ஏதோ எதிர்பார்க்காத ஒன்று நடந்துவிட்டதை அறிவிக்கிறது. கும்மாங்குத்து ஏதோ விபரீதம் நடந்துவிட்டது என நினைத்தான். விளாடிமிர் "ஓ" எனப் புலம்பியபடி தலையில் கைவைத்துவிட்டுக் குனிந்து அமர்ந்தார். உக்ரைன்காரர்கள் "என்ன, என்ன" என்று விளாடிமிரைப் போய்த் தோளைப் பிடித்துத் தூக்கினார்கள். அவர்களின் பிடியைக் கோபத்தோடு தட்டிவிட்டான் விளாடிமிர்.

"அந்தப் பையனை பனி இளகி இழுத்துவிட்டுப் போய்விட்டது."

- வார்ஸாவில் ஒரு கடவுள் நாவலில

# புது வகை ஜி.பி.எஸ் கருவி.

**ஜி**யொ பொஸிஷனல் ஸிஸடம் எனப்படும் ஜி.பி.எஸ் கருவிகள், மேற்கில் பல நாடுகளில் இப்போது மிகவும் பயன் படுகின்றன. சாதாரணமாகப் புது ஊர்களில் வந்திறங்குபவர்கள் கார்களை ஓட்டத் தயங்குவார்கள். ஏனெனில் நகரங்களில் ஒரு கையில் வரைபடத்தை வைத்துக் கொண்டு கார் ஓட்டி ஒரு இடத்தை அடைவது கடினம். யாரைப் பார்க்கப் போகிறோமோ அவர்களிடம் இருந்து சரியான வழியைக் கேட்டறிந்தும் போய்ச் சேருவது கடினம். ஆனால் அப்படித்தான் வெகு காலமாக எல்லாரும் போய்ச் சேர்ந்து கொண்டிருந்தார்கள்.

நேரம் மேன்மேலும் சிக்கனமாகப் பயன்படுத்தத் தேவையான இந்தக் காலத்தில் எத்தனை கச்சிதமாக இதைச் செய்ய முடியுமோ, எவ்வளவு குறைவாக தொலைபேசி, கணினித் தொடர்பில் வழியைக் கண்டறியச் செலவழிக்க முடியுமோ அத்தனை குறைவாகச் செலவழித்து வேலைத் திறனை உயர்த்த வேண்டும் என்பதற்காக வந்தவை ஜி.பி.எஸ் கருவிகள். இது ஒரு இராணுவப் பயன்பாட்டுக்கான கருவியாக இருந்தது, இன்று வணிகப் பயன்பாட்டுக்கு, பொது நுகர்வுக் கருவி ஆகி இருக்கிறது.


ஆனால் இதிலும் ஒரு பிரச்சினை. காரோட்டும்போது இந்த வரைபடம், வழி சுட்டல் ஆகியனவற்றைப் பார்த்தபடி ஓட்ட முடியாது. இதில் ஒரு அறிவிப்பாளரின் குரலில் உரக்கவே 'ஒரு மைல் முன்னே போய் மூன்றாவ்து வலது திருப்பத்தில் சற்றே இடது சாரியாகத் திருமபு' என்று சொல்லக் கேட்டாலும் கூட ஏதேதோ தவறுகள் வருகின்றன. அதைத் தவிர பலருக்கு கேட்கவும் கேட்டு, பார்க்கவும் பார்த்தால்தான் வண்டியை ஒழுங்காகச் செலுதத முடிகிறது.

தவிர ஓட்டுப்வருக்கு எத்தனை கவனச் சிதறல் குறைவாக இருக்குமோ அத்தனை குறைவாக இருப்பது நல்லது என்று கார், பஸ், ட்ரக் பாதுகாபபு அமைப்புகள் வலியுறுதது கின்றன. குறிப்பாக காப்பீட்டு நிறுவனங்கள் இப்படி அறிவுறுத்துகின்றன.

சமீபத்திய கண்டுபிடிப்பு இது, இது வழிகாட்டும் விதமே அலாதி. காரின் மொத்த முன்புறக் கண்ணாடியிலேயே இது சாலையை நாம் பார்த்தபடி இருக்கையிலேயே ஒரு மெலிய ஒளிக்கற்றையைக் கண்ணாடியில் நீட்டி அதன் மூலம் சாலையை ஒரு முப்பரிமாணக் காட்சி போலாக்கி அதில் வழியைச் சுட்டுகிறது.

ஓட்டுபவர் தலையைச் சாலையிலிருந்து திருப்பவோ, கண்களைச் சாலையிலிருந்து எடுக்கவோ தேவை இராது. இதை ஒரு இலேசான நகர்வில் பெரும் தாவல் என்று குறிக்கலாம் என்றே தோன்றுகிறது. இது ஏன் இத்தனை காலம் யாருக்கும் தோன்றவில்லை? 3-டி சினிமா, டெலிவிஷனுக்கான கருவிகள் கண்டு பிடித்தபின்னரே இந்த நகர்வு சாத்தியமாகி இருக்கிறது. அதுவும் இப்போது 3 டி டெலிவிஷன் திரையில் விசேஷக் கண்ணாடி அணியாமலே காட்சியை எல்லாரும் காணக் கூடிய வகை ஒளிபரப்பு முறை கண்டுபிடிக்கப்பட்டு விட்டதாலேயே இந்த நகர்தல் சாத்தியமாகி இருக்கிறது எனச் சொல்லலாம்.


# செந்தமிழனும் உலகத்தாயும்!



செந்தமிழன் சீமான் என்றொரு சிங்கத்தின் கர்ஜனையில் மே மாதம் வரை நாடு அதிர்ந்து கொண்டிருந்தது. மே பதினைந்தாம் திகதி காலையில் இருந்து அவருக்கு தொண்டையில் "கிச் கிச்" இப்போதெல்லாம் கர்ஜிக்க முயற்சித் தாலும் "மியாவ் மியாவ்" என்றுதான் சவுண்டு வருகிறது.

அவருடைய லேட்டஸ்ட் "மியாவ் மியாவ்" மூவர் தூக்குத்தண்டனை தொடர்பானது. புரட்சித்தலைவி அம்மா அவர்கள் அமைச்சரவையைக் கூட்டி மூவரின் உயிரையும் காப்பார் என்று ஆக்ரோஷமாக கைகளை உயர்த்தி, கண்கள் சிவசிவக்க வீர உரையாற்றி யிருக்கிறார் "தள்ளு தள்ளு" தலைவர்.

அம்மா, இவரை இப்படியே விட்டு விட்டால் "ஈழத்துக்கு இராணுவத்தை அனுப்பி ராஜபக்ஷவை கைது செய்வார் புரட்சித்தலைவி" என்கிற ரேஞ்சுக்கு அள்ளிவிட ஆரம்பித்துவிடுவார்.



இந்த ஆனந்தத் தொல்லையை சமாளிக்க அம்மாவுக்கு ஒரே ஒரு வழிதான் இருக்கிறது. உடனடியாக அமைச்சரவையைக் கூட்டி, ஒரு நடிகையை கற்பழித்ததாக இவர் மீது பதியப்பட்டிருக்கும் முதல் தகவல் அறிக்கையை தள்ளுபடி செய்வது மட்டுமே ஒரே வழி.

அப்படி மட்டும் செய்துவிட்டால் ஈழத் தாய்க்கு பிரமோஷன் கொடுதது, உலகத் தாயாக்கவும் எங்கள் தன்மானச் சிங்கம் சீமான் ரெடியாகவே இருக்கிறார். அம்மா மனசு வைப்பாரா?

- யுவகிருஷ்ணா

# புல்லரிப்பிசத்திற்கு இலக்கணம்!

**கா**ந்தி, நேரு, அண்ணா வரிசையில் சேர விரும்பி, கனவு கண்டு ஒருவாறு வந்து சேர்ந்ததாக எண்ணிய கருணாநிதி தன் ஆட்சிக்காலத்தில் என்ன செய்தார்? காலையில் வண்டியை அரசினர் தோட்டத திற்கு விடுவார். 500 கோடியில் கட்டப் படும் புதிய சட்டப் பேரவையை காரிலிருந்தபடியே பார்க்க, அதிகாரிகள் வரை படத்தின் மூலம் கர்ம சிரத்தையாக விளக்க, கலைஞரின் வரலாற்றுச் சாதனையை நிறைவேற்ற உயரத்தில் நூற்றுக்கணக்கான வட மாநிலத் தொழிலாளிகள் தமிழினத்தின் தனிப்பெருமை கட்டடத்தை புயல் வேகத்தில் கட்டுகின்றனர்.

அப்புறம் வண்டி கோட்டூர்புரத்தில் கட்டப்படும் அண்ணா நூலகத்திற்கு செல்கிறது. அங்கும் அதே அதே. பிறகு தலைமைச் செயலகத்தில் செம்மொழி மாநாட்டிற்கு வருபவர்களுக்கு என்ன தீனி போடுவது என்று அதிகாரிகள், அமைச்சர் பெருமக்களுடன் ஆய்வு. குடிமைப்பணி இப்படி முடிய வீடு செல்லும் தலைவர் அப்புறம் இரு மனைவிமார்களின் வாரிசுப் பிரச்சினைகள் பற்றி பேசும் குடும்பப்பணி, பஞ்சாயத்துக்கள். இடையில் ஜெயாவின் கேள்விகளுக்கு பதில் சொல்லும் அறிக்கை, கேள்வி பதில்களை ரெடிமேடான வங்கியிலிருந்து எடுத்துக் கொடுக்கும் உதவியாளர்கள் மூலம் சரிபார்த்து விட்டு, கலைஞர் டி.வியின் அடுத்த வார மானாட மயிலாட நிகழ்ச்சிக்கு வந்த தீம்களை ஒகே செய்து முடித்தால் வருகிறது மாலை.

வள்ளுவர் கோட்டத்திலோ, ஜவஹர்லால் உள்ளரங்கு விளையாட்டு மைதானத்திலோ நடத்தப்படும் பிரம்மாண்டமான ஜால்ராபிஷேகம். கோட்டத்தில் கவிதை மழை என்றால் மைதானத்தில் குத்தாட்ட மழை. கன்னத்தில் கை வைத்து முழுவதையும் இரசித்து உருகி மருகி தோய்ந்து நனைந்து இதற்குமேல் வார்த்தைகள் தேவைப்படுவோர் வைரமுத்துவிடம்தான் கேட்க வேண்டும். நடனம், நாடகம், நகைச்சுவை, சொற்பொழிவு எல்லாம் அந்தத் தங்கத் தலைவனை தமிழின் எல்லா வார்த்தை மற்றும் கலைகளைக் கொண்டு பாராட்டி, சீராட்டி, தாலாட்டித் தள்ள தலைவர் அடையும் மோன நிலை இருக்கிறதே அதோடு ஒப்பிடத்தகுந்தது இந்த உலகில் ஜெயமோகன் அடையும் படைப்பு மோன நிலை மட்டும்தான்.



ஜெயலலிதா கட்டவுட்டில் தன்னைக் கண்டு புளகாங்கிசத்திற்கு புதுமை படைத் திட்டதைப் போல கருணாநிதி வார்த்தைகளில் தன்னைக் கண்டு புல்லரிப்பிசத்திற்கு இலக்கணம் படைக்கிறார். இந்த இரண்டு இசங்களும் சேர்ந்தால் அது நார்சிசம். தன்னையே மோகமுறுதல். தலைவரின்றி வேறுயாருக்கும் கிட்டாத இந்த மோகம்தான் தள்ளாத வயதிலும் அந்த தங்கத் தலைவனை குடும்பத்திற்காக ஓயாது ஓடி ஓடி உழைக்க வைக்கிறது.

*- வினவு இணையம்*

# ஜனாதிபதியால் முடியாததல்ல!

**மி**லிந்த மொறகொட முன்னாள் அமைச்சர். அதற்கும் அப்பால் வெளியுலகத் தொடர்புகளை அதிகமாகக் கொண்டவர். இலங்கை அரசியலில் ஓரளவுக்குச் செல்வாக்குள்ளவர், செல்வாக்குச் செலுத்தக்கூடியவர். குறிப்பாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு நெருக்கமானவர்.

தற்போது ஜனாதிபதியின் ஆலோசகர்களில் ஒருவராகவும் இருக்கிறார்.



இப்படியிருக்கும் மிலிந்த மொறகொட சொல்கிறார் "இலங்கையில் உள்ள மக்கள் இன, மத ரீதியாகப் பிளவு பட்டிருக்கிறார்கள்" என்று. ஆனால், ஜனாதிபதியோ, "இந்த நாடு ஒரே நாடு, ஒரே தேசியம், ஒரே குரல்" என்று.

இதில் எது உண்மை? எது பொய்? எது சாத்தியம்?

உண்மையில் இலங்கை பல கூறுகளாகவே துண்டுபட்டிருக்கிறது. ஒரு நாட்டில் அரசியல் முரண்கள் இருப்பது வழமை. சமூகங்களுக்கிடையிலான அடையாள வேறுபாடுகள் இருப்பது இயல்பு. ஆனால், அதை மீறி அவர்கள் ஏதோ சில அம்சங்களில், முக்கிய புள்ளிகளில் ஒன்றிணைந்திருப்பர்.

இந்த ஒருமித்தல் அல்லது ஒன்றிணைதலே நாட்டை ஒருமுகப்படுத்தி முன்னகர்த்துகிறது. அதனுடைய நெருக்கடிகளைத் தீர்க்க உதவுகிறது. நாட்டுக்கு வரும் உள் மற்றும் வெளி நெருக்கடிகளையும் சவால்களையும் எதிர்கொள்வதற்கு இதுவே - இந்த ஒருமைப்பாடே உதவுகிறது.

இந்த ஒருமை புரிந்துணர்வினாலும் விட்டுக்கொடுப்புகளாலும் பெருந்தன்மையினாலும் ஏற்றுக்கொள்ளல்களாலும் பரஸ்பர நல்லிணக்கத்தினாலும் ஜனநாயக அடிப்படைகளை முறைப்படி பேணுவதாலும் ஏற்படுவது.

இத்தகைய ஒரு நிலை ஒப்பீட்டளவில் மேற்குலகில் சாத்தியமாகியுள்ளது. அதற்காக அவர்கள் இலங்கையர்கள் சந்தித்ததைப்போல நீண்ட போர்களையும் மாபெரும் அழிவுகளையும் சந்தித்த அனுபவங்களைத் தமக்கான பாடங்களாகக் கொண்டு இந்தப் புதிய நிலையைக் கண்டடைந்திருக்கிறார்கள்.

ஆனால், இலங்கை முரண்களால் மேலும் விருத்தியடைந்து செல்கிறது. அது பொருளாதார ரீதியில் அடையும் முன்னேற்றத்தை விட, ஜனநாயக அடிப்படைகளில் அடையும் முன்னேற்றத்தை விட, இன ஐக்கியத்திலும் புரிந்துணர்விலும் ஏற்படும் முன்னேற்றத்தை விட, அமைதிச் சூழலில் அடையும் விருத்தியை விட முரண் விருத்தியில் அதிக முன்னேற்றத்தை எட்டியுள்ளது.

என்றபடியாற்தான் இனரீதியான கட்சிகளும் அரசியற் சித்தாந்தங்களும் உருவாகியுள்ளன. இந்தப் போக்குகளுக்கே இலங்கையில் அதிக ஆதரவும் கிடைத்து வருகிறது.

இலங்கைத்தீவுக்குப் பொருத்தமான யதார்த்தமான சிறப்பான அரசியற் கோட்பாடுகளும் அரசியற் செயற்பாடுகளும் இலங்கை வாழ் மக்களால் நிராகரிக்கப்பட்டு வருகின்றமைக்கு இந்த இன மதப் பிளவுகளே காரணம்.

இதைச் சீர்ப்படுத்துவதற்கு விரும்பும் ஜனாதிபதி, அதை வெறும் பிரகடனங்களின் மூலமும் படை மற்றும் அரச அதிகாரத்தின் மூலமும் செயற்படுத்த முடியாது. ஆனால், அப்படித்தான் அவர் சிந்திக்கிறார். அதற்கேற்றவாறே அவர் செயற்பாடுகளையும் மேற்கொணடு வருகிறார்.

என்றபடியாற்தான் அவர் ஒரே சின்னத்தில் அவருடன் இணக்கத்துக்கு வந்துள்ள கட்சிகளையும் உள்ளடக்க முனைகிறார். எனவேதான் கடந்த காலங்களில் நடைபெற்ற தேர்தல்களில் எல்லாம் வெற்றிலைச் சின்னத்தில் ஆதரவுக் கட்சிகளை எல்லாம் அவர் போட்டியிட வைத்தார்.

இது பிராந்தியத் தன்மைகளையும் பன்மைத்துவ அடையாளங்களையும் ஏற்றுக்கொள்ள விரும்பாத ஒரு நிலையின் வெளிப்பாடாகும்.

தன்னுடைய நிலைப்பாட்டுக்கும் தீர்மானத்துக்கும் அவர் ஏதாவதொரு நியாயப்பாட்டையும் விளக்கத்தையும் சொல்லக்கூடும். ஆனால், மக்களைப் பொறுத்தவரை அது முக்கியமானதல்ல. அவர்கள் தங்களுடைய விருப்பங்களுக்கும் சுயாதீனத்தன்மைகளுக்குமே இடமளிப்பார்கள். இது ஒரு அடிப்படையான உண்மையாகும்.

இதேவேளை நாட்டிலுள்ள பல கட்சிகளும் அவற்றின் தலைவர்களும் அவற்றை ஆதரித்த மக்களும் வழங்கிய ஆதரவைக் கொண்டு மெய்யான நல்லிணக்கத்துக்கும் அரசியற் தீர்வை நோக்கிய புள்ளிகளை நோக்கியும் அவர் நகர்ந்திருக்க வேண்டும். ஆனால், அப்படியான நடைமுறைகள் எதையும் உணரக் கூடியதாக இலங்கையின் நிலைவரங்கள் அமையவில்லை.

ஜனாதிபதி தனக்கிருக்கும் மக்கள் ஆதரவையும் நிறைவேற்று அதிகாரத்தையும் பயன்படுத்தி, இன ஐக்கியத்துக்கான வழிகளைத் திறக்கலாம். அதற்கான வாய்ப்பும் பொறுப்பும் கடப்பாடும் அவருக்குண்டு. அவரை ஆதரித்தவர்களையும் எதிர்த்தவர்களையும் அவர் பாரபட்சப்படுத்தாமல், பொதுவாகக் கருதவேண்டும். ஜனநாயகத்தின் மீதான நம்பிக்கையை மக்களுக்கு ஏற்படுத்துவதற்குரிய நாகரீகத்தை அவர் அறிமுகப்படுத்த வேண்டும்.

போரின் முடிவுக்குப் பிறகு உருவாகியிருக்கும் புதிய நிலைமைகள், உண்மையிலேயே புதிய நிலைமைகள்தான் என்பதை அவர் நிரூபிக்க வேணும்.


புறத்திச் சமூகங்களாக பெரும்பான்மைச் சமூகத்தினராற் கருதப்படும் சிறுபான்மைச் சமூகங்களின் நம்பிக்கையை அவர் பெற்றுக்கொள்ள வேணும். அரசியல் இருப்புக்கும் ஆதாயங்களுக்குமாக பெரும்பான்மைச் சமூகங்களைத் திருப்திப்படுத்தி, அவர்களை வேறு திசைகளிலேயே தொடர்ந்தும் அழைத்துச் செல்வதாயின் அது ஜனாதிபதியின் விருப்பத்துக்கும் அவருடைய கூற்றுக்கும் மாறாகவே அமையும்.

அது இலங்கையை மேலும் துயரக் கிடங்கினுள்ளேயே தள்ளுவதாக அமையும்.

*- கிருஷ்ணமூர்த்தி அரவிந்தன் கட்டுரையிலிருந்து...*

## வெள்ளைக்கொடி வழக்கு

# சட்டத்தரணிகள் செயல் குறித்து மேல் நீதிமன்ற நீதிபதி கண்டனம்



(கொழும்பு)

வெள்ளைக்கொடி வழககின் தீர்ப்பு அளிக்கப்பட்டதன் பின்னர் சட்டத்தரணிகள் சிலர் நீதிமன்றில் செயறபட்ட விதம் குறித்து கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி தீபாலி விஜேசுந்தர நேற்றுமுன்தினம் திறந்த நீதிமன்றில் தனது கண்டனத்தை வெளியிட்டுள்ளார். தீர்ப்பு வழங்கப்பட்டதன் பின்னர் ஜனநாயக தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சரத் பொன்சேகா சிறைச்சாலை அதிகாரிகளினால் நீதிமன்றிற்கு வெளியே அழைத்துச் செல்லப்படுவதற்கு தயாரான போது சில சட்டத்தரணிகள் கலகம் ஏற்படுத்தும் வகையில் செயற்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

சரத் பொன்சேகா தொடர்பில் வழங்கப்பட்ட தீர்ப்பு குறித்து யாரேனும் திருப்தி கொள்ளவில்லை எனில் அது தொடர்பில் மேன்முறையீடு செய்யமுடியும் என நீதிபதி தீபாலி விஜேசுந்தர தெரிவித்தார்.

சட்டத்தரணிகளின் இவ்வாறான செயற்பாடுகள் தொடர்பில் ஊடகங்களின் மூலம் வெளிப்படுத்தவில்லை என சுட்டிக்காட்டிய அவர், அவ்வாறான நடவடிக்கைகள் ஊடகங்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும் எனத் தெரிவித்தார்.

நீதிமன்றக் கட்டமைப்பில் இவ்வாறான முறையற்ற செயற்பாடொன்று எதிர்காலத்தில் இடம்பெறாமல் இருக்க கடும் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என அவர் திறந்த நீதிமன்றில் நேற்று கேட்டுக்கொண்டார்.

# ஜப்பானியப் பிரஜையை கைது செய்ய உத்தரவு

(கொழும்பு)

வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பெற்றுத் தருவதாகக் கூறி, இளைஞர்கள் பலரிடம் மோசடி செய்ததாக குற்றஞ் சுமத்தப்பட்டுள்ள ஜப்பானிய பிரஜையொருவரையும், இலங்கையர் ஒருவரையும் கைது செய்யுமாறு கொம்பனித்தெரு பொலிஸாருக்கு கொழும்பு கோட்டை நீதவான் உத்தரவிட்டார்.

இது தொடர்பாக கைது செய்யப்பட்ட மற்றொரு இலங்கையரான சந்தன பிரியங்கர என்பவர், மேற்படி இளைஞர்களை குறித்த ஜப்பானிய பிரஜை நேர்காணல் செய்வதற்கு ஏற்பாடு செய்ததாக நீதி மன்றத்தில் பொலிஸார் கூறினார்.

சந்தேக நபரான சந்தன பிரியங்கரவை டிசம்பர் 5 ஆம் திகதி வரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு கோட்டை நீதவான் லங்கா ஜயரட்ன உத்தரவிட்டார். அத்துடன் இம்மோசடியில் சம்பந்தப்பட்டதாகக் குற்றஞ் சுமத்தப்பட்ட ஜப்பானிய பிரஜையையும் இலங்கையரையும் கைது செய்யுமாறும் நீதவான் உத்தரவிட்டார்.

## வெளிநாட்டு தொலைபேசி கட்டணங்கள் அதிகரிப்பு

(கொழும்பு)

வெளிநாடுகளுக்கான தொலைபேசி அழைப்புக் கட்டணங்களை அதிகரிக்கப் போவதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

வரவுசெலவுத் திட்டத்தில் வெளிநாட்டுத் தொலைபேசி அழைப்புகளுக்கு, நிமிடம் ஒன்றுக்கு விதிக்கப்படும் வரி ஒரு ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

முன்னர் 2 ரூபா அறவிடப்பட்ட நிமிடம் ஒன்றுக்கான வெளிநாட்டுத் தொலைபேசி அழைப்புக்கான வரி இனிமேல் 3 ரூபாவாக அறவிடப்படவுள்ளது.


## நாடாளுமன்ற குழப்பநிலை விசாரணை ஆரம்பம்

(கொழும்பு)

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடபெற்ற வரவு, செலவுத்திட்ட உரையின்போது குழப்பம் விளைவித்தமை தொடர்பில் விசாரணை ஆரம்பிக்கவுள்ளதாக சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தனது கட்சி உறுப்பினர்களுக்கு தற்போதைய சூழ்நிலையில் நாடாளுமன்றத்தில் பாதுகாப்பானதொரு நிலைமை இல்லையென எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தமைக்கு பதிலளிக்கும் விதமாக சபாநாயகர் இவ்வாறு கூறியுள்ளார். நாடாளுமன்ற விதிமுறைகளின்படி நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட முறையில் பாதுகாப்பு வழங்கப்பட வேண்டுமென ரணில் விக்கிரமசிங்க கூறினார். நாடாளுமன்றத்தினுள் எங்களது பாதுகாப்புக்கு உத்தரவாதம் இல்லையென்றால் நாம் என்ன செய்வது எனவும் ரணில் விக்கிரமசிங்க கேள்வியெழுப்பினார்.

# இலங்கை ரூபாவின் மதிப்பு மூன்று வீதத்தால் குறைப்பு



(கொழும்பு)

இலங்கையின் நாணயம் நேற்று வீதத்தினால் மதிப்பிறக்கம் செய்யப்பட்டது.

இலங்கை மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் இந்தத் தகவலை உறுதிப்படுத்தியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் வரவுசெலவுத் திட்டத்தை சமர்ப்பித்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நாணய மதிப்பிறக்கம் செய்யும் யோசனையை அறிவித்திருந்தார்.

இதையடுத்து இலங்கையின் மத்திய வங்கி ஆளுநரிடம் கேள்வி எழுப்பிய போதே, ரூபாவின் மதிப்பு நேற்று முதல் 3 வீதத்தினால் குறைக்கப்பட்டதை உறுதிப்படுத்தினார். ஐரோப்பிய கடன் நெருக்கடியை அடுத்து பிலிப்பைன்ஸ் தொடக்கம் மலேசியா வரையான ஆசிய நாடுகளைப் பின்பற்றி இலங்கையும் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது.

இந்தியா தொடக்கம் தாய்லாந்து வரையான கொள்கை வகுப்பாளர்கள் தமது நாணயத்தின் பெறுமதியைக் குறைக்க அனுமதித்த போதும் இலங்கை ரூபாவின் மதிப்பு இந்த ஆண்டு 0.5 வீதம் அதிகரித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையுடன் போட்டியிடும் நாடுகள் தமது நாணயத்தின் பெறுமதியைக் குறைக்கும் நிலையில், ஏற்றுமதித் துறைக்கு ஏற்படும் பின்னடைவை ஈடு செய்ய இலங்கை ரூபாவின் மதிப்பை 3 வீதத்தினால் குறைக்குமாறு மத்திய வங்கியிடம் கோருவதாக ஜனாதிபதி நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார்.

இதன் அடிப்படையிலேயே நேற்றுத் தொடக்கம் இலங்கை நாணயம் மூன்று வீதத்தினால் மதிப் பிறக்கம் செய்யப்பட்டதாக அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

## பொலிஸ் பதிவு குறித்து அஞ்சத் தேவையில்லை



(கொழும்பு)

கொட்டாஞ்சேனைப் பகுதியில் வாழும் மக்களை பொலிஸ் நிலையத்தில் பதிவு செய்யுமாறு கோரியிருப்பது சம்பந்தமாக தமிழ் மக்கள் எவ்விதமான பதற்றமும் அடையத் தேவையில்லையென கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பிரபா கணேசன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து மேலும் அவர் தெரிவித்ததாவது, இது தமிழ் மக்களுக்கு மட்டும் உரிய விடயமல்ல என்பது தெளிவுபடுத்தப்பட்டது. மேலும் இலங்கையிலுள்ள அனைத்து பொலிஸ் நிலையங்களிலும் இப்படியான நடவடிக்கைகளை மேற் கொள்வதற்கு பாதுகாப்பு அமைச்சு தீர்மானித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கொட்டாஞ்சேனை பொலிஸ் நிலையத்திற்கு புதிய கணினி வசதிகள் வழங்கப்பட்டுள்ளன. இந்த கணினிகள் மூலமாக இந்தப் பொலிஸ் நிலையத்திற்கு அதிகாரமுள்ள பகுதியில் வசிக்கும் சிங்கள, தமிழ், முஸ்லிம் இன மக்களின் முழுமையான விபரங்களும் பதியப்படுகின்றன. இலங்கையில் மட்டுமன்றி வேறுபல முன்னேற்றமடைந்த நாடுகளிலும் இப்படியான பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவை மக்களுக்கு நன்மையைத் தருமேயொழிய எவ்விதமான பாதிப்பையும் ஏற்படுத்தாது எனத் தெரிவித்தார்.

# சிறுவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு சம்பந்தப்பட்ட நிர்வாக குழுக்களுக்குப் பயிற்சி



(கொழும்பு)

தனியார் மற்றும் அரச சிறுவர் இல்லங்களின் நிர்வாகிகளினதும், ஊழியர்களினதும் செயற்திறனை மேம்படுத்தும் திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இத் திட்டத்தினை அவசர தேவைகருதி முன்னெடுக்க நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் திணைக்களம் தீர்மானித்துள்ளதாக திணைக்களத்தின் ஆணையாளர் சரத் அபே குணவர்த்தன தெரிவித்தார்.

சிறுவர்களுக்கு ஏற்ற சூழலை உருவாக்கும் பொறுப்பு குறித்த இல்லங்களின் அதிகாரிகளுக்கு உள்ளதாக சுட்டிக்காட்டிய அவர், நாட்டிலுள்ள பல சிறுவர் இல்லங்களில் கடந்த காலங்களில் பதிவான சம்பவங்களைக் கருத்திற் கொண்டு இத்திட்டத்தை முன்னெடுக்கத் தீர்மானித்ததாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

சிறுவர்கள் பராமரிப்பு இல்லங்களிலுள்ள ஊழியர்களின் அறிவு மற்றும் செயற்திறன் ஆகியவற்றில் மாற்றத்தை ஏற்படுத்தவும், சிறுவர் உரிமைகளைப் பாதுகாக்கும் வகையிலும் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாக சரத் அபே குணரத்ன தெரிவித்தார்.

## வெலிக்கடை சிறையில் இட நெருக்கடி வேறு இடங்களுக்கு கைதிகள் மாற்றம்

(கொழும்பு)

வெலிக்கடை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சுமார் 2000 கைதிகள் தற்போது மஹர மற்றும் வடறுக்க சிறைச்சாலைகளுக்கு மாற்றப்பட்டுள்ளனர். 2013 ஆம் ஆண்டளவில் வெலிக்கடை சிறைச்சாலையை கொழும்பிலிருந்து இடம் மாற்றுவதற்கு திட்டமிட்டுள்ளதாக புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் சந்திரசிறி கஜதீர குறிப்பிட்டார். தற்போது நான்காயிரத்துக்கும் அதிகமான கைதிகள் வெலிக்கடை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்களை அங்கிருந்து வெளியேற்றுவதற்காக மஹர மற்றும் வடறுக்க சிறைச்சாலைகளில் கட்டடங்களை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் சந்திரசிறி கஜதீர மேலும் சுட்டிக்காட்டினார்.

## மனிதவள அபிவிருத்தியில் இலங்கைக்கு முதலிடம்

மனிதவள அபிவிருத்தியில் தெற்காசிய வலயத்தில் இலங்கை முதலிடத்தைப் பெற்றுள்ள ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி செயற்திட்டம் இன்றைய தினம் வெளியிட்டுள்ள 2011 ஆம் ஆண்டிற்கான மனிதவள அபிவிருத்தி அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது. 187 உலக நாடுகளை உள்ளடக்கியுள்ள இந்த அறிக்கைக்கு அமைய இலங்கை மனிதவள அபிவிருத்தியில் 97 ஆவது இடத்தை வகிக்கின்றது.

அயல் நாடுகளான இந்தியா 134 ஆவது இடத்திலும், பாகிஸ்தான் 145 ஆவது இடத்திலும் உள்ளன. பங்களாதேஷிற்கு 46 ஆவது இடமும், நேபாளத்திற்கு 157 ஆவது இடமும் கிடைத்துள்ளன. இதனைத் தவிர பூட்டான் 141 ஆவது இடத்திலும், ஆப்கானிஸ்தான் 172 ஆவது இடத்திலும் இருப்பதாக ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி செயற்திட்டம் வெளியிட்டுள்ள 2011 ஆம் ஆண்டிற்கான மனிதவள அபிவிருத்தி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது

# ரயில் சேவையினை அதிகரிப்பதற்கு நடவடிக்கை

(கொழும்பு)

தேசிய போக்குவரத்துக் கட்டமைப்பில் ஐந்து வீதமாகக் காணப்படும் ரயில் சேவையினை மேலும் 10 வீதமாக உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக ரயில்வேத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதற்குத் தேவையான நடவடிக்கைகளை எதிர்காலத்தில் முன்னெடுப்பதற்கு திட்டமிட்டுள்ளதாக ரயில்வேத் திட்டமிடல் பணிப்பாளர் விஜய சமரசிங்க தெரிவித்தார்.

இதேவேளை சூழலுக்கு பொருத்தமான போக்குவரத்து சேவைகளுக்குள், சுழலுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படுத்தாத போக்குவரத்து சேவையாக ரயில் சேவை அமைந்துள்ளதாக சூழல் மாநாடுகள் இரண்டில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

தற்போது 51 ரயில் கட்டமைப்புகளும், 60 போக்குவரத்து எஞ்சின்களும் காணப்படுவதாக ரயில்வேத் திணைக்களம் சுட்டிக்காட்டுகின்றது. அத்துடன் நாளாந்தம் 325 ரயில் சேவைகள் முன்னெடுக்கப்படுவதாக விஜய சமரசிங்க குறிப்பிட்டார்.

இதன் மூலம் நாளாந்தம் மூன்று இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் ரயில் சேவைகளின் ஊடாக தமது போக்குவரத்து நடவடிக்கைகளை முன்னெடுப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். நாட்டிலுள்ள போக்குவரத்து சேவைகளுள் ரயில் சேவை மிகவும் சிறந்தவொன்றாக அமைந்துள்ளதாக ரயில்வே திட்டமிடல் பணிப்பாளர் விஜய சமரசிங்க மேலும் குறிப்பிட்டார். இதேவேளை வடக்கிலும் 2013 முதல் புகையிரத சேவை ஆரம்பமாகவுள்ளது குறிப்பிடத்தக்கது.

பின்வரும் மேலதிக தகவல்களும் உமக்குத் தரப்படுகின்றன.

அ) 2010 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு,

முன்னதாகச் செலுத்தப்பட்ட கட்டட வாடகை ரூபா 6000

அட்டுற்ற விற்பனைகள் தரகுக் கூலி ரூபா 3000

ஆ) விநியோக வாகனங்கள் நேர்கோட்டு முறையின் கீழ் ஆண்டொன்றிற்கு 20 வீத படி தேய்மானம் செய்யப்படும்.

பின்வருவனவற்றைத் தயாரிக்குமாறு நீர் கேட்கப்படுகிறீர்.

1) 2010 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டுக்கான இலாநட்டக் கணக்கு.

2) 2010 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு ஐந்தொகை.

## கற்றலுக்குத் தேவையான பாடக் குறிப்புக்கள் - வணிகக் கல்வி

01. நிரல் (அ) இல் பணவகைகள் சிலவும் நிரல் (ஆ) இல் அவ்வகைக்கு உதாரணமும் தரப்பட்டுள்ளன.

| நிரல் (அ) | நிரல் (ஆ) |
|---|---|
| 1. பண்டப் பணம் | A - காசோலை |
| 2. சட்டப் பணம் | B - கடற்சிற்பி |
| 3. வங்கிப் பணம் | C - கடனட்டை |
| 4. இலத்திரன் பணம் | D - தாள், உலோக நாணயம் |

நிரல் (அ) இல் உள்ள பண வகைகளின் ஒழுங்கின்படி நிரல் (ஆ) வின் உதா ரணங்களைச் சரியாகப் பொருந்தினால் கிடைக்கும் வரிசை பின்வருவன வற்றுள் எது?

1. ADCB 2. BCAD 3. BDAC 4. DBAC

02. தேவைகளையும் விருப்பங்களையும் நிறைவுசெய்து கொள்வதற்காகப் பண்டங்களையும் சேவைகளையும் பிறருக்காக உருவாக்கிக் கொள்ளும் செயன்முறை எவ்வாறு அழைக்கப்படும்?
1. முதனிலை உற்பத்திகள் 2. நேரில் உற்பத்திகள்
3. சிற்றளவு உற்பத்திகள் 4. நேர் உற்பத்திகள்

03. வணிகமென்பது மனிதத் தேவைகள் விருப்பங்களை நிறைவுசெய்து கொள்வதற்காக இடம்பெறும் பொருளாதாரச் செயற்பாடுகள்.
1. ஒவ்வொன்றும் ஆகும் 2. ஏதாவது ஒன்று ஆகும்
3. எந்த ஒன்றும் ஆகும் 4. அனைத்தும் ஆகும்

04. நல்ல பணத்தின் தொழிற்பாடுகளும் இயல்புகளும் வகுக்கப்பட்டுள்ளன. இவற்றில் எது பிரதான தொழிற்பாடு ஆகும்.
1. பரிமாற்றும் ஊடகம் 2. பொது அங்கீகாரம்
3. பெறுமான அளவீடு 4. நெடு வாழ்வு

05. ஆக்கக் கைத்தொழில் விருத்தியடைவதில் செல்வாக்குச் செலுத்திய பிரதான காரணியாகக் கருதக்கூடியது எது?
1. தகவல் தொழில்நுட்பப் புரட்சி 2. கைத்தொழில் புரட்சி
3. தனியாள் சிறக்குமியல்பு 4. தொழிற் பிரிப்பு

06. 2007 இன் 7ஆம் இலக்கச் சட்டத்தின்படி எவ்வகையான வணிகங்கள் அமைக்கப்படுவது இலகுவாக்கப்பட்டுள்ளது.
1. வரையறுத்த கம்பனிகள் 2. தனியுடமை
3. பங்குடமை 4. கூட்டுறவு நிறுவனங்கள்

07. வணிகத் திட்டமொன்றைத் தயாரிக்க முன், மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாது?
1. பதிவு செய்தல் 2. சந்தை ஆய்வு செய்தல்
3. ஊழியர்களைச் சேர்த்தல் 4. நிதியைத் திரட்டுதல்

08. 1918 இன் 6 ஆம் இலக்க வணிகப் பெயர்கள் கட்டளைச் சட்டத்தின் கீழ் பதிவு செய்து கொள்ளப்படாத நிறுவனம்.
1. கொழும்பு தமிழ்ச் சங்கம் 2. ராதா ரேடிங் கம்பனி
3. மோகன் சகோதரர்கள் 4. வரையறுத்த கண்ணன் கம்பனி

09. இலக்கு நுகர்வோர் யார்?
1. சந்தையில் உள்ள நுகர்வோரில் தெரிவு செய்த ஒரு குழுவினர்
2. சந்தையில் உள்ள நுகர்வோரில் தெரிவு செய்த ஒன்று அல்லது மேற்பட்ட குழுவினர்
3. சந்தையில் உள்ள அனைத்து நுகர்வோர் குழுவினர்
4. சந்தையில் உள்ள அனைத்து நுகர்வோர்

10. தொழில் முகவர் நிலையமொன்றை நடத்திவரும் அருணகிரி என்பவர் வங்கிக் கணக்கொன்றை ஆரம்பித்து காசோலைகளைப் பயன்படுத்த விரும்புகின்றார். அவர் பின்வருவனவற்றில் எதனைத் தெரிவு செய்ய வேண்டும்.
1. நடைமுறைக் கணக்கு - இலங்கை வங்கி
2. நடைமுறைக் கணக்கு - இலங்கை மத்திய வங்கி
3. சாதாரண சேமிப்புக் கணக்கு - மக்கள் வங்கி
4. நிலையான சேமிப்புக் கணக்கு - தேசிய சேமிப்பு வங்கி





திரு. T.S.திலக் (ஆசிரியர்)

# க.பொ.த.சா/தரப் பரீட்சை - 2011

நேரம் - 3 மணி

# கல்வி முரசு

## வணிகக் கல்வியும் கணக்கீடும் - பகுதி II



S.சுகுமாரன் (ஆசிரியர்)

**யாழ்.மாவட்டத்திலுள்ள 5 வலயங்களின் ஆசிரிய ஆலோசகர்கள், கற்பித்தல் செயற்பாட்டில் முன்னணியிலுள்ள ஆசிரியர்களால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்**

**i) முதலாம் வினா உட்பட பகுதி 1 இலிருந்து இரண்டு வினாக்களையும், பகுதி 11 இலிருந்து இரண்டு வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.**

**ii) உமது விடைகளைத் தெளிவான கையெழுத்தில் எழுதுக.**

01. i) க.பொ.த சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றிய பின்னர் சாந்தன் குறுகிய காலக் கற்கை நெறியொன்றைப் பயில எதிர்பார்க்கின்றான். அவன் பேச்சு ஆங்கிலம், கணினி அறிவு, முயற்சியாண்மைப் பயிற்சி ஆகிய மூன்று குறுகிய காலக்கற்கை நெறிகள் தொடர்பாக கவனஞ் செலுத்தியவாறு 'என்ன செய்வது' எனச் சிந்தித்துக் கொண்டிருக்கின்றான்.

அ) மேற்படி சம்பவத்தில் அடங்கியுள்ள தேவைகள், விருப்பங்கள் ஆகியவற்றை வேறுபடுத்திக் காட்டுக.

ஆ) அத்தேவைகளுக்கும் விருப்பங்களுக்கும் இடையிலான அடிப்படை வேறுபாட்டைக் குறிப்பிடுக.

ii) வணிக நடவடிக்கைகளில் செல்வாக்குச் செலுத்தும் பொருளாதாரச் சூழல் காரணிகள் நான்கைக் குறிப்பிடுக.

iii) உற்பத்திகளைத் தரநிர்ணயம் செய்வதால் நுகர்வோருக்குக் கிடைக்கும் நான்கு அனுகூலங்களைத் தருக.

iv) சாதாரண பங்குகளில் முதலீடு செய்வதால் ஒருவர் பெறத்தக்க நான்கு அனுகூலங்களைத் தருக.

v) அ) கடன் அட்டை பயன்பாடு மக்களிடையே பிரபல்யமடைந்திருப்பதற்கான இரண்டு காரணங்களைத் தருக.

ஆ) இலங்கையில் கடன் அட்டைப் பயன்பாட்டை வரையறுக்கும் இரண்டு காரணிகள் தருக.

பின்வரும் தகவலைப் பயன்படுத்தி (vi) தொடக்கம் (x) வரையுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.
31.10.2010 இல் முடிவடைந்த இரண்டு வாரங்களுக்கான தர்சன் வணிகத்தின் சில கொடுக்கல் வாங்கல்கள் பின்வருமாறு

| | |
|---|---|
| ஈடுபடுத்திய மூலதனம் | ரூ. 500,000 |
| கட்டடம் வாங்கியது | ரூ. 250,000 |
| காசுக்குக் கொள்வனவு செய்த சரக்குகள் | ரூ. 100,000 |
| கொடுத்த சம்பளம் | ரூ. 50,000 |
| காசுக்குக் கொள்வனவு செய்த சரக்குகள் அனைத்தும் விற்பனை செய்தது | ரூ. 200,000 |
| பெற்றுக்கொண்ட வங்கிக் கடன் | ரூ. 100,000 |

vi) 31.10.2010 இல் தர்சன் வணிகத்தின் காசு மீதி எவ்வளவு?

vii) மேற்கூறிய கொடுக்கல் வாங்கல்களைப் பதிவதற்குப் பயன்படுத்தப்பட்ட முதன்மை ஏட்டையும் பொருத்தமான மூல ஆவணங்களையும் குறிப்பிடுக.

viii) 31.10.2010 இல் முடிவடைந்த இரண்டு வாரங்களுக்கான இவ்வணிகத்தின் தேறிய இலாபம் யாது?

ix) 31.10.2010 இல் வணிகத்தின் மூலதனம் எவ்வளவு?

x) 31.10.2010 இல் உள்ளவாறு ஒரு கணக்கீட்டுச் சமன்பாட்டில் இவ்வணிகத்தின் சொத்துக்கள் பொறுப்புக்கள் மற்றும் மூலதனம் ஆகியவற்றைக் குறிப்பிடுக.

# பகுதி -II வணிகக் கல்வி

**(இரண்டு வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக)**

02. 1) வணிகங்கள். தற்போதைய நிலை வரையில் விருத்தியடைந்தமையானது பல்வேறு கட்டங்களூடாக நிகழ்ந்துள்ளது. அவ்வறான பல்வேறு கட்டங்களையும் ஒழுங்குமுறைப்படி தருக.

2) தற்காலத்தில் கொடுக்கல் வாங்கல்களை ஈடுசெய்வதற்காகப் பயன்படுத்தக்கூடிய கொடுப்பனவு உபகரணங்கள் நான்கைக் குறிப்பிடுக.

3) பேரண்டச் சூழல் (புற) சக்திகள் நான்கினைக் குறிப்பிட்டு, அவ்வொவ்வொரு சக்தியின் கீழும் அடங்கும் ஒவ்வொரு காரணி வீதம் தருக.

4) தனியுடைமை, பங்குடமை, கம்பனிகள் என்றவாறாக பல்வேறு வகையான வணிக அமைப்புக்கள் உள்ளன. எனினும் இவை எல்லாவற்றுக்கும் பொதுவான பண்புகள் உள்ளன. அவ்வாறான பொதுவான நான்கு பண்புகளைத் தருக.

03. 1) வணிகத்திட்டமொன்றில் உள்ளடங்க வேண்டிய பிரதானமான பகுதிகளைக் குறிப்பிட்டு, அவற்றுள் ஒரு பகுதி தொடர்பாகச் சுருக்கமாக விளக்குக.

2) அ. காசோலையொன்றில் கோடிடுதலின் நோக்கம் யாது? அது எவ்வாறு செய்யப்படும்?
ஆ. காசோலையொன்றில் புறக்குறிப்பிடுதல் என்பதால் கருதப்படுவது யாது?

3) பின்வரும் தொடர்பாடல் ஊடாக ஒவ்வொன்றிற்கும் இரண்டு உதாரணங்கள் வீதம் தருக.
1. வாய்மொழி மூல ஊடகம்
2. எழுத்து மூல ஊடகம்
3. மின் (இலத்திரனியல்) ஊடகம்

4) இலங்கையில் பின்வரும் போக்குவரத்துச் சேவைகளை வழங்கும் நிறுவனங்கள் / அமைப்புக்கள் யாவை?
1. பயணிகள் போக்குவரத்துச் சேவை
2. புகையிரத சேவை
3. விமான சேவை

4) 1. அ. முறைமையான களஞ்சியப்படுத்தலைப் பேணிவரும் வணிகரொருவர் பெறக்கூடிய இரண்டு அனுகூலங்களைக் குறிப்பிடுக.
ஆ. முறையான களஞ்சியப்படுத்தல் இல்லாதபோது தோன்றக்கூடிய இரண்டு பிரச்சினைகளைக் குறிப்பிடுக.

2. வணிகமொன்றுக்கு நிதியீட்டக்கூடிய வெவ்வேறுபட்ட நான்கு முறைகளைக் குறிப்பிடுக.
3. வணிகமொன்றுக்கு நிதியீட்டும் போது அவ்வணிகர் கவனஞ்செலுத்த வேண்டிய விடயங்கள் யாவை?
4. கொழும்புப பங்குச் சந்தையில் பங்குகளில் முதலீடு செய்வதால் ஒருவர் பெறக்கூடிய பயன்கள் யாவை?

5) 1. பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் ஒவ்வொன்றும் வருமானச் செலவா அல்லது மூலதனச் செலவாஎனக் குறிப்பிடுக.
அ. அலுவலக முகாமையாளருக்குச் செலுத்தப்பட்ட சம்பளம் ரூபா 25000
ஆ. உடன் காசுக் கொள்வனவுகள் ரூபா 30000
இ. ஒப்படைப்பு வாகனத்திற்குப் புதிய எஞ்ஜின் ஒன்று பொருத்தப்பட்டமை ரூபா 75000
ஈ. அலுவலக உபயோகத்திற்கென நான்கு கதிரைகளைக் கொள்வனவு செய்தமை ரூபா 10000

ii. 31.12.2010 இல் சமீனா வியாபாரத்தின் காசேட்டு வங்கி மீதி ரூ.9750 ஆகும். அன்றைய தினம் வங்கிக் கூற்று மீதி ரூ.10 650 ஆகும். சமீனாவினால் பின்வரும் தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டன.
1. வங்கிக் கணக்கில் செலவு வைக்கப்படாத காசோலை ரூ.3500
2. வழங்கப்பட்டு இன்னமும் வங்கிக்கு சமர்ப்பிக்கப்படாத காசோலை ரூ.4000 ஆகும்.
3. வரிகள் ரூ.100 வங்கியால் நேரடியாக வரவு வைக்கப்பட்டபோதும் இன்னமும் காசுப் புத்தகத்தில் பதிவு செய்யப்படவில்லை.
4. நிலையான கட்டளைக் கொடுப்பனவுகள் ரூ.1500 இன்னமும் காசுப் புத்தகத்தில் பதிவு செய்யப்படவில்லை.
5. வங்கிக் கணக்கில் செலவு வைக்கப்பட்ட வட்டி வருமானம் ரூ.2000 ஆகும்.
அ) காசுப் புத்தகத்தை (வங்கி நிரல்) தயாரிப்பத்துடன் செம்மையாக்கப்பட்ட காசு மீதியைக் கணிப்பிடுக.
ஆ) 31.12.2010 இற்கான வங்கிக்கூற்று மீதியுடன் செம்மையாக்கப்பட்ட காசுப் புத்தக மீதியை ஒப்பிடக் கூடியவாறு வங்கிக் கணக்கு இணக்கக் கூற்றைத் தயாரிக்குக.



06. 1. அ) விளையாட்டுக் கழகங்கள், தொழிற்சங்கங்கள், நலன்புரி நிலையங்கள் போன்ற சமூகநல நோக்குடைய நிறுவகங்களிலும் கூட கணக்கீட்டுச் செயன்முறை ஏன் பேணப்பட்டு வருகின்றது என்பதற்கு இரு காரணங்கள் தருக.

ஆ) பாடுமீன் விளையாட்டுக் கழகத்தின் 2010 ஆம் ஆண்டுக்கான பின்வரும் தகவல்கள் உமக்குத் தரப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| 2010.01.01 இல் அட்டுற்றுநின்ற அங்கத்தவக் கட்டணங்கள் | ரூ. 2000 |
| ஆண்டின்போது கிடைக்கப்பெற்ற அங்கதவக் கட்டணங்கள் | ரூ. 10000 |
| விளையாட்டு உபகரணங்களின் கொள்வனவு | ரூ. 5000 |
| விலைக்கு வாங்கிய புதினத்தாள்கள் | ரூ. 500 |
| கிடைக்கப்பெற்ற நன்கொடை | ரூ. 1000 |
| வாடகைகள் | ரூ. 3000 |
| பணியாளர்களுக்கான சம்பளம் | ரூ. 3500 |
| காகிதாதிகள் கொள்வனவு | ரூ. 500 |
| மின்சாரம் | ரூ. 2000 |


விளையாட்டுக் கழகத்தில் 150 அங்கத்தவர்கள் சேர்ந்துள்ளனர்.
ஆண்டுக்குரிய சந்தாப்பணம் ரூபா 100 ஆகும்.
தேவைப்படுவது:
2010.12.31 இல் முடிவுற்ற ஆண்டுக்கான வருமானச் செலவீட்டுக் கணக்கு.

2. 2010.12.31 இல் இருந்தபடி சாரங்கன் வணிக முயற்சியின் பரீட்சை மீதி சமப்பாடு எய்தாதிருந்த காரணத்தால் வேறுபட்டிருந்த ரூபா 10000 ஆன தொகை தொங்கற்கணக்குக்கு வரவு வைக்கப்பட்டது அதன் பின்னர் பின்வரும் வழுக்கள் கண்டுபிடிக்கப்பட்டன.
1. செலுத்தப்பட்ட ரூபா 1000 ஆன மின்சாரணக் கணக்கிற்கு பதியப்பட்டிருக்கவில்லை.
2. நாதன் எனும் கடன்கொடுத்தோனுக்குச் செலுத்தப்பட்ட ரூபா 20000 ஆன தொகை நாதனின் கணக்கில் ரூபா 2000 ஆகப் பதியப்பட்டிருந்தது.
3. விற்பனைகள் ஏட்டின் மொத்தத் தொகையான ரூபா 65000
4. விற்பனைகள் கணக்கில் ரூபா 56000 ஆகப் பதியப்பட்டிருந்தது.
தேவைப்படுவன:
அ) இவ்வழுக்களைத் திருத்துவதற்கான குறிப்பேட்டுப் பதிவுகள்
ஆ) தொங்கற்கணக்கு

07. 2010 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு ஸ்ரார் வியாபாரிகள் நிறுவனத்தின் பரீட்சை மீதி பின்வருமாறு:

| | வரவு | செலவு |
|---|---|---|
| மொத்த இலாபம் | - | 250000 |
| கட்டட வாடகை | 36000 | - |
| அலுவலர்கள் சம்பளம் | 50000 | - |
| விற்பனைகள் தரகுக் கூலி | 47000 | - |
| விளம்பரப்படுத்தல் | 10000 | - |
| கடன் வட்டி | 15000 | - |
| வங்கிக் கட்டணங்கள் | 5000 | - |
| விநியோக வாகனங்கள் (கிரயம்) | 200000 | - |
| 2010 ஜனவரி 1 இல் உள்ளவாறு விநியோக வாகனங்களின் திரண்ட தேய்மானத்திற்கான ஏற்பாடு | | 25000 |
| வியாபாரக் கடன்பட்டோர் | 70000 | |
| காசும் வங்கியும் | 40000 | |
| 2010 ஜனவரி 1 இல் உள்ளவாறு மூலதனம் | - | 200000 |
| நீண்டகாலக் கடன் | - | 50000 |
| வியாபாரக் கடன் கொடுத்தோர் | - | 28000 |
| 2010 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு வியாபார இருப்பு | 80000 | - |
| | 553000 | 553000 |

## ஆஸிக்கு முதலாவது வெளிநாட்டு பயிற்றுநர்



(சிட்னி)

தென்னாபிரிக்காவைச் சேர்ந்த மிக்கி ஆர்தர் அவுஸ்ரேலிய கிரிக்கெட் அணியின் முதல் வெளிநாட்டு பயிற்சியாளராகப் பொறுப்பேற்கிறார். டிசம்பர் 1ஆம் திகதி நியூசிலாந்துக்கு எதிரான தொடருடன் மிக்கி ஆர்தர் அவுஸ்ரேலியாவின் பயிற்சியாளர் பொறுப்பை ஏற்கிறார்.

2015ஆம் ஆண்டு உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடர் வரை மிக்கி ஆர்தர் அவுஸ்ரேலிய கிரிக்கெட் அணியின் பயிற்சியாளராக நீடிப்பார் என்று அவுஸ்ரேலிய கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

இது தனக்குக் கிடைத்த கௌரவம் என்றும் இன்னொரு சர்வதேச அணியை பயிற்றுவிக்கக் கிடைத்திருக்கும் வாய்ப்பை பெருமையாகக் கருதுகிறேன் என்றும் ஆர்தர் தெரிவித்துள்ளார்.

அவுஸ்ரேலிய கிரிக்கெட் அணியின் பயிற்சியாளர் பதவிக்கு கடும் போட்டி இருந்தது. இதில் முன்னாள் அவுஸ்ரேலிய வீரர்கள் ஸ்டீவ் ரிக்சன், டொம் மூடி ஆகியோரும் போட்டியில் இருந்தமை குறிப்பிடத்தக்கது.

## சாதனை படைத்தது சார்ஜா மைதானம்

(சார்ஜா)


அதிக போட்டிகள் இடம்பெற்ற மைதானம் என்ற பெருமையை சார்ஜா மைதானம் பெற்றதுடன் உலக சாதனைப் புகத்தகத்திலும் இடம்பிடித்துள்ளது..

இலங்கை- பாகிஸ்தான் அணியுடனான 4 ஆவது ஒரு நாள் போட்டியுடன் சார்ஜா சர்வதேச மைதானத் தில் 201 போட்டிகள் இடம் பெற்றுள்ளன. இதேவேளை அதிக போட்டிகள் இடம் பெற்றது என்ற அடிப்படையில் இம்மைதானம் கின்னஸ் உலக சாதனைப் புத்தகத்தில் இடம்பிடித்தது.

உலகில் உள்ள எந்தவொரு மைதானத்திலும் இவ்வளவு அதிகளவான போட்டி இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. சார்ஜாவில் கிரிக்கெட் போட்டிகள் நடத்துவதற்கு என்று ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் 201 போட்டி கள் இடம்பெற்றுள்ளன.

இதேவேளை கின்னஸ் உலக சாதனை படைத்ததற்கான சான்றிதழ் இப்போட்டி இடம்பெற்றுக் கொண்டிருந்த போது சார்ஜா நாட்டு மன்னர், கல்வி அமைச்சரிடம் கையளிக்கப்பட்டது.

# இன்னும் ஒரேயொரு சந்தர்ப்பம் வழங்கக் கோருகிறார் டில்சான்



(அபுதாபி)

எனது எதிர்காலம் குறித்து தீர்மானிப்பதற்கு முன் இன்னும் ஒரேயொரு சுற்றுப் போட்டியில் இலங்கை அணிக்குத் தலைமை தாங்க விரும்புகின்றேன் என இலங்கைக் கிரிக்கெட் அணியின் தலைவர் திலகரட்ன டில்சான் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய அரபு எமிரேட்ஸில் நடைபெறும் இலங்கை அணியுடனான 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் பாகிஸ்தான் அணி தனது வெற்றியை உறுதிப்படுத்தியுள்ள நிலையில் டில்சான் இவ்வாறு கூறியுள்ளார்.

இந்நிலையில் அடுத்து நடைபெறவுள்ள தென்னாபிரிக்க சுற்றுலாவின் போது தான் தலைவராக நியமிக்கப்படுவாரா என்பது தனக்குத் தெரியவில்லை என டில்சான் தெரிவித்துள்ளார்.

தென்னாபிரிக்க சுற்றுலாவில் இலங்கை அணி 3 டெஸ்ட் போட்டிகள், 5 ஒருநாள் போட்டிகளில் விளையாடவுள்ளது.

அவர்களின் (தேர்வுக் குழுவினரின்) கருத்து என்ன என்பது தெரியவில்லை. ஆனால் நான் தென்னாபிரிக்க சுற்றுலா வரைக்கும் தலைவராக நியமிக்கப்பட்டேன். எனவே நான் நீக்கப்படுவேன் என எண்ணவில்லை. ஆனால் தென்னாபிரிக்க சுற்றுலாவிலிருந்து என்ன நடக்கிறது என்பதைப் பார்ப்போம். அணித்தலைவர் என்ற வகையில் நான் வீரர்களின் ஆட்டத்தில் மாற்றம் எதையும் ஏற்படுத்த முடியாது. ஓர் அணி என்ற வகையில் நாம் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

அதேவேளை பாகிஸ்தானுடனான நான்காவது போட்டியில் இலங்கை அணியின் 7 விக்கெட்டுகள் 19 ஓட்டங்களில் வீழ்ந்ததை நம்பமுடியாதுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# வஹாப் ரியாஸ் நீக்கம்

(லாகூர்)

பங்களாதேஷ் அணிக்கெதிரான தொடருக்கான பாகிஸ்தான் அணியிலிருந்து, வேகப்பந்துவீச்சாளர் வஹாப் ரியாஸ் நீக்கப்பட்டார்.

பங்களாதேஷ் சுற்றுப்பயணம் செய்யவுள்ள பாகிஸ்தான் அணி, ஒரே ஒரு ருவென்ரி-20, மூன்று ஒருநாள் மற்றும் இரண்டு டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்கிறது.

ருவென்ரி-20 போட்டி வரும் 29ஆம் திகதி மிர்புர் நகரில் நடைபெறவுள்ளது. டிசம்பர் 1, 3ஆம் திகதிகளில் முதலிரண்டு ஒருநாள் போட்டி மிர்புரில் நடைபெறவுள்ளது. டிசம்பர் 6ஆம் திகதி சிட்டகொங்கில் மூன்றாவது ஒருநாள் போட்டியும் நடைபெறவுள்ளது. முதல் டெஸ்ட் வரும் டிசம்பர் 9ஆம் திகதி சிட்டகொங்கிலும், இரண்டாவது டெஸ்ட் டிசம்பர் 17ஆம் திகதி மிர்புரிலும் நடைபெறவுள்ளது. இத்தொடருக்கான வீரர்களை, பாகிஸ்தான் கிரிக்கெட் சபை நேற்று முன்தினம் அறிவித்தது.

இதில் இடதுகை வேகப்பந்துவீச் சாளர் வஹாப் ரியாஸ் அதிரடியாக நீக்கப்பட்டார். கப்டன் பொறுப்பில் மிஸ்பா நீடிக்கிறார்.

டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிக்கான பாகிஸ்தான் அணி வருமாறு:

டெஸ்ட் அணி: மிஸ்பா (கப்டன்), முகமது ஹபீஸ், இம்ரான் பர்ஹாத், யூனிஸ் கான், ஆசாத் ஷபிக், சோயப் மலிக், ஜுனாட்கான், அய்ஜாஜ் சீமா, சயீத் அஜ்மல், அப்துல் ரஹ்மான், உமர் குல்.

உமர் அக்மல், அப்துல் ரசாக், அப்ரிடி, சர்பராஸ் அகமது, சோகைல் தன்வீர் ஆகியோர் ஒருநாள் போட்டிக்கு மட்டும் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

## ஆயுள் தடைக்குள்ளான ஜமைக்கா வீரர்

ஜமைக்கா தடகள வீரர் ஸ்டீவ் மல்லிங்ஸ் இரண்டாவது முறையாக ஊக்க மருந்து விவகாரத்தில் சிக்கியதால் அவரை ஆயுள் முழுதும் தடை செய்தது ஜமைக்கா ஊக்கமருந்து தடுப்பு ஒழுங்குக் குழு.

தடைசெய்யப்பட்ட மருந்துகளைப் பயன்படுத்துவதை ஒரு போதும் இனி தாங்கிக் கொள்ள முடியாது என்பதை உலகிற்கும் ஜமைக்கா தடகள வீரர்களுக்கும் அறிவுறுத்துவதாக இந்த தண்டனை அமையும் என்று அந்தக் குழு தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது. 4 நாட்களுக்கு முன்பு இவரது இரண்டாவது சிறுநீர் மாதிரி பரிசோதிக்கப்பட்ட போது தடைசெய்யப்பட்ட ஊக்கமருந்து இருந்தது தெரியவந்தது.


சிறுநீர் தடையில்லாமல் போவதற்கான பியூரோசிமைடு என்ற மருந்து அவரது சிறுநீரில் கலந்திருப்பது தெரியவந்தது. அதாவது பிற தடை செய்யப்பட்ட மருந்துகளை ஒருவர் எடுத் துக் கொண்டாலும் இந்த மருந்து அதனை மறைக்கும் திறனும் கொண்டது.

இந்த விசாரணையில் மல்லிங்ஸ் பங்கேற்கவில்லை. 28 வயதாகும் மல்லிங்ஸ் இதனை எதிர்த்து விளையாட்டு விவகாரங்களுக்கான சர்வதேச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யவிருக்கிறார்.

மல்லிங்ஸ் ஊக்கமருந்து எடுத்துக் கொண்டதற்கோ, அல்லது ஏற்கனவே இருககும் ஊக்கமருந்தின் சுவடுகளை மறைப்பதற்கு அவர் மருந்து எடுத்துக் கொண்டதற்கோ ஆதாரங்கள் இல்லை என்று அவரது வழக்கறிஞர் தெரிவித்துள்ளார்.

2004ஆம் ஆண்டு இவர் ஏற்கனவே டெஸ்டஸ்டரோன் அளவு அதிகம் இருந்ததற்காக இரண்டு ஆண்டுகள் தடை செய்யப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# மே.தீவுகள் நிதானமான ஆட்டம்



(மும்பை)

இந்திய அணிக்கெதிரான மூன்றாவது டெஸ்ட் போட்டியில் மேற்கிந்தியத்தீவுகள் அணி நிதானமாக ஆடி வருகின்றது.

மேற்கிந்தியத்தீவுகள், இந்திய அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் மூன்றாவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டி நேற்று மும்பையில் ஆரம்பமானது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்தியத்தீவுகள் அணி முதலில் துடுப்பாடத் தீர்மானித்தது. இதற்கமைய ஆரம்ப வீரர்களாகக் களமிறங்கிய பரத், பரத்வைட்ரி இணை மிகச் சிறப்பான ஆரம்பத்தை அணிக்குப் பெற்றுக் கொடுத்தது. ஆரம்ப விக்கெட்டுக்காக இணைந்த இவர்கள் இருவரும் 137 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்றனர். தொடர்ந்து வந்த எட்வேர்ஸ், பிராவோ ஆகியோரும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகின்றனர். இறுதியில் நேற்றைய முதல் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்த வேளை, மேற்கிந்தியத்தீவுகள் அணி இரண்டு விக்கெட்டுக்களை இழந்து 267 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதில் பரத் 62, பரத்வைட்ரி 68 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தனர். ஆட்டமிழக்காது பிராவோ 57, எட்வேர்ஸ் 65 ஓட்டங்களைப் பெற்று களத்திலுள்ளனர். வீழ்த்தப்பட்ட விக்கெட்டை அஸ்வின் கைப்பற்றிக் கொண்டார்.

இதேவேளை, காயம் காரணமாக சந்தர்போல் இப்போட்டியில் விளையாடவில்லை.

## விளையாட்டுச் செய்திகள்

### ரபேல் நடால் வெற்றி

லண்டனில் நடக்கும் ஏ.டி.பி. உலக இறுதி ரென்னிஸ் போட்டி யின் ஒற்றையர் 'பி' பிரிவில் நடந்த லீக் ஆட்டத்தில், முன்னணி வீரர் ரபேல் நடால் (ஸ்பெயின்) 6-2, 3-6, 7-6 (7-3) என்ற செட் கணக்கில் அமெ ரிக்காவின் மார்டி பிஷ்ஷை வீழ்த்தினார்.

### பயஸ் ஜோடி தோல்வி

ஏ.டி.பி., உலக இறுதி ரென்னிஸ் தொடரின் முதல் போட்டியில், இந்தியாவின் லியாண்டர் பயஸ், மகேஷ் பூபதி ஜோடி தோல்வி அடைந்தது.

நேற்று முன்தினம் நடந்த இரட்டையருக்கான 'ஏ' பிரிவு போட்டியில் இந்தியாவின் லியாண்டர் பயஸ், மகேஷ் பூபதி ஜோடி, சுவீடனின் ராபர்ட் லிண்ட்ஸ்டட், ருமேனியாவின் ஹோரியா டிகாயூ ஜோடியைச் சந்தித்தது. இதில் இந்திய ஜோடி 6-7, 1-6 என்ற நேர் செட்டில் தோல்வி அடைந்தது.

### சமநிலையில் டெஸ்ட் தொடர்

தென்னாபிரிக்காவுடனான 2ஆவது டெஸ்டில் அவுஸ்ரேலியா 2 விக்கெட் வித்தியாசத்தில் வென்று தொடரை சமன் செய்தது.

முதல் இன்னிங்சில் தென்னாபிரிக்கா 266 ஓட்டங்கள். அவுஸ்ரேலியா 296 ஓட்டங்கள் எடுத்தன. தென்னாபிரிக்கா 2ஆவது இன்னிங்சில் 339 ஓட்டங்கள் குவித்தது. அடுத்து 310 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய அவுஸ்ரேலியா, பரபரப்பான கடைசி நாள் ஆட்டத்தில் 8 விக்கெட் இழப்புக்கு இலக்கை எட்டியது. இதையடுத்து 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் 1-1 என்ற கணக்கில் சமனில் முடிந்தது.

### செல்சியா அணி தோல்வி


(புல்ஹாம்)

பிரிமியர் லீக் கால்பந்துத் தொடரின் லீக் போட்டியில் செல்சியா அணி தோல்வியடைந்தது.

இங்கிலாந்தில் நடக்கும் இத் தொடரின் லீக்போட்டியில் செல்சியா, லிவர்பூல் அணிகள் மோதின. முதல் பாதியில் ராட்ரிகுயிஜ்(33ஆவது நிமிடம்) கோல் அடிக்க, லிவர்பூல் அணி முன்னிலை பெற்றது. இதற்கு பதிலடியாக செல்சியா வின் டேனியல் (55ஆவது நிமிடம்) ஒரு கோல் அடிக்க, ஸ்கோர் 1-1 என, சமன் ஆனது. போட்டி முடிய சில நிமிடங்களுக்கு முன், கிளன் ஜான்சன் (87 ஆவது நிமிடம்) ஒரு கோல் அடிக்க, லிவர்பூல் அணி 2-1 என்ற கணக்கில் வெற்றி பெற்றது.

இந்தியச் செய்திகள்

# கூடங்குளம் அணுமின் நிலையம் முற்றுகை படகில் சென்று மீனவர்கள் கடலில் போராட்டம்



(நெல்லை)


கூடங்குளம் அணுமின் நிலையத்தை ஆயிரக்கணக்கான மீனவர்கள் படகுகளில் சென்று நேற்றுமுன்தினம் முற்றுகையிட்டனர். கூடங்குளம் அணுமின் நிலையத்தை மூடக்கோரி அப்பகுதி மக்கள் போராடி வருகின்றனர். மீனவர் தினமான நேற்றுமுன்தினம் கடல்வழியாகச் சென்று அணுமின் நிலையத்தை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தினர்.

ஆயிரத்துக்கும் மேற்பட்ட படகுகளில் நடுக்கடலிலிருந்து அணிவகுத்து அணுமின் நிலையத்திற்கு மிக அருகே வந்தனர். சுற்றுவட்டாரங்களான கூடங்குளம், விஜயாபதி, செட்டிகுளம் உள்ளிட்ட பல்வேறு ஊர்களிலிருந்து ஏராளமானவர்கள் கடற்கரையில் திரண்டனர். அங்கு அணுமின் நிலைய எதிர்ப்பு இயக்க ஒருங்கிணைப்பாளர் உதயகுமார், புஷ்பராயன் மற்றும் போராட்டத்தில் ஈடுபட சென்னை, திருவனந்தபுரம் பகுதிகளிலிருந்து வந்தவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

காலை 9 மணிக்குத் தொடங்கிய படகுகள் முற்றுகை போராட்டம், 12 மணிவரை தொடர்ந்தது. இதையொட்டி நெல்லை எஸ்.பி. விஜயேந்திரபிதாரி தலைமையிலான அதிரடிப்படையினர் நூற்றுக்கணக்கில் குவிக்கப்பட்டனர். அணுமின் நிலையக் கண்காணிப்பு கோபுரத்திலிருந்தும், வேலிகள் பின்னால் இருந்தும் கண்காணித்த பொலிஸார், படகுகள் அணுமின் நிலையம் அருகே வந்ததும் கடற்கரையில் பாதுகாப்புச் சங்கிலி போல் நின்றனர். இதனால் சுமார் அரை மணி நேரம் பதற்றம் நீடித்தது. பின்னர் படகுகள் அந்தந்த ஊருக்கு திரும்பின.

## பஸ் கட்டண உயர்வுக்கு எதிராக நீதிமன்றில் பொதுநல வழக்கு

(சென்னை)



தமிழக அரசு அறிவித்துள்ள பஸ் கட்டண உயர்வை ரத்து செய்யக் கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது. இது தொடர்பாக சமூக ஆர்வலர் டிரா.்.பிக் ராமசாமி தாக்கல் செய்த பொது நல மனுவில் கூறியுள்ளதாவது:

தமிழ்நாட்டில் பஸ் கட்டணம் உயர்த்தப்படுவதாக இம்மாதம் 17ஆம் திகதி தமிழக அரசு அறிவித்தது. இதனால் 30 முதல் 50 சதவீதம் வரை கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளது.

எனினும், இந்தக் கட்டண உயர்வு குறித்து முன்னதாகவே மக்களுக்கு தெரியப்படுத்தப்படவில்லை. மோட்டார் வாகனச் சட்ட விதிகள் படி, பஸ் கட்டண உயர்வு குறித்து பொதுமக்களுக்கு பத்திரிகைகள் மூலம் அறிவித்து, உரிய கால அவகாசத்துக்குப் பின்னரே, அந்த அறிவிப்பை அமுல்படுத்த வேண்டும்.

ஏற்கெனவே, கடந்த 2001 ஆம் ஆண்டு இதேபோல் பொதுமக்களுக்கு முன்னரே அறிவிக்காமல் பஸ் கட்டணம் உயர்த்தப்பட்டது. இதனை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கில் நீதிமன்ற தலையீடு காரணமாக அப்போது பஸ் கட்டணம் குறைக்கப்பட்டது. இந்தச் சூழ்நிலையில், இப்போது பொதுமக்களுக்கு முன்னரே தெரியப்படுத்தாமல் தமிழக அரசு திடீரென பஸ் கட்டணத்தை உயர்த்தியுள்ளது. இதனால் பொதுமக்கள் பல பாதிப்புகளை அடைந்துள்ளனர். எனவே, தமிழக அரசு பஸ் கட்டணத்தை உயர்த்தியதற்கு நீதிமன்றம் தடை விதிக்க வேண்டும் என்று அந்த மனுவில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

## உத்தரப் பிரதேசம் நான்காகப் பிரிப்பு

(லக்னோ)

உத்தரப்பிரதேச மாநிலத்தை நான்கு சிறிய மாநிலங்களாக பிரிப்பது தொடர்பான தீர்மானம், எதிர்க்கட்சிகளின் கடும் அமளிக்கு இடையே, குரல் வாக்கெடுப்பின் மூலம் அம்மாநில சட்டசபையில் நேற்றுமுன்தினம் நிறைவேற்றப்பட்டது.

உத்தரப்பிரதேச மாநிலத்தை நிர்வாக வசதிக்காக பூர்வாஞ்சல், பச்சிம் பிரதேசம், பண்டல்கண்ட், அவாத் பிரதேசம் என, நான்கு சிறிய மாநிலங்களாகப் பிரிக்கத் திட்டமிட்டுள்ளதாக, முதல்வர் மாயாவதி கடந்த வாரம் அறிவித்து இருந்தார். இது குறித்து பிரதமர் மன்மோகன சிங்கிற்கு கடிதமும் எழுதியிருந்தார். இந்நிலையில், உத்தரப் பிரதேச சட்டசபையின் குளிர்கால கூட்டத்தொடர் நேற்று முன்தினம் தொடங்கியது. அப்போது, சமாஜ்வாடி, பா.ஜ., உள்ளிட்ட கட்சிகளின் உறுப்பினர்கள், கடும் அமளியில் ஈடுபட்டனர்.



பா.ஜ. தலைவர் ஓம் பிரகாஷ் சிங் கூறுகையில், மாயாவதி கொண்டு வந்த தீர்மானம், திட்டமிட்ட தேர்தல் நிலைப்பாடு. அடுத்தாண்டு நடக்கவுள்ள சட்டசபை தேர்தலை மனதில் வைத்து தான், இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்துள்ளார். மத்திய அரசு இதை நிராகரிக்க வேண்டும் என்றார்.

இதுபற்றி மாயாவதி குறிப்பிடுகையில், இதனை எனது தேர்தல் நிலைபாடு என எதிர்க்கட்சிகள் கூறுகின்றன. தேர்தலுக்காக இந்த முடிவை எடுக்கவில்லை. 2007இல் நாங்கள் ஆட்சி அமைத்ததுமே, இதுகுறித்து மத்திய அரசுக்குத் தெரிவித்துவிட்டோம் எனக்கூறினார்.

### நளினி - முருகன் வேலூர் சிறையில் சந்திப்பு

(வேலூர்)

ராஜிவ் கொலை வழக்கில் தூக்குத் தண்டனை விதிக்கப்படட முருகன், வேலூர் மத்திய ஆண்கள் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். இதே வழக்கில் ஆயுள்தண்டனை விதிக்கப்பட்ட முருகன் மனைவி நளினி, வேலூர் பெண்கள் சிறையில் உள்ளார். 15 நாட்களுக்கு ஒருமுறை சந்தித்து பேசிக்கொள்ள சிறைத்துறையினர் அனுமதி வழங்கியுள்ளனர். இவர்கள் சந்திப்பு, நேற்றுமுன்தினம் வேலூர பெண்கள் சிறையில் நடந்தது.

### விஜயகாந்த் உண்ணாவிரதம்



(சென்னை)


பஸ் கட்டணம், பால் விலை உயர்வைக் கண்டித்து தே.மு.தி.க. நிறுவுனர் விஜயகாந்த் தலைமையில் சென்னையில் அக்கட்சி அலுவலகத்தில் நாளை உண்ணாவிரதப் போராட்டம் நடைபெறவுள்ளது. அதேநாளில் மாவட்டத் தலைநகரங்களிலும் தே.மு.தி.க.வினர் உண்ணாவிரதப் போராட்டம் நடத்துகின்றனர்.

பொதுத்துறை நிறுவனங்களைச் சீர்படுத்த அக்கறை எடுத்துக் கொள்ளும் முதல்வர், கட்டண உயர்வால் திண்டாடும் ஏழை, நடுத்தர குடும்பங்களின் மக்கள் நிலையையும் கருத்தில் கொள்ளவேண்டும். அதற்கு மாறாக எதிர்க்கட்சிகள் மீது குற்றஞ் சாட்டுவது நியாயமற்றது எனத் தெரிவித்தார்.


### தவறான இந்திய வரைபடத்தை அகற்றியது அமெரிக்கா

இந்தியாவுடன் சேர்ந்த ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதியை பாகிஸ்தானின் ஒரு பகுதியாக சித்தரித்து வெளியிடப்பட்டிருந்த இந்திய அமெரிக்க அரசின் இணையத்தளம் ஒன்று இந்திய வரைபடத்தை தவறாக வெளியிட்டிருந்தது. இந்தியப் பகுதியான ஆக்கிரமிப்பு காஷ்மீரை பாகிஸ்தானுடன் சேர்த்து இந்த இணையத்தளம் வரைபடம் வெளியிட்டிருந்தது. இதற்கு இந்தியா தரப்பில் கடும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. இந்நிலையில், அந்த வரைபடத்தை தனது இணையத்தளத்திலிருந்து அமெரிக்கா அகற்றியுள்ளது.

நன்றி : தினமலர்




## "மஞ்சள்" விவசாயிகள் பெரும் நெருக்கடியில்



(சென்னை)

இந்தியாவில் மஞ்சளின் விற்பனை விலை பெருமளவில் வீழ்ச்சியடைந்துள்ளதால் சுமார் 15 இலட்சம் விவசாயிகளின் எதிர்காலம் கேள்விக்குறியாகியுள்ளது என்று இந்திய மஞ்சள் விவசாயிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

உலகளவில் அதிகப்படியாக மஞ்சள் உற்பத்தி செய்யும் நாடாக இந்தியா திகழும் நிலையில், அதற்கான அடிப்படை ஆதார விலை அரசால் நிர்ணயம் செய்யப்படவில்லை என்பதை சங்கத்தின் தேசிய ஒருங்கிணைப்பாளரான பி.கே.தெய்வசிகாமணி தெரிவித்தார். கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு மஞ்சளின் விற்பனை விலை 60 சதவீதத்துக்கு மேல் வீழ்ச்சியடைந்துள்ளது, பல பருத்தி விவசாயிகள் பெரும் பிரச்சினைகளை எதிர்கொண்டு தற்கொலை செய்து கொண்டது போன்ற ஒரு நிலை மஞ்சள் விவசாயிகளுக்கு ஏற்பட்டுவிடக் கூடும் என்று தாங்கள் கவலைப்படுவதாகவும் அவர் கூறுகிறார்.

மஞ்சள் வர்த்தகத்தில் ஈடுபடும் வியாபாரிகள் தமக்குள் ஒரு ஒருங்கிணைப்பை ஏற்படுத்திக் கொண்டு உற்பத்தி அதிகரித்துள்ள நிலையில், விலையில் வீழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளனர் என்றும் தெய்வசிகாமணி குற்றஞ்சாட்டுகிறார்.

இந்தியாவில் விவசாய பொருட்களுகது விலை நிர்ணயம் செய்யப்படவில்லை. வர்த்தகர்களே அதை முடிவு செய்வது அனைத்து விவசாயிகளையும் பெரும் பாதிப்புகளுக்கு உள்ளாக்கி வருகிறது அதுவும் மஞ்சள் சாகுபடி செய்யும் விவசாயிகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு காரணம் எனவும் அவர் தெரிவித்தார். உலக மஞ்சள் உற்பத்தியில் சுமார் 78 சதவீதம் இந்தியாவில் செய்யப்படும் நிலையில், 7 சதவீதம் மட்டுமே ஏற்றுமதி செய்யப்படுகிறது எனவும், மஞ்சளின் ஏற்றுமதியை ஊக்குவிக்க அரசு முயற்சிகள் செய்யவில்லை எனவும் அவர் குற்றஞ்சாட்டினார்.

## மற்றவர்களின் செல்போனால் பிரயோசனம் இல்லை



(புதுடில்லி)

திருடப்பட்ட செல்போனை செயலிழக்க செய்யும் புதிய முறையை இந்திய மத்திய தொலைத்தொடர்பு ஒழுங்கு முறை ஆணையம் அறிமுகம் செய்கிறது. செல்போன் திருடப்பட்டுவிட்டது அல்லது தொலைத்து விட்டால் அந்த செல்போனை செயலிழக்கச் செய்யும் புதிய முறை அடுத்த மாதம் அமுலுக்கு வர வாய்ப்புள்ளதாக மத்திய தொலைத்தொடர்பு ஒழுங்கு முறை ஆணையம் (டிராய்) தெரிவித்துள்ளது.

இப்போதைய நிலையில் செல்போன் தொலைந்தால் அல்லது திருட்டுப்போனால் அதிலுள்ள சிம் கார்டு செயற்பாட்டை மட்டுமே முடக்க முடியும். இதனால் சிம் கார்டை மட்டும் மாற்றி அந்த தொலைபேசியை தொடர்ந்து பயன்படுத்த முடியும் என்ற நிலை இருக்கிறது. இனி செல்போன் காணாமல் போனால் அதற்குரிய ஐ.எம்.இ.ஐ. எண்ணை கொண்டு ஒட்டுமொத்த செயற்பாட்டையும் முடக்க முடியும். எனவே அதை யாரும் தவறாகப் பயன்படுத்த முடியாது.

## சிதம்பரத்தை புறக்கணிக்க முடிவு

(புதுடில்லி)

2ஜி ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீடு மோசடிக்கு மத்திய உள்துறை அமைச்சர் சிதம்பரமே காரணம் என்பதால், நாடாளுமன்றில் அவரை புறக்கணிக்கவும், அவரை பேச விடாமல் செய்யவும் தேசிய ஜனநாயக கூட்டணித் தலைவர்கள் முடிவு செய்துள்ளனர்.

ஆளும் கட்சிக்கு நெருக்கடி கொடுக்கும் வகையில், எந்தெந்த பிரச்சினைகளை எழுப்பலாம் என்பது குறித்து விவாதிப்பதற்காக, தே.ஜ.கூட்டணி தலைவர்களின் கூட்டம் டில்லியில், பா.ஜ.க. மூத்த தலைவர் அத்வானியின் வீட்டில் நடந்தது.

இந்தக் கூட்டத்தில் பங்கேற்ற பின் ராஜ்யசபா எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அலுவாலியா கூறியதாவது, 2ஜி ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீடு மோசடியில், ராஜாவைப்போல, அப்போதைய நிதி அமைச்சரும், தற்போதைய உள்துறை அமைச்சருமான சிதம்பரத்திற்கும் சம பொறுப்பு உண்டு. ராஜாவின் ராஜினாமாக கடிதத்தை வாங்கிய, பிரதமர் மன்மோகன் சிங், சிதம்பரத்தின் கடிதத்தை வாங்கவில்லை. சிதம்பரம் ராஜினாமா செய்து, அது ஏற்கப்படும் வரை, அவரின் நாடாளுமன்ற நடவடிக்கைகளை தே.ஜ. கூட்டணியினர் புறக்கணிப்பர். அவரை நாடாளுமன்றத்தில் பேசவும் விடமாட்டோம் எனத் தெரிவித்தார்.

# மத்தியதரைக்கடல் பகுதியில் கனடாவின் கப்பல் படை

உலகச் செய்திகள்



அடுத்த ஆண்டு இறுதிக்குள் மத்தியதரைக்கடல் பகுதியில் கனடா தனது கப்பல்படை ஒன்றை காவலுக்காக நிறுத்தும் என்று கனடா பாதுகாப்புத்துறை அமைச்சர் பீட்டர் மெக்கே தெரிவித்துள்ளார். லிபியாவில் சண்டை நடைபெற்ற நேரத்தில் கனடாவின் சார்பில் HMCS வான்கூவர் என்ற கப்பல் படை அனுப்பப்பட்டிருந்தது. தற்பொழுது இது நேட்டோவின் ஆபரேஷன் ஆக்டிவ் எண்டேவர் என்ற போர் நடிவடிக்கைக்காக அனுப்பப்படுகிறது. ஆபரேஷன் ஆக்டிவ் எண்டேவர் என்பது மத்திய தரைக்கடல் பகுதியில் நடைபெறும் தீவிர வாத எதிர்ப்புப் பணியாகும். இந்தப் பணிக்காக இப்போது கனடா விரைந்து செல்லும் போர்க் கப்பல்களை அனுப்ப முடிவுசெய்துள்ளது.

# எகிப்தில் திட்டமிட்டபடி தேர்தல்

எகிப்தில் புரட்சியின் பின் ஏற்பட்ட ஆட்சிமாற்றத்திற்கு பின்னர் இடம்பெறும் இராணுவ ஆட்சிக்கு எதிராக தாரிர் சதுக்கத்தில், காலவரையற்ற போராட்டத்தில் ஈடுபடப் போவதாக அறிவித்து, போராட்டக்காரர்கள் கூடாரம் அமைத்தனர். அவர்களை வெளியேற்றுவதற்காக, பொலிஸார் தடியடி நடத்தினர். இதில், பலர் காயம் அடைந்தனர். இத்தகவல், சமூக வலைதளங்கள் மூலம் பரவியது. இதையடுத்து, நூற்றுக்கணக்கான பேர், சதுக்கத்தில் திரண்டனர். அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கார்கள் தீக்கிரையாக்கப்பட்டன. ஆர்ப்பாட்டக்காரர்கள், பொலிஸார் மீது கல்லெறிந்தனர். இதையடுத்து, இரு தரப்புக்கும் மோதல் மூண்டது. இதேபோன்ற ஆர்ப்பாட்டம், அலெக்சாண்டிரியா மற்றும் சூயஸ் நகரங்களிலும் நடந்தது. ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது, பொலிஸார் தடியடி, கண்ணீர் புகை குண்டு வீச்சு நடத்தினர். இதில், 22 பேர் பலியாகினர் 1,700 பேர் காயம் அடைந்தனர்.



இராணுவத்துக்கும், போராட்டக்காரர்களுக்கிடையேயான மோதலை முடிவுக்கு கொண்டுவர, இப்பகுதியைச் சேர்ந்த இமாம், ஷயாக் மசார் ஷாகின் மத்தியஸ்தம் செய்துள்ளார். நடந்த சம்பவங்களுக்கு இராணுவம் மன்னிப்பு கேட்டுள்ளது. இதையடுத்து, நேற்றுமுன்தினம் சண்டை நிறுத்தம் அறிவிக்கப்பட்டது. திட்டமிட்டபடி எதிர்வரும் 28 ஆம் திகதி, பாதுகாப்புடன் தேர்தல் நடத்தப்படும் என, இராணுவ உயர்மட்டத்தினர் உறுதியளித்துள்ளனர்.

# யூரோவுக்கு எதிராக வலுக்கிறது எதிர்ப்பு



நலிந்து வரும் செலவாணியான யூரோ பிரான்ஸ் நாட்டிற்கு இனி தேவையில்லை என மரினா லீ பென் கூறியுள்ளார். இவர் பிரான்ஸ் நாட்டின் தீவிர வலது சாரிக் கட்சியின தலைவர் ஆவார். இவர் 2012 ஆம் ஆண்டுக்கான பிரான்ஸ் ஜனாதிபதி தேர்தலுக்கு போட்டியிடுகிறார். மேலும் மரினா கூறுகையில், யூரோ நம்முடைய பொருளாதாரத்தை மூச்சுத்திணற வைக்கின்றது, தொழில்துறையை அழிக்கின்றது, வேலை வாய்ப்பை ஒழிக்கின்றது, இதற்கும் மேலாக பிரான்சை இமாலயக் கடனில் மூழ்கடிக்கின்றது. எனவே இந்தச் செலாவணியை நாம் புறக்கணிக்க வேண்டும். யூரோ அழிவதைப் நாம் பார்க்க வேண்டுமே தவிர யூரோவால் நாம் அழிந்து போகக் கூடாது என்று தொலைக்காட்சிக்குப் பேட்டி ஒன்றில் தெரிவித்துள்ளார். இவருக்கு நாட்டில் செல்வாக்கு அதிகரித்து வருவதாக அங்கிருக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

# பாகிஸ்தான் இராணுவத்திற்கும் அரசுக்கும் குழப்பத்தை ஏற்படுத்த சதி முயற்சி



இராணுவப் புரட்சி ஏற்பட்டால் அதற்கு அமெரிக்கா உதவி செய்ய வேண்டும் என அதிபர் சர்தாரி தரப்பில் அமெரிக்க தளபதியிடம் நான் கடிதம் ஏதும் கொடுக்கவில்லை என,அமெரிக்காவுக்கான பாகிஸதான் தூதர் உசேன் ஹக்கானி மறுப்பு தெரிவித்துள்ளார். அதேவேளை இது பாகிஸ்தான் அரசுக்கும் இராணுவத்திற்கும் இடையில் குழப்பத்தை ஏற்படுத்தும் முயற்சி எனக்கு றிப்பிட்டார்.

அமெரிக்காவுக்கான தூதர் ஹக்கானி பத்திரிகை பேட்டி ஒன்றில் குறிப்பிடுகையில், “தொழிலதிபர் மன்சூர் இஜாஸ் அமெரிக்க பிரஜை. பாகிஸ்தான் தேசிய விவகாரத்தில் அவர் எப்படி தலையிடலாம்? என்னுடைய குடும்பத்தினர் பாகிஸ்தான் இராணுவத்தில் பணியாற்றியவர்கள். அப்படி இருக்கும் போது பாகிஸ்தான் இராணுவத்துக்கு எதிராக நான் எப்படி செயற்பட முடியும்? இது குறித்து தீவிர விசாரணை நடத்தப்பட வேண்டும். தொழிலதிபர் இஜாஸ், ஊடகங்களுக்கு அடிக்கடி பேட்டியளித்துள்ளார். இதன் மூலம் அவர் பாகிஸ்தான் அரசுக் கும், இராணுவத்துக்கும் இடையே தேவையில்லாத குழப்பத்தை ஏற்படுத்த முயற்சிக்கிறார். அதன் மூலம் பாகிஸ்தான், அமெரிக்க உறவில் விரிசலை உண்டாக்க திட்டமிடுகிறார். எனவே, அவரிடம் தான் முதலில் விசாரணை நடத்த வேண்டும்'' என்றார்.

இவ்வாறான கடிதத்தை, ஹக்கானியின் ஆலோசனைப்படி தான் எழுதியதாகவும், அவரது உத்தரவின்படி, மைக் முல்லனிடம், தான் கொடுத்ததாகவும் தொழில திபர் மன்சூர் இஜாஸ், கடந்த மாதம் தெரிவித்திருந்தார். ஆனால், இதை ஹக்கானி மறுத்துள்ளார். “பாகிஸ்தான் இராணுவப் புரட்சி குறித்து அதிபரின் சார்பில் நான், அமெரிக்க முன்னாள் தளபதி முல்லனிடம் எந்த கடிதத்தையும் கொடுக்கவில்லை'' என, விளக்கம் அளித்துள்ளார்.

# அழகான கண்களால் பிரச்சினை தடுக்க சவூதி அரசு நடவழக்கை




ஆண்களை கவர்ந்து இழுக்கும் கண்களையும் இனி மறைத்து செல்ல சவூதி அரேபியாவில் புதுச் சட்டம் வரவுள்ளது. சவூதி அரேபியாவில் இஸ்லாமிய சட்டங்கள் கடுமையாக பின்பற்றப்படுகின்றன. பெண்கள் கார் ஓட்டக் கூடாது, பொது இடங்களுக்கு ஆண்கள் துணை இல்லாமல் செல்லக் கூடாது என்று பெண்களுக்கு கட்டுப்பாடுகள் உள்ளன.

மேலும் பெண்கள் தலை முதல் கால்கள் வரை மறைக்கும் வகையில் பர்தா அணிந்து செல்வது கட்டாயம். இந்த விதிகளை மீறும் பெண்களுக்கு கசையடி உள்பட கடும் தண்டனைகள் விதிக்கப்படுகின்றன. இந்நிலையில் மற்றவர்களை கவரும் வகையில் உள்ள கண்களையும் பெண்கள் மறைத்து செல்லும் வகையில் புதுச் சட்டம் கொண்டுவர பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

இத்தகவலை சவூதி அரேபிய நல்லொழுக்கம் மற்றும் குற்றத் தடுப்பு குழுவின் செய்தித் தொடர்பாளர் ஷேக் மோட்லேப் வெளியிட்டுள்ளார்.

# மெய்தான் பாருங்கோ...

## கண் துடைப்பு வேலைகள்



வவுனியா - செட்டிகுளம் அகதி முகாமில இருக்கேக்கை கிளிநொச்சிப் பக்கம் மீள்குடியேற்றம் எண்டு போன சனங்கள், போனவுடனை போன் எடுத்துச் சொன்னதுகள் என்னெண்டால் வீட்டுக் கிணறுகள் இறைச்சுத் தந்திருக்கினம், சிலவு சித்தானமில்லை. எல்லாம் அவங்களோடைதான். ஏதோ ஒரு தொண்டு நிறுவனம் செய்து தருகுது... எண்டு சொன்னதைக் கேட்டு சந்தோசப்பட்ட ஆட்களில நானும் ஒருத்தன் பாருங்கோ!

சில இடங்களில சில கிணறுகள் அதுவும் மேட்டு நிலப்பக்கமா இருக்கிற கிணறுகள் சரியான ஆழம் பாருங்கோ. யாழ்ப்பாணத்தில வசாவிளான், ஒட்டகப்புலம் பக்கத்துக் கிணறுகள் மாதிரி ஒரு வாளி தண்ணி அள்ளவே கனநேரம் எடுக்கும். இஞ்சை வன்னிப் பக்கத்திலும் அப்படித்தான். என்ர வீட்டுக் கிணத்தின் ஆழம் பாருங்கோ முப்பத்தி மூண்டு முழம். இந்தக் கிணறை வெட்டி முடிக்க எக்கச்சக்கமான சிலவும் கூலியும் முடிஞ்சது கண்டியளே!

புதுக்குடியிருப்பு - கோம்பாவில் பகுதியில பெரும்பாலான கிணறுகள் முப்பது முழத்துக்கு குறையாதவை. ஆரேனும் தவறிக் கிணத்துக்குள்ள விழுந்து தண்ணியில உடம்பு படக்கிடையில சீவன் போயிடும். மழை காலங்களில மழை பெஞ்சால் தண்ணி நல்லா நிறைஞ்சு நிற்கும்.

வன்னியில சண்டை நடந்து நாங்கள் அகதி முகாமில இருக்கேக்கை நான் என்ர வீடு வாசல் எப்பிடிக் கிடக்குதோ எண்டு யோசிக்கேக்கை என்ர கிணத்தையும் நினைச்சு யோசிக்கிறனான். ஏனெண்டால் கிணத்துக்குக் கிட்ட ஷெல் அல்லது கிபிர் ஏதும் குண்டு போட்டு வெடிச்சு, கிணறு தூர்ந்திருந்தால் திரும்ப முப்பத்தி மூண்டு முழத்துக்கு கிணறு வெட்ட என்னால இயலாத காரியம் கண்டியளே!

நல்ல வேளை! கடவுள் கிருபையால என்ர கிணத்துக்கு ஒண்டும் நடக்கேல்லை. மீள்குடியேற்றம் எண்டு வீட்டை வந்தவுடனே முதல்ல ஓடிப்போய் கிணத்தைத்தான் பாத்தன். கிணறு ஒரு சேதாரமும் இல்லாமல் அப்படியே கிடந்தது.

ஆனாப் பாருங்கோ! இப்ப என்ர கிணத்தை இறைக்கிறதுக்கு நான்படுகின்ற பாடிருக்கே! நாய் படாப் பாடு அது. ஆரம்பத்தில றோட்டுப் பக்கம் இருக்கிற குழாய்க் கிணத்தில தண்ணி எடுத்து வந்தன். என்னைப் போல இன்னும் பலபேர், அகதி முகாமில வரிசையில நிண்டு தண்ணி எடுத்தமாதிரி ஊருக்கு வந்தும் தண்ணிக்கு வரிசையில நிக்க வேண்டிய எழுதாத தலைவிதியாப் போச்சுது எங்களுக்கு. என்ன செய்யிறது நாங்கள்? கடவுளை நோகிறதா....? “கரிகாலனை” நோகிறதா?

ஆரம்பத்தில கிணத்தை இறைக்கிறதுக்கு ஆரைக் கேக்கிறது..? எவரைப் பிடிக்கிறது.. எண்டு தெரியாமல் இருக்க, ஒருநாள் றோட்டில விதானையைக் கண்டு கேட்க, விதானைக்கு என்ன கொதி வியாதியோ தெரியாது சள்...புள்...எண்டு என்னோடை எரிஞ்சுவிழ நான் திரும்பிவரக்கை ஒரு வீட்டில தண்ணி இறைப்பு வேலையள் நடந்து கொண்டிருந்தது பாருங்கோ.

நான் அங்கை போய்ப் பாத்தா உந்தக் கண்ணிவெடி அகற்றும் பிரிவில ஒரு பகுதிதான் உந்தத் தண்ணி இறைப்பு வேலையைச் செய்து கொண்டு திரியுது எண்டு தெரிஞ்சுது. நான் அதில நிண்ட ஒரு பொடியனோடை கதைச்சன். அவன் சொன்னான் நாங்கள் எல்லோருக்கும் இறைச்சுத் தருவம். நீங்கள் போங்கோ எண்டு. நானும் வந்திட்டன். பேந்து பாத்தா குறிப்பிட்ட சில வீடுகளில இறைப்பு நடக்குது. நான் மனம் பொறுக்கேலாமல் போய் எனக்கும் இறைச்சுத்தரச் சொல்லிக் கேட்க, முதல் சொன்ன பதிலே திரும்பவும் வந்தது.

பிறகு ஒரு கதை அடிபட்டுது என்னெண்டால் ஆமிக் கொமாண்டரிட்டை பதிய வேணும். அந்த ஒழுங்கின்படிதான் செய்வினமெண்டு. நான் பிறகு புதுக்குடியிருப்புச் சந்தியில் உள்ள காவலுக்கு நிண்ட சிப்பாயிட்ட விசயத்தைச் சொல்ல, அவன் முகாமிற்குள்ள போய் பெரியவரோடை கதைக்கும்படி அரைகுறைத் தமிழில சொன்னான். நானும் உள்ளுக்கை போய் கதைக்க அந்தாள் சம்பந்தப்பட்ட ஆட்களோடை போனில கதைசசுப்போட்டு, நீங்க போங்க.... அவங்க வருவாங்க எண்டு சொல்ல நான் வந்திட்டன். ஆனா அவங்கள் வரவேயில்லை.

பேந்து பாருங்கோ என்ர வீட்டுக்குப் பக்கத்து வீட்டில இறைப்பு நடக்க நான் கம்பி வேலிக்குள்ளால பூந்து போய் அவையளைக் கேட்க, சாதகமான உருப்படியான பதில் கிடைக்கேல்ல. அவங்களை விட்டிட்டு இஞ்சாலை வந்து வீட்டுக்கார மனிசியை விசாரிச்சதில, தாங்களும் பெரிய அலைச்சல் கரைச்சலுக்குப் பிறகுதான் கூட்டிக்கொண்டு வர முடிஞ்சுது... எண்டு சொல்லிச்சுது. எனக்கு எரிச்சலாகவர திரும்பி வந்திட்டன்.

இந்தத் தொண்டு நிறுவனத்தின் செயற்பாடு எந்த வகையில நடைமுறைப்படுத்தப்படுகிறது எண்டதை என்னால விளங்கிக் கொள்ள முடியாமல் கிடக்குது. ஒரு ஒழுங்கை வரிசையின்படி அந்த வீடுகளில் உள்ள கிணறுகளை இறைச்சுக் கொடுக்க வேணடியது தான் நியாயமான முறை. அதைவிட்டிட்டு மக்கள் அலைஞ்சு திரிஞ்சு கட்டி இழுத்துக்கொண்டு இறைக்க வேண்டிய அவசியம் எங்கட சனங்களுக்கில்லை.

அங்கை ஒரு இடம், இஞ்சை ஒரு இடமா இறைச்சுப்போட்டு வன்னியில மீள்குடியேறின பகுதிகளில் உள்ள வீட்டுக் கிணறுகள் இறைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது எண்ட கண்துடைப்பு வேலையளை செய்தியாப் பாக்க எங்கட சனம் விரும்பாது. ஏனெண்டால் இன்னமும் பலபேருடைய கிணறு இறைச்சுக் கொடுக்கேல்லை. குறிப்பாக என்ர வீட்டுக் கிணறு இன்னமும் இறைக்கப்படேல்லை என்டது உண்மையிலும் உண்மை.

- சின்னக்குட்டி சின்னச்சாமி

# மிக அவசரமாக முன்னெடுக்கப்பட வேண்டிய வடமாகாண கல்வி அபிவிருத்தி வேலைத்திட்டம்

(நேற்றைய தொடர்ச்சி)

**தொண்டர் ஆசிரியர்கள், ஆசிரியர் உதவியாளர்கள்**

வடமாகாணத்தின் வன்னி மாவட்டத்தின் கல்வி வலயங்களின் பாடசாலைகளில் கடமையாற்றி வருகின்ற பொருத்தமான கல்வித் தரம் உள்ள தொண்டர் ஆசிரியர்களுக்கான நிரந்த நிமயனம் வழங்க ஆவன செய்தல் வேண்டும். இதேவேளை, ஆசிரிய உதவியாளர்களுடைய சம்பளத்தை அதிகரிக்க வேண்டும் என்பது கல்வி அபிவிருத்திக் குழுவின் தாழ்மையான வேண்டுகோள் ஆகும்.

(இதற்கான வேலைத்திட்டங்கள் ஜனாதிபதியால் மேற்கொள்ளப்பட்டு வருதாக அமைச்சரால் கூறப்பட்டது)

**A/L, O/L ஆசிரியர் பரம்பல்**

வடமாகாணத்தின் க.பொ.த. சா/தா, க.பொ.த. உ/தர பாட ஆசிரியர்கள் சில பாடசாலைகளில் மேலதிகமாகவும், சில பாடசாலைகளில் பாடங்களைக் கற்பிக்க ஆசிரியர்கள் இல்லாத நிலையும் காணப்படுகின்றன. (முக்கியமாக விஞ்ஞானம், கணிதம், ஆங்கிலம் ICT பாடங்கள்) இவற்றின் தரவுகள் அதிகாரிகள் ஊடாக சேகரிக்கப்பட்டு, சம்பந்தப்பட்ட ஆசிரியர்களை அழைத்து இணக்கப்பாடான உரையாடல் ஊடாக தீர்வுகள் காணப்படல் வேண்டும்.

(2012 ஜனவரி - 15இற்கு முன் தீர்வு காணப்படவுள்ளது)

**ஏனைய விடயங்கள்**

**கஷ்டப் பிரதேசக் கொடுப்பனவு**

வடமாகாண ஆசிரியர்களுக்கான கஷ்டப் பிரதேசக் கொடுப்பனவு சுற்று நிருபத்திற்கு ·அமைவாகவும் பிரதேச வேறுபாடுகள் இன்றியும் உடன் வழஙகப்படுவதுடன், நிலுவைகளும் கொடுபனவு செய்யப்படல் வேண்டும்.

(உடனடிநடவடிக்கை எடுப்பதாக ஆளுநர் உறுதியளித்தார்)

**வைத்திய சபை மூலமான ஓய்வு**

கற்பித்தலைப் பாதிக்கும் அளவுக்கு உடல், உளப்பிரச்சினை உள்ள ஆசிரியர்களை வைத்தியசபையின் ஊடாக ஓய்வு பெறுவதற்கான ஏற்பாடுகளைச் செய்தல் வேண்டும்.

(உடன் நடவடிக்கை எடுப்பதாக ஆளுநர் உறுதியளித்தார்)

**ஆசிரியர்களுக்கான நலன்புரிச் சேவை**

வடமாகாணத்தில் உள்ள ஆசிரியர்கள் கடன் பெறுவதற்கான சகல நடவடிக்கைகளையும் இலகுபடுத்த வேண்டும் குறிப்பாக (EDCS) கல்விக் கூட்டுறவுச் சங்கம் ஒன்றின் கிளையை அல்லது இது போன்ற அமைப்பை யாழ். மாவட்டத்திலும் ஏனைய மாவட்டங்களிலும் நிறுவ உடன் ஆவன செய்யவேண்டும்.

ஆசிரியர்களுக்கான பதவி உயர்வுகள் சம்பள ஏற்றங்கள், நிலுவைக் கொடுப்பனவுகள் ஓய்வூதியக்கொடுப்பனவுகள் உரிய காலத்தில் கிரமமாகக்கிடைக்க வழி செய்யப்படல் வேணடும்.

2012ஆம் ஆண்டு இதற்காக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் வவுனியாவில் 600 அரச உத்தியோகத்தர்களுக்கு வீட்டுத்திட்டம் கொடுக்கப்பட் டது போன்று ஏனைய இடங்களிலும் செயற்படுத்த ஆவன செய்யப்படும் என்றார்.

**நிதி ஒதுக்கீடு**

வடமாகாணக் கல்விப்புல அபிவிருத் திக்கென கிடைக்கும் நிதிகள் மூன்று வகைப்படும்

1. அரச நிதி ஒதுக்கீடு
2. விசேட செயற்திட்ட நிதிகள்
3. அரச சார்பற்ற நிறுவன நிதிகள்

இவை எதிர்காலத்தில் எவ்வகையில் பகிர்ந்தளிக்கப்படவேண்டும் என்பது தீர்மானிக்கப்படுவதுடன் குறிப்பிட்ட பாடசாலைகளின் மாணவர் தொகைக்கு ஏற்ப அங்குள்ள கட்டட இடப்பரப்பின் அளவின் போதும் தன்மை பௌதீக வளங்களின் தேவை உபகரணங்கள் தேவை என்பன மதிப்பீடு செய்யப்படுதல் வேண்டும்.

**அலுவலகக் கட்டடங்கள்**

வடமாகாணத்தின் கல்வி அமைச்சு மாகாணக் கல்வித்திணைக்களம், வலயக்கல்வித்திணைக்களங்கள், கோட்டங்கள் என்பன நிரந்தரமானதும் வசதியான நிர்வாகத்திற்கு உரியதுமான கட்டட வசதிகளோ, ஏனைய உபகரணவசதிகளோ இல்லாத நிலை உள்ளது. எனவே இவ்வாறான இடங்களில் கட்டடங்கள் அமைக்க வழி காணப்படவேண்டும்



(ஜனாதிபதியுடன் பேசி தீர்வு காணப்படும் என்றார்.)

**ஆசிரிய விடுதிகள்**

வடமாகாணத்தின் பாடசாலைகளில் விடுதிகள் தேவைப்படும் என அடையாளம் காணப்படும் பாடசாலைகளுக்கு விடுதி வசதிகள் செய்து கொடுக்கப்படவேண்டும் குறிப்பாக வன்னி வலயப் பாடசாலைகளுக்கு இதில் முன்னுரிமை அளிக்கப்படவேண்டும். இதன் மூலம் ஆசிரியர்கள் அப்பிரதேசப் பாடசாலைகளுக்கு செல்வதை ஊக்கப்படுத்த முடியும்.

(ஜனாதிபதியுடன் பேசி தீர்மானம் எடுக்கப்படும் என்றார்.)

**மாணவர் விடுதி**

வடமாகாணத்தில் இனங்காணப்பட்ட பாடசாலைகளில் மாணவர் விடுதிகளை அமைத்தல் வேண்டும் இதன் மூலம் கஷ்டப்பிரதேச மாணவர்கள் தரமான கல்வியைப் பெறமுடியும்.

கடந்த மாதம் கனகரட்ணம் ம.ம.வி. விடுதித்திருத்தத்திற்கு 8மில்லியன் வரை நிதி உதவி அளிக்கப்பட்டது. என்றும், ஏனையவற்றுக்கு அடுத்த ஆண்டு முயற்சி எடுக்கப்படும் என்றார்.

**கட்டடத்திருத்தம்**

வடமாகாணப் பாடசாலைகளில் உள்ள கட்டடங்களில் திருத்த வேலைகளுக்கு போதிய நிதிகள் ஒதுக்கப்படுவதன் மூலம் தரமான வகுப்பறைகளை உருவாக்கி மாணவர்களுக்கு தரமான கல்விக்கு உதவ முடியும் இதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும்.

(உடன் நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்)

**சிறுவர் துஷ்பிரயோகம், சிறுவர் உரிமை, பால்நிலை சமத்துவம், போதைப் பொருள் பாவனை**

வடமாகாணத்தின் கல்வி நிறுவனங்களில் மேற்படி விடயங்கள மீறப்படும் இடங்கள் கல்வி அபிவிருத்திக் குழுவால அடையாளப்படுத்தப்படுமிடத்து உடனடியாக விசாரணை ஒன்றின் ஊடாக ஆக்க பூர்வமான நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

(பாடசாலைகள் தோறும் நடவடிக்கைக்குழு ஒன்று எதிர்காலத்தில் அமைக்கப்படும் என ஆளுநர் , அமைச்சர் அறிவித்தனர்.)

**ஒலிபெருக்கிப் பாவனை**

மாணவர்களுக்கான பொதுப் பரீட்சைகள் நடைபெறவுள்ள காலங்களில் பரீட்சைக்கு ஒரு மாதம் முன்னரும், பரீட்சை நடைபெற்றுக்கொண்டிருக்கும் காலங்களிலும் கோவில்களில் ஒலிபெருக்கிப் பாவனையானது சுற்றாடல் வீடுகளில் கல்வி கற்றுக்கொண்டிருக்கும் மாணவர்களுக்கு இடையூறு ஏற்படாதிருக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்

(உடன் நடவடிக்கைக்கு பொலிஸ் நிலையங்களுக்கு அறிவிப்பதாக ஆளுநரும் அமைச்சரும் அறிவித்தனர்.)

**அரசாங்க சுற்று நிருபங்களை நடைமுறைப்படுத்தல்**

வடமாகாணத்தின் சகல கல்வி நிறுவனங்களும் அதனை வழிநடத்தும் சகல தர அதிகாரிகளும் அரசாங்க நிதி மற்றும் நிர்வாக சுற்று நிருபங்களை நடைமுறைப்படுத்தவேண்டும். நிதி நிர்வாகசுற்று நிருபங்களை சகல ஆசிரியர்களுக்கும் பார்வையிட வைபபதுடன் முதல் ஒப்பம் பெறப்பட்டு கோவைப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

(இதுதொடர்பாக கல்விச் செயலாளர் கவனம் செலுத்தி சீர்செய்ய வேணடும் எனக் கூறப்பட்டது.)

**பாடசாலைகளில் மாணவர் அனுமதி**

கல்வி அமைச்சின் சுற்று நிருபத்துக்கு விரோதமாக பாடசாலை மாணவர்களை அனுமதிப்பதற்கு நன்கொடை, உதவித்தொகை, அன்பளிப்பு என்ற பல்வேறு நாமங்களில் பணத்தைக் கொடூரமாக வசூலிப்பது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் பணம் வசூலிப்பது உறுதிப்படுத்தப்பட்டால் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். இவ்விடயம் 05.11.2011 அன்று நடைபெற்ற கல்வி அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

(மேற்படி விடயம் தொடர்பாக என்னால் இரண்டு பாடசாலைகளில், விசேட குழு அமைத்து விசாரணை நடைபெறுவதாக ஆளுநர் கூறியதுடன் எதிர் காலத்தில் சகல பாடசாலைக்கும் எனது குழு செல்லும் என்றும் ஆளுநர் கூறினார்)

**பழைய மாணவர் சங்கங்கள்**

கல்வி அமைச்சின் சுற்று நிருபத்திற்கு அமையப் பாடசாலைகளின் பழைய மாணவர் சங்கங்களின் தலைவர்களாக அதிபர்களே இருப்பதை உறுதிப்படுத்த வேண்டும். பாடசாலை பழைய மாணவர் சங்கத்தின் நிதிச் செயற்பாடுகள் அரசாங்க சுற்று நிருபத்திற்கு அமைய இடம் பெற வேண்டும். இது 01.01.2012 முதல் சகல பாடசாலைகளும் கடைப்பிடிக்க ஆவன செய்யப்படல் வேண்டும். இதில் அதிபரின் வகை கூறல் மிக முக்கியம் பெறுகின்றது.

(உடன் மேற்பார்வை செய்யுமாறு கல்விச்செயலாளருக்கு ஆளுநர் அறிவுறுத்தினார்.)

**கல்வி அபிவிருத்திச் செயற்பாடுகள்**

1. மேலதிக வகுப்புக்கள்
2. மாணவர் கருத்தரங்குகள்
3. பயிற்சிப் பரீட்சைகள்
4. ஆசிரியர் இல்லாத பாடங்களுக்கான விசேட ஒழுங்குகள்
5. தொழிற் பயிற்சிகளுக்கும் வழிகாட்டல்களும்
6. செயன்முறைப் பயிற்சி வகுப்புக்கள்
7. தலைமைத்துவப் பயிற்சி செயலமர்வுகள்
8. முன்பள்ளிகள்
9. பொருட்கள் வழங்கள்
10. விழாக்கள்
11. போட்டிகள்
12. மரம்நடுகை , சிரமதானம், டெங்கு ஒழிப்பு, போதைப்பொருள் ஒழிப்பு போன்ற சமூகம்சார் செயற்பாடுகள்
13. ஆசிரியர் வாண்மைவிருத்தி
14. ஆசிரியர் ஊக்குவிப்புக்கள்
15. மாணவர் செயற்பாடுகள்.

மேற்படி விடயங்களை பாடசாலைகளில் மேம்படுத்துவதை மா.க. திணைகளம் அக்கறை செலுத்தவேண்டுமென அமைச்சர் கேட்டுக்கொண்டார்.



**கிளிநொச்சி கனகாம்பிகைக்குளம் அ.த.க. பாடசாலையில் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் திருமதி சீதாஞ்சலி மாணவி ஒருவருக்கு பரிசில் வழங்குவதைக் காணலாம். (77)**

# வடமராட்சியில் வீட்டுத்திட்டம் பயனாளிகளைப் பதிவுசெய்யக் கோரிக்கை

(வடமராட்சி)

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலகப் பிரிவில் இந்தியாவிலிருந்து வந்து மீளக்குடியமர்ந்தவர்கள், வன்னி யுத்தத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் மற்றும் வறுமைக்கோட்டின் கீழ் வாழ்ந்துவருகின்ற குடும்பங்களுக்கு நிரந்தர வீடுகளை வழங்குவதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதில் குறிப்பிட்டவர்கள் தாம் வாழ்ந்துவரும் வீட்டின் முன்னால் குடும்ப உறுப்பினர்களுடன் நின்று எடுக்கப்பட்ட புகைப்படம் மற்றும் காணி உறுதி என்பவற்றுடன் சென்று எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் தத்தம் கிராம அலுவலர் பிரிவிலோ அல்லது பிரதேச செயலகத்திலோ பதிவுகளை மேற்கொள்ளுமாறு வடமராட்சி தெற்கு மேற்குப் பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன் அறிவித்துள்ளார். (உ-116)

## கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச சபையின் கோண்டாவில் பொது நூலகத்தினால் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நடத்தும் நூல் கண்காட்சியும், பரிசளிப்பு விழாவும் இன்று புதன்கிழமை காலை 10.30 மணிக்கு கோண்டாவில் பொது நூலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நல்லூர் பிரதேச சபை செயலாளர் மேரி ஜோசேப் சாந்தசீலன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் நல்லூர் பிரதேச சபை தலைவர் ப.வசந்தகுமார் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (உ-எஸ்)

### நிரந்தர முகாம்...

செயலர் மேலும் குறிப்பிட்டதாவது, இராணுவத்தினருக்கு வழங்கப்பட்டுள்ள சலுகைகள் திருப்தியாகவுள்ளது. குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் இது வரைகாலமும் நிரந்தர இராணுவ முகாம்கள் இருக்கவில்லை. அவரகள் தற்காலிகமான இடங்களிலேயே இருந்தனர். குறிப்பாக அரச நிறுவனங்களுக்கு உரித்தான கட்டடங்கள் மற்றும் காடுகளிலுமே கடந்த 30 வருடங்களாக படையினர் இருந்தனர். யுத்தம் நிறைவடைந்ததன் பின்னர் அவர்களை ஓரிடப்படுத்துவது மிகவும் அவசியமானது. விசேடமாக முகாம், இராணுவக் குடியிருப்பு அமைத்துக் கொடுப்பது தொடர்பில் இந்த வரவு செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இது முக்கியமானதொன்றாக கருதப்பட வேண்டும். அத்துடன் முப்படைகளின் தலைமையகம் ஒன்றை நிறுவுவது குறித்தும் முன்மொழியப்பட்டுள்ளது.

அத்துடன் நகர அபிவிருத்தி தொடர்பிலும் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அதேபோல் கொழும்பு உட்பட புறநகர்ப் பகுதிகளான கோட்டே, கல்கிசை, தெஹிவளை, கொலன்னாவை போன்ற பகுதிகளில் ஏற்படும் வெள்ளப்பெருக்கினைக் கட்டுப்படுத்துவதற்கும் இந்த வரவு செலவுத்திட்டத்தில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

நான் செயலாளராக இருக்கும் முப்படைகளையும் உள்ளடக்கிய பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி என்பவற்றிற்கு போதியளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார்.

### முல்லையில்...

உட்பட்ட கொக்கிளாய் கிழக்கு மற்றும் மேற்கு, கருநாட்டுக்கேணி கிராம அலுவலர் பிரிவுகளை சேர்ந்த மக்கள் முல்லைத்தீவு செம்மலை மகாவித்தியாலயத்திலும் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்துக்குட்பட்ட இரணைப்பாலை கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த மக்கள் முல்லைத்தீவு இரணைப்பாலை மகாவித்தியாலயத்திலும் எதிர்வரும் 25 ஆம திகதி மீள்குடியேறுவதற்கான ஆயத்தங்களுடன் வருமாறு கேட்கப்பட்டுள்ளனர். இந்த மக்கள் இதுவரை காலமும் வசித்த கிராம அலுவலகர் பிரிவில் அக்கிராம அலுவலரால் உறுதிப்படுத்தப்பட்டு அப்பகுதி உதவி அரசாங்க அதிபரினால் மேல் ஒப்பமிடப்பட்ட விடுவிப்பு பத்திரத்துடன் பதிவை மேற்கொள்ளுமாறும் அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார்.

### குழப்பங்களை...

உரையாடினார். இந்த விருந்துபசாரத்திலும் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி கலந்து கொள்ளவில்லை என்பதுடன் ஜனநாயக தேசிய கூட்டமைப்பின் எம்.பி.க்களும் இந்த தேநீர் விருந்துபசாரத்தில் பங்கேற்கவில்லை. இதேவேளை 2012 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு சமரபிக்கப்பட்ட தினத்தில் நாடாளுமன்றத்தில் நடைபெற்ற தாக்குதல் சம்பவம் கண்டிக்கத்தக்கதும் கவலைக்குரியதும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டு. மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்தார். ஆசியாவில் ஆச்சிரியமாக இலங்கையை மாற்றியமைப்பதாக அரசாங்கம் கூறுகின்ற போதிலும் நாடாளுமன்றத்தில் இவ்வாறான ஆச்சரியங்களும் இடம்பெறுகின்றன. இந்த உன்னத சபையில் இது போன்ற சம்பவங்கள் இனியும் இடம்பெறக்கூடாது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

### மணாவரின்...

தினத்தை முன்னிட்டு நேற்றுக் காலை 9.30 மணியளவில் கனகராயன்குள பொதுச்சந்தையிலிருந்து மகாவித்தியாலயத்தை நோக்கி பதாகைகளைத் தாங்கியவாறு விழிப்புணர்வு ஊர்வலத்தை நடத்தினர். இவ்வாறு ஊர்வலம் நடைபெற்றுக்கொண்டிருந்த வேளை திடீரென அவ்விடத்திற்கு வந்த இராணுவத்தினர் தற்போது மாவீரர் வாரத்திற்குரிய காலமாகும். எனவே அது சார்ந்ததாகவா ஊர்வலம் நடைபெறுகின்றதென, பிரதிக் கல்விப் பணிப்பாளர் மற்றும் யுனிசெவ் அதிகாரியிடம் விசாரணைகளை மேற்கொண்டனர். இதன்போது அதிகாரிகள், ஊர்வலம் நடைபெறுவதற்கான நோக்கத்தைத் தெரிவித்தவேளை, எதிர்வரும் காலங்களில் இவ்வாறான ஊர்வலங்கள் இடம்பெற்றால் தம்மிடம் அனுமதி பெறவேண்டும் என்பதுடன், தம்மையும் அழைக்கவேண்டுமெனவும் இராணுவத்தினர் தெரிவித்தனர்.

விழிப்புணர்வு ஊர்வலம் நடைபெறுவதற்கான அனுமதி கனகராயன்குள பொலிஸ் நிலையத்தில் பெறப்பட்டதுடன், ஊர்வலம் நடைபெற்றவேளை, பொலிஸார் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபட்டிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (12)

### சர்வதேச விசாரணை...

சர்வதேச விசாரணை மோசமாக்கவே செய்யும். காணாமல் போனோர் தொடர்பில் தெரிவிக்கப்பட்ட சாட்சியங்களின் அடிப்படையில் விரிவான விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

படைத்தரப்பினரால் கைது செய்யப்பட்டதன் பின்னர் காணாமல் போனதாக உறவினர்களினால் செய்யப்பட்ட முறைப்பாடுகளை அரசாங்கம் உதாசீனம் செய்யக்கூடாது குறிப்பாக, தமது உறவுகள படைத்தரப்பினரால் கைது செய்யப்படுவதை நேரில் கண்ட உறவினர்கள் சிலரால் செய்யப்பட்ட முறைப்பாடுகள் குறித்து கூடுதல் கவனம் செலுத்தப்படவேண்டும்.

அதேவேளை, இலங்கையில் பொதுமக்கள் காணாமல் போகும் சம்பவங்களுடன் அரசாங்கத்திற்கு தொடர்பு இல்லை. தீவிரவாத சந்தேக நபர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ள பூசா தடுப்பு முகாமுக்கு சென்றிருந்த நல்லிணக்க ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளோரை சுதந்திரமான சூழ்நிலையில் சந்திக்கக் கூடியதாக இருந்தது.

இவர்களில் பெரும்பாலானோர் தற்போது விடுவிக்கப்பட்டதுடன், மீதமானோரும் புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்குப் பின்னர் விடுவிக்கப்பட வேண்டும் அல்லது விரைவான சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட வேண்டும். அரசியல்வாதிகள் சிலர் தமது சுயநலன்களை மையப்படுத்தி தேசிய அரசியலில் பாதக நிலைமைகளை ஏற்படுத்த முயற்சிக்கின்றனர். நாட்டின் சகல இன சமூகங்களுக்கும் சமவுரிமை வழங்கப்பட வேண்டியது அவசியமானது எனவும், நாட்டின் எந்தவொரு பாகத்திலும் காணிகளை கொள்வனவு செய்வதற்கு சகல பிரஜைகளுக்கும் உரிமை இருக்கின்றது.

சட்டவிரோத ஆயுதங்களை களைவதற்கு உண்மையான் அர்ப்பணிப்புடன் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என வலியுறுத்தியுள்ள இவ்வறிக்கை, இலங்கையை மும்மொழி நாடாக மாற்று வதற்குரிய் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட வேண்டும் எனத் தெரிவித்துள்ளது. அத்துடன், இலங்கையில் தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்த மொழிப்பிரச்சினைகளுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும்.

சரியான பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொள்ளாது 2002 ஆம் ஆண்டில் கைச்சாத்திடப்பட்ட போர் நிறுத்த ஒப்பந்தம் ஒரு தவறான செயற்பாடு என இவ்வறிக்கை குறிப்பிடுகின்றது.

அரசாங்கம் அவசரமாக சட்ட மூலங்களை நிறைவேற்றக் கூடாது எனவும், சகல சந்தர்ப்பங்களிலும் உச்ச நீதிமன்றத்தின் அனுமதியுடன் மட்டும் சட்ட மூலங்களை நிறைவேற்ற முடியாது எனவும் இவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, இலங்கையின் உள்விவகாரம் தொடர்பிலான பிரச்சினைகளுக்கு சர்வதேச ரீதியான தீர்வுத்திட்டம் அவசியமில்லை எனவும், உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் எனவும் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

# சுகவலுவியல் சிகிச்சை சாவகச்சேரியில் ஆரம்பம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சுக வலுவியல் சிகிச்சைப் பிரிவு ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. இவ்வைத்தியசாலையில் இரண்டு வைத்திய நிபுணர்கள் புதிதாக நியமனம் செய்யப்பட்டுள்ளதை அடுத்து யாழ். மாவட்டத்தில் முதல் முறையாக இச்சிகிச்சைப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் 35 வயதிற்கு மேற்பட்ட பெண்களுக்கு ஏற்படும் பல்வேறு நோய்களுக்கு சிகிச்சை அளிக்கப்படவுள்ளதாகவும் குறிப்பிட்ட வயதிற்கு மேற்பட்ட பெண்கள் இச்சிகிச்சையைப் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (உ-11)

### மீள் குடியேறிய...

மின் விநியோகம் முற்றாக வழங்கப்படவில்லை எனவும் மின் கம்பங்கள் பொருத்தப்பட்ட பகுதிகளுக்கு இணைப்புக்களை வழங்கவும் இணைப்புக்கள் வழங்கப்பட்ட பகுதிகளுக்கு பாவனை இணைப்புக்களை வழங்கவும் முடியாத நிலையில் உபகரணங்களின் பற்றாக்குறை நிலவுவதையும் சுட்டிக்காட்டினார். அத்துடன் வன்னியில் 3500 குடும்பங்களுக்கு உடனடியாக இணைப்புக்களை வழங்க வேண்டியுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, இலவச மின் விநியோகம் இடைநிறுத்தப்பட்டதாக வெளியான தகவல்கள் குறித்து நாடாளுமன்ற உறுப்பினர், அமைச்சரின் கவனத்துக்கு கொண்டு வந்தார். இதற்கு பதிலளித்த மின்சக்தி அமைச்சர் சம்பிக்கரணவக்க ஏற்கனவே அறிவிக்கப்பட்டதன் படி மீள்குடியேறிய மக்களுக்கு ஓராண்டுக்கான இலவச மின்விநியோகம் நடைபெறும் எனவும் இவ் ஆண்டின் முடிவுக்குள் சாத்தியப்பாடான பகுதிகளுக்கு மின்விநியோகத்தை விரைவுபடுத்த முடியும் எனவும் ஏனைய பகுதிகளுக்கும் செயற்பாட்டை விரைவுபடுத்துவதாகவும் உறுதியளித்தார். (29)

### வளலாய்...

1326 அங்கத்தவர்கள் உள்ளனர். எனவே இவர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளையும், வாழ்வாதார திட்டங்களையும் மேற்கொள்ளுமாறு அரச அதிபர் கேட்டுக்கொண்டார். அப்பகுதியில் உள்ள சில வீடுகள் முற்றாக அழிக்கப்பட்ட நிலையிலும், கூரை இல்லாமலும், பாதி அழிவுற்ற நிலையிலும் காணப்படுகின்றன. மக்கள் மீண்டும் குறித்த பகுதியில் குடிமர்த்த என்ரிப் நிறுவனம் 5 மில்லியன் ரூபா நிதியை தருவதாகக் கூறியபோதும் ஏனைய நிறுவனங்கள தற்காலிக மலசலகூடம், தண்ணீர், உணவு வகைகள், மருத்துவ வசதிகள் என்பவற்றை வழங்க முன்வரவேண்டும்.


மேலும் மீள் குடியமர்த்தப்படவுள்ள மக்களுக்கு 6 மாதகால உலர் உணவு, போக்குவரத்து சேவை, பாடசாலை, அஞ்சல், சுகாதாரம் வீதி திருத்த வேலைகள் போன்ற நடவடிக்கைகளையும் ஒழுங்கமைக்குமாறும் அரச அதிபர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுறித்தியுள்ளார்.(எஸ்)

### முழுமையான...

இதன்போது பல்வேறு கருத்துக்களை முன்வைத்தனர். இதேவேளை நேற்று முன்தினம் இடம்பெற்ற அமைதியின்மைக்கு எதிர்கட்சியே பொறுப்பேற்கவேண்டும் என சபை முதல்வரும், அமைச்சருமான நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

### செய்திப்பரணம்

**வரவுசெலவுத் திட்டங்கள் வருடாவருடம் வந்துபோகும்**
**மரபென்ன மேற்செலவு மிச்சமில்லை - தரவுகள்**
**குறைநிரப்ப சுத்துமாத்து குவலயமெலாம் கடன்பழு**
**நிறையாதல், மிச்சமீட்டு நேரா!**



# யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பட்ஜட்டில் திட்டங்கள் எதுவும் இல்லை



(கொழும்பு)

வரவு செலவுத்திட்டத்தின் மூலம் யுத்தத்தால் பாதிக்கப்பட்டோருக்கு எந்த வித நலன்களும் ஏற்படாது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமசந்திரன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் ஜனாதிபதியால் சமர்ப்பிக்கப்பட்ட 2012 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்டத்தில்,யுத்தத்தில் பாதிக்கப்பட்டோருக்கு மறுவாழ்வு அளிக்கக்கூடிய திட்டங்கள் இடம் பெறவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார். தேசியப் பாதுகாப்பிற்காக பாரியளவில் பணம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளமை தற்போது அவசியம்தானா எனக் கேள்வி எழுப்பியுள்ள அவர், இதன் மூலம் நாடு இராணுவ மயமாக்கலை நோக்கி நகர்கின்றது என்பது தெளிவாக புலப்படுவதாகவும் தெரிவித்துள்ளார்.

# ஆ.சி.நடராசா காலமானார்



(யாழ்ப்பாணம்)

வயாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தின் முன்னாள் அதிபரும் யாழ்.தினக்குரல் பத்திரிகையின் முன்னாள் பொது முகாமையாளரும், சமூகசேவையாளருமாகிய ஆ.சி.நடராசா நேற்று அதிகாலை காலமானார்.

தனது வாழ்வுக் காலத்தில் பல்வேறு சமூக சேவைகளை முன்நின்று ஆற்றிய இவர் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் துயர் துடைப்பதற்கும் அயராது உழைத்தவர். குரும்பசிட்டியின் பழம்பெரும் கல்விப் பாரம்பரியத்தின் தொடர்ச்சியாக பிரகாசித்த ஆ.சி.நடராசாவின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு அனுதாபம் தெரிவித்து சிவத்தமிழ் மானிட விடியற் கழகம் உட்பட பல்வேறு பொது அமைப்புக்கள் அறிக்கைகளையும், பிரசுரங்களையும் வெளியிட்டுள்ளன.

## மீன் வியாபாரி கடத்தல்

கொழும்பு ஒருகொடவத்த பிரதேசத்தில் வைத்து நேற்றுக் காலை மீன் வியாபாரியொருவர் கடத்தப்பட்ட மைக்கு எதிர்ப்புத் தெரிவித்து தெமட்டகொட சந்தியில் வியாபாரிகள் குழுவினரால் ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

லலித் (வயது-41) என்ற வியாபாரியே இனந்தெரியாத நபர்களால் கடத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்

## துப்பாக்கி மீட்பு

மட்டக்களப்பு - ஆயித்திய மலை - உன்னிச்சை குளம் பிரதேசத்தில் உள்ள வனப்பகுதியில கற்குகை ஒன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 14 தன்னியக்க கைத்துப்பாக்கிகள் பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

ஆயித்தியமலை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உள்ளிட்ட குழுவினர் நேற்று முன்தினம் மாலை மேற்கொண்ட விசேட தேடுதல் நடவடிக்கை யின் போது இவை கண்டுபிடிக்கப் பட்டிடுள்ளன.

இது தொடர்பில் சந்தேகநபர்கள் எவரும் கைது செய்யப்படாத நிலையில் ஆயித்தமலை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றன

# பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் 893 பேர் தடுப்பில் உள்ளனர்

(கொழும்பு)

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தற்போது 893 பேர் மட்டுமே தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக அரசாங்கம் அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது.

நாடாளுமன்றத்தில் நேற்று ஐ.தே.க உறுப்பினர் தயாசிறி ஜயசேகர எழுப்பிய கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த அரசாங்க கொரடாவான அமைசசர் தினேஸ் குணவரத்தன இந்தத தகவலை வெளியிட்டுள்ளார்.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள 893 பேரில் 64 பேருக்கு எதிராகவே வழக்குத்தாக்கல் செய்யப பட்டுள்ளது.

குற்றப் புலனாய்வுப் பிரிவின் விசாரணைகளின் பின்னர் தடுப்புக காவலில் உள்ளோருக்கு எதிராக மேல் நடவடிக்கை எடுக்கப்படும். பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப் பட்டிருந்த 10 பேர் அண்மையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

ஆரம்பக்கட்ட சட்ட நடவடிக்கைக்காக 259 பேரின் விபரங்கள் சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, குமரன் பத்மநாதன், கருணா, ஜோர்ஜ் மாஸ்ரர், தயா மாஸ்ரர் ஆகியோருக்கு எதிராக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தயாசிறி ஜயசேகர கேள்வி எழுப்பினார்.

அதற்கு அமைச்சர் தினேஸ் குணவர்த்தன, சட்டமா அதிபர் திணைக்களத்தின் வழிகாட்டுதலின்படி நடவடிக்கை எடுக்கப் படும் என்று பதிலளித்தார்.

அரசியலமைப்பு விதிகளின் படி ஜனாதிபதியின் பொது மன்னிப்பை பெறுவதற்கும் இடமுண்டு என்றும் அவர் மேலும் கூறினார்.

# சாதாரண தர அனுமதி அட்டைகளை துரிதமாக விநியோகிக்க நடவடிக்கை

(கொழும்பு)

கல்விப் பொதுத் தராதர சாதாரணதரப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகளைத் துரிதமாக விநியோகிப்பதற்கு தபால் சேவைகள் அமைச்சு புதிய திட்டங்களை எடுத்துள்ளது.

கல்வி பொதுத் தராதர சாதரண தர பரீட்சைக்கு தோற்றும் பரீட்சார்த்திகளின் அனுமதி அட்டைகள் மற்றும் பரீட்சையுடன் தொடர்புடைய ஏனைய ஆவணங்களையும் துரிதமாக விநியோகிப்பதற்கு விசேட திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளதாக தபால சேவைகள் அமைச்சு தெரிவித்துள்ளது.

அனுமதி அட்டைகள் வழங்குவதில் நிலவிய பிரச்சினைகள் காரணமாகப் பரீட்சார்த்திகள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொண்டதாக அமைச்சு சுட்டிக் காட்டியுள்ளது.

புதிய திட்டங்கள் காரணமாக இப்பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட்டு பரீட்சார்த்திகளுக்கு உரிய ஆவணங்கள் அனுப்பி வைக்கப்படவுள்ளன.

இதேவேளை, எதிர்வரும் பண்டிகை காலத்தில் ஊதியம் மற்றும் ஓய்வூதியம் தொடர்பான ஆவணங்களையும் துரிதமாக விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கவுள்ளதாக தபால் சேவைகள் அமைச்சு தெரிவித்துள்ளது

# பொன்சேகாவிடமிருந்து தகவல்களை சர்வதேசம் பெறுவதற்கான சாத்தியம்

## அரசு கருதியதாகக் கூறுகிறது விக்கிலீக்ஸ்

(கொழும்பு)

தகவல்களைப் பெற்றுக் கொளவதற்காக முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவை சர்வதேச சமூகம் பயன்படுத்திக் கொள்ளக் கூடுமென அரசாங்கம் கருதியதாக விக்கிலீக்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது.

இறுதிக் கட்ட யுத்தம் தொடர்பான தகவல்களை திரட்டுவதற்கான தகவல் வளமாக பொன்சேகா பயன்படுத்தப்படக் கூடிய சாத்தியம் குறித்து அரசாங்கம் கூடுதல் கவனம் எடுத்துக் கொண்டதாக அமெரிக்கத் தூதரகம் தெரிவித்துள்ளது.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகம் அந்நாட்டு இராஜாங்கத் திணைக்கத்திற்கு அனுப்பி வைத்திருந்த குறிப்பிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் பற்றீசியா புட்டினாஸ் இதனை அனுப்பிவைத்துள்ளார்.

முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ரோஹித்த போகொலலாகமவுடன் அமெரிக்க தூதரக அதிகாரிகள் நடத்திய சந்திப்பின் போது இந்த விடயங்கள் குறித்து பேசப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சரத் பொன்சேகாவின் நடவடிக்கைகளை உடனடியாக தடுத்து நிறுத்த அரசாங்கம் தீர்மானித்ததாகக் குறிப்பிடப்படுகிறது.

பாதுகாப்புச் செயலாளர் யுத்தக் குற்றச் செயல்களில் ஈடுபட்டரா என்பது குறித்து அறிந்து கொள்ளும் நோக்கில் சரத் பொன்சேகாவிடம் தகவல்கள் திரட்ட முயற்சிக்கப்பட்டதாக தூதரகம் தெரிவித்துள்ளது.

2009 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 2 ஆம் திகதி வெளி விவகார அமைச்சர் போகொல்லாகமவிற்கும் தூதரக அதிகாரிகளுக்கும் இடையில் பேச்சு வார்த்தை நடத்தப்பட்டுள்ளது.

அமெரிக்க அதிகாரிகள் சரத் பொன்சேகாவிடம் யுத்தக் குற்றச் செயல்கள் பற்றி தகவல்கள் திரட்டினால் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளில் பாரிய விரிசல் நிலை ஏற்பட வாய்ப்பிருப்பதாக அமைச்சர் போகொல்லாகம தெரிவித்துள்ளார்.

சரத் பொன்சேகா அமெரிக்கா விஜயம் செய்திருந்த போது தன்னார்வ அடிப்படையில் தகவல்களை வழங்குமாறு அமெரிக்க அதிகாரிகள் சரத் பொன்சேகாவிடம் கோரியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கையில் மோசமாக அழிவடைகிறது ஜனநாயகம்

## என்கிறது ஐ.தே.க.

(கொழும்பு)

தமது கருத்துக்களை தெரிவிப்பவர்கள் மீது தொடர்ச்சியாக தாக்குதல் மேற்கொள்ளப்படும் நிலையில், தமக்கு எதிர்க்கட்சி வேண்டும் என அரசாங்கம் கூறுவதன் உண்மைத் தன்மை குறித்து சந்தேகம் ஏற்படுவதாக ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

இந்நாட்டில் ஜனநாயகம் மோசமாக அழிவடைந்து வருகிறது என்பதை நாம் வலியுறுத்த வேண்டியிருக்கிறது என கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் வரவுசெலவுத் திட்ட உரையின்போது அமைதியாக ஆர்ப்பாட்டம் செய்த ஐ.தே.க. உட்பட எதிர்க்கட்சியினர் மீது அரசாங்கத் தரப்பு உறுப்பினர்கள் மேற்கொண்ட தாக்குதல் இதற்கு புதிய உதாரணமாகும்.

ஜனாதிபதியும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைவருமான ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முன்னிலையில் எதிர்க்கட்சி எம்.பிகள் தாக்கப்பட்டனர். இது ஒரு ஜனநாயக நாடு. மாறாக இடி அமீன், பொகாஸா (மத்திய ஆபிரிக்க குடியரசின் முன்னாள் தலைவர்), கேணல் கடாபி ஆகியோரின் பாணியிலான ஆட்சிமுறைமை கொண்ட நாடல்ல என கரு ஜயசூரிய மேலும் தெரிவித்தார்.

# யாழில் பெண் பொலிஸார் ஆள் திரட்ட ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் உள்ள பொலிஸ் நிலையங்களில் காணப்படும் பெண் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கான பணி வெற்றிடத்திற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி குமாரசிங்க தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 28, 29, 30 ஆம் திகதிகளில் மேற்படி பதவிக்கான நேர்முகத் தேர்வு யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் காலை 8.00 மணிமுதல் மலை 5.00 மணிவரை இடம்பெறவுள்ளது.

இப்பதவிகளுக்கான கல்வித்தகைமையாக க.பொ.த சாதாரண தரத்தில் கணிதம் உட்பட 6 பாடங்களும், க.பொ.த. உயர்தரத்தில் ஏதாவது 3 பாடங்களில் விசேட சித்தி அடைந்திருப்பதுடன் ஆகக் குறைந்தது 5 அடி 4 அங்குலம் உயரம் உடையவராகவும் இருத்தல் வேண்டும் என மேலும் தெரிவித்தார். (116)

# சம்பள உயர்வு விடயத்தில் ஏமாற்றப்பட்டுளோம்

## விரிவுரையாளர் சங்கம் தெரிவிப்பு

வரவுசெலவுத்திட்ட அறிக்கையில் அரசாங்கம் உறுதி அளித்தது போன்று சம்பள உயர்வு வழங்கப்படவில்லை என பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக நாளைய தினம் கலந்துரையாட பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் ஒன்றிணைந்த சம்மேளனத்தின் உயர்மட்டக் குழு கூடவுள்ளதாக அதன் தலைவர் கலாநிதி நிர்மால் ரஞ்சித் தேவசிறி தெரிவித்தார்.

அக்கூட்டத்தின் போது, எடுக்கப்பட வேண்டிய அடுத்தக் கட்ட நடவடிக்கைகள் குறித்து முடிவெடுக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

வரவு - செலவுத் திட்டத்தில் சம்பள உயர்வு வழங்கப்படும் என ஜனாதிபதி தமக்கு அளித்த வாக்குறுதியை அடுத்தே கடந்த காலத்தில் மேற்கொள்ளப்பட்ட தொழிற்சங்க நடவடிக்கை கைவிடப்பட்டதாகவும் சுட்டிக்காட்டிய அவர் தாம் தெளிவாக ஏமாற்றப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

## நிலைமைகளை நேரில் பார்வையிட புலம்பெயர் மக்களுக்கு அழைப்பு

(பிரித்தானியா)

புலம்பெயர் மக்கள் இலங்கை நிலைமைகளை நேரில் பார்வையிட வேண்டுமென பிரித்தானியாவிற்கான இலங்கை உயர்ஸ்தானிகர் கிறிஸ் நோனீஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இலங்கையில் முன்னெடுக்கப் பட்டு வரும் சமூக மற்றும் பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களில் பிரித்தானியா வாழ் இலங்கையர்கள் பங்கெடுக்க வேண்டுமெனவும் அவர் கோரிக்கை விடுத் துள்ளார்.

சில சக்திகளின் ஊடகப்பிரச்சாரங்களுக்கு ஏமாந்து விடாது உண்மையை புரிந்து கொள்ள முயற்சிக்க வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார். பிரித்தானிய வாழ் இலங்கையர்கள் நேரில் சென்று பார்ப்பதன் மூலம் நாட்டின் நிலைமைகளைப் புரிந்து கொள்ள முடியும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 நவம்பர் 23 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.